E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

ஓம் சக்தி

ஏப்ரல் 2020
விலை ரூ.15

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



திருச்சி - அக்கரைப்பட்டியில்

அழகிய தென் ஷீரடி

கு ம ர கு ரு

பொறியியற் கல்லூரி | வணிக மேலாண்மைப் பள்ளி | வேளாண்மைக் கல்லூரி
பன்முகக் கலை அறிவியல் கல்லூரி | சக்தி மேம்பாட்டுக் கல்வி மையம்

ஒழுக்கமே வாழ்வு



"கல்வியைப் போலவே தொழில்களும் கடவுளுக்குச் சமமானவை. படிக்கும் காலத்திலேயே தொழிலுக்கான பயிற்சியை மாணவர்கள் பெறவேண்டும்."

அருட்செல்வர் டாக்டர்.நா.மகாலிங்கம்



குமரகுரு பன்முக கலை அறிவியல் கல்லூரி

KCLAS KUMARAGURU

அடிப்படை அறிவியலிலிருந்து சமூக அறிவியல் வரையும், இலக்கியத்திலிருந்து நுண்கலைவரையும் அனைத்தையும் வழங்கி, சமூக முன்னேற்றத்திற்கான ஆய்வுகளை முன்னெடுத்து, வாழ்நாள் முழுதும் கற்றலில் ஆர்வம் கொண்டு, உலகியலின் போக்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் தனியாத ஆர்வம் கொண்ட இளைஞர்களை உருவாக்கும் கல்வி நிறுவனம்.

குமரகுரு தொழில்நுட்பக் கல்லூரி

150 ஏக்கர் வளாகத்தில் 6000 மாணவர்களுடனும் 400 பேராசிரியர்களுடனும் 34 ஆண்டுகளாக 'ஒழுக்கமே வாழ்வு' எனும் உயர் குறிக்கோளுடன், ஆராய்ச்சியையும் தொழில் இணைவையும் அடிப்டையாகக் கொண்டு தேசிய தர வரிசையில் முதல் நூறு நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

கே.சி.டி. வணிக மேலாண்மைப் பள்ளி

KCT BUSINESS SCHOOL

தொழிலகங்கள் மற்றும் சமூகத்தின் முன்னேற்றத்தில் முனைப்புடன் செயல்படும் இளைய தலைமுறைக்கான தலைவர்களை உருவாக்கும் இந்தியாவின் முதல் 100 நிறுவனங்களில் ஒன்றாகும் கல்வி, மனித வளம், மாணவர்கள் சேவை, ஐ.டி. தொழில்நுட்பம், தொழிலினைவு, சமூக பங்களிப்பு போன்றவைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படும் இணையற்ற நிறுவனம்.

குமரகுரு வேளாண்மைக் கல்லூரி

KUMARAGURU institute of agriculture

தொழில்நுட்பம் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, வேளாண்மையைத் தற்சார்புத் தொழிலாக மாற்றுவதற்குரிய வேளாண்மைக் கல்வியை, கிராமப்புற மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்ட நிறுவனம்.

ஆராய்ச்சி அமைப்புக்கள்

மாணவர் ஆராய்ச்சிகள்

iQube Innovate · Incubate · Incorporate

GARAGE

re KCT'S PLATFORM FOR RESEARCH & EXPLORATION

தொழிலக ஆராய்ச்சிகள்

KUMARAGURU KC.IRI CENTRE FOR INDUSTRIAL RESEARCH & INNOVATION

TECHNOLOGY VISION 2020 TIFAC MISSION REACH

FORGE போர்ஜ்

கே.சி.டி.யின் ஒர் அங்கமான 'போர்ஜ்' வளர்ந்து வரும் நவீனத் தொழில்நுட்பத்தையும், கணினி அறிவியலையும் இணைத்து ரோபோட் தானியங்கிஇயந்திரங்களையும் செயற்கை அறிவூட்டல் கருவிகளையும், டிஜிட்டல் வணிகத்தையும் வளர்த்தெடுத்துப் பல்வேறு தொழில் துறைகளிலும் இந்த நுண்ணறிவுப் பயன்பாட்டைக் கொண்டுசெல்லும் நோக்கில் செயல்படுகிறது.

குமரகுரு கல்வி வளாகம்
சரவணம்பட்டி
கோயம்புத்தூர்

0422 2661100
kct.ac.in
kctbs.ac.in
kclas.ac.in
kia.ac.in



செக்யூலரிசம் மேலை நாட்டுக் கோட்பாடு. ஐரோப்பாவில் ஒரு காலகட்டத்தில் அரசாங்கத்தின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த தேவாலயங்களை விடுவித்து அரசுக்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டது.

அதேசமயம் அரசாங்கத்தால் தேவாலயங்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாமல் அரசாங்கமும் நடந்துகொண்டது.

இங்கிலாந்தில் படித்த நேருஜி, இந்த செக்யூலரிசத்தை நன்றாகத் தெரிந்து கொண்டார். இந்திய அரசியல் சட்டத்திலும் இதை இடம்பெறச் செய்ய வேண்டுமென்று விரும்பினார். ஆனால், அரசியல் சட்டத்தை உருவாக்கிய அம்பேத்கார் நேருஜியின் செக்யூலரிசத்தை ஏற்கவில்லை.

மதத்திற்கு எதிரானது செக்யூலரிசம் எனத் தவறாகப் பொருள் கொள்ளப்பட்டு நாத்திகர்களும், பகுத்தறிவுவாதிகளும் செக்யூலரிசத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள். உண்மையில், செக்யூலரிசம் என்பது மத விரோதமானதல்ல. மதங்களைச் சமத்துவமாக்கிய அணுகுமுறை.

இதனைப் பற்றி அருட்செல்வர் 23 ஆண்டுகளுக்கு முன்பு (1997-இல்) எழுதிய விரிவான கட்டுரையை இம்மாத 'சுரங்கம்' பகுதியில் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

– இ.ஆர்.

சுரங்கம்



டாக்டர் நா. மகாலிங்கம்

செக்யூலரிசத்திற்கு ஒரு திருத்தம் தேவை

நடைமுறை அரசியலில் ஒரு காலத்தில் ஜனநாயக சக்திகள் என்றும், சர்வாதிகார சக்திகள் என்றும் இனம் பிரித்தார்கள். பின்னர் தேர்தல் காலங்களில் முற்போக்குச் சக்திகள் என்றும், பிற்போக்குச் சக்திகள் என்றும் ஒருவரை ஒருவர் சுட்டிக்காட்டிக் கொண்டனர். இப்போது அதிகமாகப் பேசப்படுவது சமயச் சார்பற்ற சக்திகள் என்பதும், மதவாத சக்திகள் என்பதும்தான். இவற்றை Secular Forces and Religious Forces என்று பேசுகின்றனர்.

சமயச் சார்பற்ற சக்திகள் (Secular Forces) என்று அழைக்கப்படுவதற்கான காரணம் என்ன?

செக்யூலரிசம் என்பது நமது அரசியல் சட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது தேசம் ஒரு செக்யூலர் தேசம். ஆட்சி முறையில் நாம் நாடாளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

சமூக அமைப்பு முறையில் சமதர்மத்தைப் பின்பற்றுகிறோம். இதேபோலச் சமய நோக்கில் செக்யூலரிசத்தை அமல்படுத்தி வருகிறோம். செக்யூலரிசத்திற்குச் சரியான ஒரு வரையறையை இதுவரை நாம் வகுத்துக் கொள்ளவில்லை. எதிர்மறையாக ஒரு விளக்கத்தைச் சொல்லி வருகிறோம்.

1947–இல் இந்தியா என்ற நம் நாடு, இந்தியா – பாகிஸ்தான் என இரண்டு தனித்தனி நாடுகளாகப் பிரிந்தது. பாகிஸ்தான் தேசம் தன்னைச் சமய ரீதியில் இஸ்லாமிய தேசமாகவே அறிவித்துக் கொண்டது. இதேபோல நமது நாட்டையும் அறிவிக்க விரும்பியும், விரும்பாமலும் நமது

தலைவர்கள் இருந்ததை வெளிப்படுத்தும் வகையில் நமது அரசியல் சட்டம் 'இந்தியா என்ற பாரதம்' (India that is Bharat) என்று தொடங்கு வதைக் காணலாம்.

பாரதம் என்ற இந்த வார்த்தை இந்தியா முழுமையையும் குறிக்காது. இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் என்ற தேசம் பிரிந்துவிட்டது. மீதி இந்தியாவை, இந்தியா என்று எப்போது அழைத்தாலும் இதற்குரிய சரியான பெயர் பாரதம்தான் என்று அர்த்தப்படுத்தும் வகையில் India that is Bharat என்று அரசியல் சட்டத்திலேயே குறிப்பிட்டுள்ளோம்.

'சிலோன்' என்று ஆங்கிலேயர் வைத்த பெயரை 'ஸ்ரீலங்கா' என்று அந்த நாடு மாற்றிக் கொண்டது. கோல்டு கோஸ்ட் என்ற ஆப்பிரிக்க நாடு தமது பெயரை 'கானா' என்று மாற்றிக் கொண்டது. பம்பாய் என்ற பெயரை 'மும்பை' என்று மகாராட்டிர அரசு மாற்றிக்கொண்டது. ஏன்? இப்போது நமது மாநில அரசும் மெட்ராஸ் என்பதை 'சென்னை' என்று அறிவித்துள்ளது. இதேபோலத்தான் இந்தியா என்ற இந்தப்பெயர், அரசியல் சட்டப்படி 'பாரதம்' என்று அழைப்பதற்கு உரிமை பெற்ற பெயர்.

பாகிஸ்தான் (PAKISTAN) என்ற பெயர் பஞ்சாப் (P), ஆப்கானிஸ்தானம் (A), காஷ்மீர் (K), சிந்துச் சமவெளி (Indus valley) (I) என்ற நிலப் பகுதிகளைக் குறித்து உருவாக்கப்பட்ட பெயர் என்பதைச் சரித்திரம் படிக்கும் மாணவர்கள் அறிவார்கள். ஆனால் 'பாரதம்' என்பது இதுபோல் உருவாக்கப்பட்ட பெயரல்ல.

இந்தியாவை பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியர்கள் உப கண்டம் என்று குறிப்பிடுவதற்கு முன்பாகவே, இதனை 'பரத கண்டம்' என்று நமது முன்னோர்கள், ஏறக்குறைய 5000 ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டுள்ளார்கள். சைவ சதமனு என்கிற வேத காலத்துப் பேரரசன், "திராவிட வர்ஷே – பரத கண்டே" என்று கூறியுள்ளதை நீத்தார் நினைவு நாளின்போது ஈமச் சடங்கில் புரோகிதர்கள் நம்மைச் சொல்லச் சொல்வதைக் கேட்டிருப்போம்.



சுவாமி விவேகானந்தர்

ஆகவேதான் நமது மகாகவி பாரதி, "பாரத நாடு பழம்பெரும் நாடு, நீரதன் புதல்வர் – இந் நினைவகற்றாதீர்" என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

சிகாகோ – சர்வ சமய மாநாட்டில் பேசிய சுவாமி விவேகானந்தர், "உலகச் சமயங்கள் அனைத்தையும் சகித்துக் கொள்கிறோம் என்பது கூடச் சரியில்லை, அனைத்தையும் சமமாக மதித்து ஏற்றுக் கொள்கிறோம்" என்று பிரகடனம் செய்தார். "ஓர் இந்தியன் நடந்து செல்கையில் – தனியொரு இந்தியனாக மட்டும் அவன் செல்லவில்லை. அவன் பின்னால் 5000 ஆண்டுக் கலாச்சாரம் அணிவகுத்து வருகிறது" என்றும் அவர் கூறினார்.

சுவாமிகள் அனைத்துச் சமயங்களையும் சம நோக்கில் பார்த்தார். ஓர் இந்துச் சந்நியாசியாக இருந்தே அவ்வாறு நோக்கினார் என்பது சிந்திக்கத்தக்கது. ஆகவே, பாரதம் என்பது பழம்பெரும் பெயராக இருந்தாலும், இதனைச் சரித்திரப் பெயர் என்பதைவிட, கலாச்சாரப் பெயர் என்பதே சரி.


அப்படியானால், பாரதக் கலாச்சாரத்தின் நதி மூலம் எது?

பாகிஸ்தான் என்பதும் சரித்திரப் பெயர் என்பதைவிட – அரசியல் ரீதியில் ஆக்கப்பட்ட பெயர் என்பதைவிட – கலாச்சார ரீதியில் உருவாக்கப்பட்ட பெயர்.

கலாச்சாரம் என்றால் எந்தக் கலாச்சாரம்? இதற்கு மூலமாக உள்ளது எது? சமயம்தான். இஸ்லாமிய சமயத்தின் அடிப்படையில் பாகிஸ்தானம் என்ற தேசம் தன்னை வழிநடத்திக் கொள்ளுமாறு, உரிய கோட்பாடுகளை அது வகுத்துக் கொண்டுள்ளது.

அது Secular State அல்ல, அதற்கு மாறாக Theocratic State. அதாவது, அந்த அரசுக்கு என்று ஒரு சமயம் உள்ளது. இஸ்லாம் அதனுடைய தேசிய சமயம். உருது அதனுடைய தேசிய மொழி.

இதேபோல பாரத நாட்டிற்கென்று ஒரு தேசிய மதத்தை நாம் அறிவிக்கவில்லை. அதற்கு மாறாகத்தான் 'செக்யூலர்' என்ற வார்த்தையை உபயோகித்துள்ளோம்.




டாக்டர்
ஜாகிர் உசேன்



சர்தார்
வல்லபாய் படேல்



டாக்டர்
அம்பேத்கர்



நேருஜி

பாகிஸ்தான் பிரிவினையை காந்தியடிகள் கடைசி வரை விரும்பவில்லை. தமக்கு ஏற்பட்ட தனிப்பட்ட தோல்வியாகவே அதனைக் கருதி ஒப்புக் கொண்டார்.



பாரதியார்

பாகிஸ்தான் பிரியாமல் இருந்திருந்தால், இந்த செக்யூலர் என்ற கோட்பாட்டிற்குப் பொருள் ஏற்பட்டிருக்கும். பாகிஸ்தான் பிரிந்த பிறகும் செக்யூலர் என்ற கோட்பாட்டைப் பின்பற்றியதற்குக் காரணம், சர்தார் படேலின் அகால மரணமும், நேருஜியின் நீண்ட வாழ்வும்தான் என்பதை நூலாக வெளிவந்துள்ள சர்தார் அவர்களின் கடிதங்களைப் படித்தவர்கள் அறிவார்கள்.

ஏறக்குறைய இந்த 50 ஆண்டுகளாக நாம் செக்யூலரிசம் என்ற கோட்பாட்டைப் பின்பற்றி வந்துவிட்டோம். நடைமுறைப்படுத்தியும் வந்து கொண்டிருக்கிறோம். கல்விமான் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களும் மேதகு பக்ருதீன் அலி அகமது அவர்களும் இந்தியாவின் ஜனாதிபதிகளாக இருந்துள்ளனர்.

லண்டனில் முதல் வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொண்ட டாக்டர் அம்பேத்கர், "இந்தியாவில் இந்து – முஸ்லீம் என்ற இரண்டு பிரிவுகள் மட்டுமல்ல, மூன்றாவது பிரிவு ஹரிஜன்கள்" என்று வாதிட்டார். இரண்டாவது, மூன்றாவது வட்ட மேஜை மாநாடுகளில், இந்துக்களுக்குள்ளேயே ஹரிஜன்களும் இருப்பதாக வாதங்கள் வைக்கப்பட்டு இந்து – முஸ்லீம் என்ற இரு பிரிவுகள் மட்டுமே பேசப்பட்டன.

செக்யூலரிசம் என்ற இந்தக் கோட்பாடு நமது நாட்டில் இப்போதும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மத்திய அரசாக இருந்தாலும் – மாநில அரசாக இருந்தாலும் குறிப்பிட்ட ஒரு மதத்திற்கு ஆதரவாகச் செயல்படக்கூடாது என்பதே இக்கோட்பாட்டின் நோக்கம்.

குறிப்பிட்ட ஒரு மதம் என்பது எந்த மதம்?

அது இந்து மதம்தான். நமது நாட்டைப் பொறுத்த அளவுக்கு, இந்து மதம் பெரும்பான்மை மக்களின் மதம். ஏறக்குறைய 90 கோடி மக்களில் 75 சதவிகித மக்கள் – 76 கோடிப் பேர் – இந்துக்கள். மீதியுள்ளவர்களில் 12 கோடிப்பேர் இஸ்லாமியர்கள். 3 கோடிப்பேர் கிறிஸ்தவர்கள். இதுவல்லாமல் அகாலிகள், பௌத்தர்கள், ஜைனர்கள் என்ற பல்வேறு சமயத்தார்களும் உள்ளனர்.

மதங்களைப் பின்பற்றுகிற மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் பெரும்பான்மை – சிறுபான்மை என்று பார்க்காமல், எல்லா மதங்களையும் ஆட்சி செய்யும் அரசு சமமாக நடத்த வேண்டும். சிறுபான்மை மதத்தினர் அச்சமில்லாமல் இருப்பதற்கான பாதுகாப்புகளையும் சலுகைகளையும் நமது அரசியல் சட்டம் வகுத்துள்ளது. பெரும்பான்மை மதத்தாருக்குச் சமமாகச் சிறுபான்மையினரும் வாழ வேண்டும் என்ற பெருநோக்கில்தான் இந்தப் பாதுகாப்புகளும் உரிமைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் நோக்கினால், செக்யூலரிசம் என்பதைச் சமய சமத்துவம் உள்ள ஆட்சி என்றுதான் அழைக்க வேண்டும். ஆனால், மதச் சார்பற்ற ஆட்சி என்று தவறுதலாக அழைக்கிறோம்.

மதச்சார்பற்ற என்கிறபோது – ஏதோ ஒரு குறிப்பிட்ட பெரும்பான்மைச் சமயத்தின் சார்பற்ற என்ற ஒரு பொருளில் இது புரிந்து கொள்ளப்பட்டு, இந்து மதத்திற்கு எதிரான கோட்பாடாகப் பயன்படுமளவுக்கு இது போய்விட்டது.

பொருளாதாரச் சமத்துவம் போல, செக்யூலரிசம் என்பது சமய சமத்துவம் – இதனைத்தான் எதிர்மறையாக "சமயச் சார்பற்ற" என்று கூறினோம். ஆனால் "சமயச் சார்பற்ற" என்பதைச் சமய எதிர்ப்பாக, இறை நம்பிக்கை இல்லாதவர்கள் உபயோகித்துக் கொள்ளுமாறு இக்கோட்பாடு ஆக்கப்பட்டு வருகிறது.

மலேசியா நாட்டின் அரசு இஸ்லாமிய அரசுதான். ஆனால், அங்குள்ள மக்கள் அனைவருமே இஸ்லாமியர்கள் அல்ல. ஆனால், மதங்களில் உள்ள மக்களின் எண்ணிக்கை அடிப்படையில் அங்குள்ள சமய நிறுவனங்களுக்கு நிதி உதவி கூட அரசு வழங்குகின்றது.

அங்கே 50 சதம் இஸ்லாமியர் உள்ளனர். 30 சதம் சீனர்கள் உள்ளனர். 15 சதம் தமிழர்கள் உள்ளனர். இந்த அடிப்படையில் அரசே அவர்



களுக்கு அரசு நிதியிலிருந்து மசூதிகளை, புத்த விகாரங்களை, இந்துக் கோவில்களைக் கட்டிக் கொள்வதற்கு நிதி உதவி செய்து வருகிறது.

இதுதான் செக்யூலரிசம், சமய சமத்துவம். சமயச் சார்பற்ற நிலை அல்ல இது. இதுபோல நம் நாட்டில் இல்லை. சமய நெறிப்படி வாழ விரும்புகிற மக்களுக்கு, அதேபோல வாழ்வதற்குரிய ஏற்பாடு களைச் செய்து கொடுப்பதுதான் ஒரு நல்ல அரசியல் கடமையாகும்.

நமது கல்வி நிலையங்களில் – இந்துக்கள் நடத்துகின்ற கல்வி நிலையங்களில்கூட – இந்து சமயத்தை, பக்தி இலக்கியங்களை, சைவ – வைணவ சித்தாந்தங்களை, அத்வைத – துவைதத் தத்துவங்களைச் சிறு வயதிலிருந்தே மாணவர் களுக்குப் போதிக்க முடியாது.

ஏனெனில் இது சமயக் கல்வி. அதுவும் பெரும்பான்மையாகவுள்ள இந்து சமயக் கல்வி. இதனை நமது அரசியல் சட்டம் தடுக்கிறது.

ஆனால், அதே நேரத்தில் அரபுக் கல்லூரி களில் குழந்தைகள் குரானை ஓதுமாறு, இஸ்லா மியக் கல்வி தரப்படுகிறது. கிறிஸ்தவக் கல்வி நிலையங்களில் பைபிள் பற்றிய சமயக் கல்வி தருவதற்குத் தடையில்லை. பஞ்சாபில் சீக்கிய சமயக் கல்வியை அங்குள்ள கல்வி நிலையங்கள் குழந்தைப் பருவத்திலேயே தர முடிகிறது.

செக்யூலரிசம் என்பது இங்கே இந்து சமயத் திற்கு மட்டும் விரோதமானதாக மாறிவிட்டது. இதனை மாற்றி நமது அனைத்துக் கல்வி நிலை யங்களிலும் – குறிப்பாகப் பெரும்பான்மையினரின் கல்வி நிலையங்கள் – இந்து மதத்தைப் பற்றி மட்டுமல்ல, அனைத்துச் சமயங்களைப் பற்றியும் மாணவர்களுக்குப் போதனைகள் தரப்படுமானால், அதில் தவறில்லை.

குழந்தைப் பருவத்திலிருந்தே இதுபோலச் சகல சமயங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற் கான சந்தர்ப்பம் இருக்குமானால், ''ஒன்று பரம் பொருள்'', ''ஒன்றே தேவன்'', ''தேரே அல்லா ஏ பகவான்'' என்ற அணுகுமுறை, நமது சிந்தை அணு ஒவ்வொன்றிலும் இடம்பெற முடியும்.

ஸ்ரீலங்காவில் இந்து சமயம், பௌத்தம், கிறிஸ் தவம், இஸ்லாம் ஆகிய அனைத்துச் சமயங்களும் அனைத்துக் கல்வி நிலையங்களிலும் போதிக்கப் படுகின்றன.

இதேபோல் நமது அரசும் சமய, சமத்துவ அரசாக அமைய வேண்டும். நமது பாரதக் கலாச்சாரம் பிரதிபலிக்க வேண்டுமானால், ஆன் மிகத்தைப் போற்றி வளர்க்கும் அரசாக நமது அரசு அமைவது வரவேற்கத்தக்கது.

ஏனென்றால், அமெரிக்க நாட்டில் அவர் களுடைய ''டாலர்'' கரன்சியில்கூட ''கடவுளை நாங்கள் நம்புகிறோம்'' என்று அச்சடித்துள்ளனர். ஆனால், நம்முடைய ரூபாய் கரன்சியில் நமது தேசிய மொழிகளில் ரூபாய் மதிப்பைக் குறித்துள் ளோமே தவிர, அதுபோல் கடவுள் நம்பிக்கை பற்றி அச்சடிக்கவில்லை.

அமெரிக்க தேசம் கண்டுபிடிக்கப்படுவதற்கு 5000 ஆண்டுகளுக்கு முன்பு வேதங்களையும், உபநிடதங்களையும் கொண்ட தேசம் நமது தேசம். ஓயாத ஞானத் தேடல்களில் ஈடுபட்ட ரிஷிகள் நமது ரிஷிகள். ஆனாலும் நமது ரூபாய் கரன்சி, டாலர் கரன்சி போல் இல்லை. சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம், சௌரம், சாக்தம் என்ற இந்து சமயத்தின் ஆறு பிரிவுகளும், மேலும் ஜைனம், பௌத்தம், சீக்கியம் முதலிய சமயங் களும் இங்கே உள்ளன.

இவற்றை முறையாகப் படித்து அந்தந்தச் சமயக் கோவில்களை நிர்வகிப்பதற்கு இன்றைய இந்தியாவில் வாய்ப்பில்லை. ஆனால் ''வக்ஃப் போர்டு'' என்ற சமய அமைப்பு இதுபோன்ற காரியங்களை இஸ்லாம் சமயத்திற்கு முறையாக ஆற்றி வருகிறது.

இதேபோல அகில இந்திய ''ஹிந்து வாரியம்'' ஒன்றை அமைத்து இந்து சமய நிறுவனங்கள் அனைத்தையும் நிர்வாகம் செய்யும் சூழ்நிலை அமைய வேண்டும். இறை நம்பிக்கை உடையவர் களே இதுபோன்ற நிர்வாகங்களில் இடம் பெற்றி ருக்க வேண்டும். இவற்றை எல்லாம் மனதில் கொண்டு அரசியல் சட்டத்தில் இதற்குத் தக்கபடி மாறுதல்கள் செய்யலாம்.

இது தொடர்பாக சர். சி.பி. இராமசாமி ஐயர் தலைமையில் ஒரு குழு திருமதி. இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக இருந்தபோது அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையை அரசு இப்போது வெளியிட வேண்டும். சமய சமத்துவம் என்பதைப் பெரும்பான்மைச் சமுதாயம் ஏற்றுக் கொண்டு, சமயம் இல்லாத நிலையை உருவாக் கும் இன்றைய சூழ்நிலையை மாற்றி அமைக்க, நம் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை உள்ளவர் கள் பாடுபட முன்வர வேண்டும்.

மனோதத்துவ மேதைகளின் கூற்றுப்படி ''எண் ணத்தில் எது உள்ளதோ, அதுதான் செயலாக மாறும்.'' எண்ணத்தில், எல்லாச் சமயங்களும் சமுத்திரத்தை நோக்கிப் பாயும் நதிகளைப் போல் தான் என்று விதைக்கப்பட்டுவிடுமானால், விதைக்கப்பட்டதே நாளை அறுவடையாகும். ●



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 8

இளமை நிலையாதது; யாக்கையும், உடம்பும் நிலைக்காது என்று நிலையாமை கூறிய திருமூலர், அறம் கூறத் தொடங்குகிறார். திருவள்ளுவர் கூறியது போலப் புலால் மறுத்தல், பிறன் மனை நயவாமை, கள்ளுண்ணாமை ஆகியவற்றை எதிர்மறைமுகமாகவும், தானச்சிறப்பு, அன்புடைமை, அரசர் கடமை ஆகியவற்றை உடன்பாட்டுமுகமாகவும் மிக அழகாக விளக்குகிறார்.

கொல்லாமை : எந்த உயிர்ப் பிறப்பையும் கொல்லாமல் இருப்பது கொல்லாமையாகும். உடம்பினுள் உயிரைப் புகுத்தத் திறமையில்லாத நாம், உடம்பினுள் உள்ள உயிரைப் பிரிக்கலாமா? இப்படிப் பிரிக்க நமக்கென்ன உரிமை இருக்கிறது? இப்படிப் பிரித்தால், எமனுடைய தூதர்கள் நம்மைப் பிடித்துத் தீவாய் நரகில் தள்ளுவார்கள் என்று எச்சரிக்கிறார் திருமூலர்.

“கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றால்கட்டிச்
சொல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே”
(197)

என்று கூறும் திருமூலர், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய வள்ளல் பெருமானுக்கு வழிகாட்டியாக நிற்கிறார். புலால் உண்பதுதான் உயிர்க் கொலை செய்வதற்கு அடிப்படை. எனவே, புலால் உண்ணக்கூடாது என்கிறார்.

“அவிசொரிந் தாயிரம்
வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று” (259)

என்றும், “ஒன்றாக நல்லது கொல்லாமை” என்றும் திருவள்ளுவர் கூறியது போலத் திருமூலரும் ‘பொல்லாப் புலால்’ என்றும், அதை உண்பவர் புலையர் என்றும் குறிப்பிடுகிறார்.

புலால் உணவைப் “பொல்லாப் புலால்” என்று மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் திருமூலர் கூறியிருப்பது விஞ்ஞானி பின்னே அறிவதை மெய்ஞ்ஞானி முன்னரே உணர்வான் என்பதைக் காட்டுகிறதல்லவா!

பொல்லாப் புலாலை உண்பவர்தான் கீழ் மக்கள். அவர்கள்தான் புலையர். அவர்களை எம தூதர்கள் தண்டிப்பார்கள். இரும்பைத் துரு அரிப்பதுபோல, துணியைக் கரையான் அரிப்பது போல, இந்தப் புலையர்களை எமதூதர் அரிப்பார்கள். எரிவாய் நரகத்தில் மல்லாக்கத் தள்ளித் துன்பப்படுத்துவார்கள் என்கிறார் திருமூலர்.



திருமூலர்

எல்லா உயிரும் இறைவன் ஆலயம். எனவே, பிற உயிர்களைக் கொன்று தின்பது மன்னிக்க முடியாத பாவம். “உயிர்க் கொலையும் புலைப்புசிப்பும் உடையவர்கள் எல்லாம் உறவினத்தார் அல்லர். அவர் புற இனத்தார்” என்பார் வள்ளலார். அவர்களுக்குப் பசிக்குச் சோறு போடலாமே தவிர, வேறு எதுவும் செய்யக்கூடாது என்பது அவர் கட்டளை. திருக்குறளைப் பேசிக் கொண்டு புலால் உண்பது எவ்வளவு தவறோ, திருமந்திரம் படித்துவிட்டுப் புலால் உண்பதும் அவ்வளவு தவறாகும்.

தொடர்ச்சி : 13-ம் பக்கம்



"கே.பி.ஆர்.
ஒரு குவி மையம்.
இத்தகைய ஒருவர்
கோவை மாநகரில்
இருக்கிறார் என்பது
உண்மை.
இன்றைய
நவீன கால
விளம்பர
வெளிச்சத்தைக்
கண்டால் கூசிப்
போவார், குறுகிப்
போவார், குனிந்தே
நகர்ந்துவிடுவார்."

கே.பி.ஆர்.

கோவை மாநகரில் PSG., LMW, ABT, UMS, LGB என விரிந்த புகழ்பெற்ற நிறுவனங்கள், சொல்வதற்கு வாய்க்கு அடக்கமாய் மூன்று ஆங்கில எழுத்துக்களில் சுருக்கி மக்களால் உச்சரிக்கப்படுவதைக் கேட்கிறோம்.

அந்தப் பாரம்பரியத்தில் மற்றும் ஒன்றாய்ப் பூத்த நிறுவனம்தான் KPR நிறுவனம். பிரமுகர்கள் மத்தியில் பிரமாதமாக இது பேசப்பட்டுப் பேசப்பட்டு, இப்போது பாமரர் மத்தியிலும் நடவு செய்யப்பட்டுவிட்ட பழமரமாகிவிட்டது.

கே.பி.ஆர். எனும் இந்தக் கனிமரத்தில், கல்லெறிந்தால்தான் கனி விழும் என்பதில்லை. காற்றசைந்தால் போதும், கனி விழும். அப்படி விழுந்த பழங்களைச் சுவைத்தவர்கள்தான் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர்.

அடக்கம் அமரருள் உய்க்கும் என்ற வள்ளுவரின் குறளுக்குக் கே.பி.ஆர். ஒரு குவிமையம். இத்தகைய ஒருவர் கோவை மாநகரில் இருக்கிறார் என்பது உண்மை. இன்றைய நவீன கால விளம்பர வெளிச்சத்தைக் கண்டால் கூசிப் போவார், குறுகிப் போவார், குனிந்தே நகர்ந்துவிடுவார்.

இவரின் பின்புலம் அறிந்தவர்கள் மட்டுமே இவரைப் பிரியத்தோடு அணுகுகிறார்கள். நெருங்கி நேசிக்கிறார்கள். வெள்ளை உடை, வெள்ளை உள்ளம், வெள்ளைப் பேச்சு. மகத்தான சாதனை என்று சமூகம் இவருக்கு வழங்கிய சான்றிதழ் இவருடைய தன்னடக்கத்திற்காகத்தான்.

கே.பி.ஆர். தொழில் நிறுவனங்களுக்கு இவர் உரிமையாளர். கே.பி.ஆர். கல்வி நிறுவனங்களுக்கு உடைமையாளர்.

இவருடைய நூற்பாலைகளில் மற்றும் பொறியியல் நிறுவனங்களில் பணியாற்றுவதற்கு வருகின்ற சுற்றுவட்டாரத்து இளம் பெண்கள், தங்களின் பணிகளையே வாழ்வாதாரமாகக் கொண்டு சம்பாதித்து நாளைய

வாழ்க்கையைத் தொடங்க இருப்பவர்கள்.

கரத்தால் வேலை செய்த அவர்களை, கருத்தால் வளர்க்க விரும்பி, தகுதியுள்ள பெண்களை கே.பி.ஆர். கல்வி நிறுவனங்களிலே படிப்பதற்கும் அனுமதித்து, ஒரே சமயத்தில் அந்தப் பெண்களைத் தொழிற்சாலையில் ஊழியர்களாகவும், கல்விச்சாலையில் மாணவிகளாகவும் மாற்றியவர்.

பாரதியை இவர் படித்திருக்கலாம். மகாகவி பாரதியின் மகத்தான லட்சியமான 'பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்ற அந்தக் கோரிக்கையை நிறைவேற்றிய அவர்கள்தான் இந்த நற்காரியத்தைச் செய்ய முன்வந்தார்.

அவருடைய வேண்டுகோளின்படி ஒடிசா மாநிலம் சென்ற தொழிலதிபர் கே.பி.ஆர். முதல்வர் நவீன் பட்நாயக்கைச் சந்தித்தார். பிறகு **"சாம்பியன் ஆஃப் ஹியூமானிட்டி"** விருது வழங்கி கே.பி. ராமசாமி அவர்கள் போற்றப் பட்டார். இதன் மூலம் கே.பி.ஆர். 'கலிங்கம் வென்றான்' என்ற பட்டத்திற்கு உரியவராகியுள்ளார்.

கே.பி.ஆருடன் கவிஞர் மரபின் மைந்தன் பயணித்து, அந்த அழகு நிகழ்ச்சிகளையெல்லாம் பழகு தமிழில் உலகு தெரிய 'நமது நம்பிக்கை'யில் எழுதிய பிறகுதான் நமக்குத் தெரிந்தது,



மாணவர்களுக்கு மத்தியில் உரையாற்றும் கே.பி.ஆர்.

தளபதியாக கே.பி.ஆர். புகழ்க்கொடி ஏற்றியுள்ளார்.

இவரால் பட்டதாரிகளாக உருவான அந்தப் பெண்கள் ஒருவரா, இருவரா? 20 ஆயிரம் பேர். அதில் ஆச்சரியம், அவர்கள் தமிழ்நாட்டுப் பெண்கள் மட்டுமல்ல, ஒடிசா மாநிலத்துப் பெண்களும் அதில் இடம் பெற்றுள்ளார்கள். அவர்கள் மூலமாகத்தான் ஒடிசா மாநிலத்தில் கே.பி. ஆரின் கீர்த்தி பரவிற்று. கீர்த்தி பரவியதால் அவருக்கு அங்கு கிரீடம் சூட்டிக் கொண்டாட விரும்பினார்கள்.

கலிங்கா நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தை உருவாக்கியவரும், கலிங்கா தொழில்நுட்ப மையத்தின் அதிபருமான பேரா. அச்சுதா சமந்தா எம்.பி. வரலாறு ஒன்று வரவேற்பறைக்கே வந்திருப்பது.

கே.பி.ஆர் அவர்கள், அருட்செல்வர் அவர்களின் அன்புக்குப் பாத்திரமானவர். கே.பி.ஆர். என்றவுடன் அருட்செல்வரின் நெற்றிப் புருவங்கள் வான் நோக்கி விரிந்ததைப் பார்த்திருக்கிறேன். எழுத்து, பேச்சு என்பதற்குப் பதிலாக, செயலும் சாதனையும் என்று தமிழ்ச் சமூகத்திற்கு அஸ்திவாரம் அமைப்பதில் கோபுரம் எழுப்புவதைவிடவும் ஆனந்தம் அடைபவர் கே.பி.ஆர். அவர்கள்.

உண்மையில், கே.பி.ஆர். அவர்கள் நவீனத் தமிழ்ச் சமூகத்திற்குக் கிடைத்துள்ள நமது நம்பிக்கை.

– நாதன்

கட்டுரை

15

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

கவிக்கோ அப்துல் ரகுமான்



கவிக்கோ
அப்துல் ரகுமான்

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் பெயரை நான் முதன்முதலில் அறிந்து கொண்டதே விசித்திரமான ஒரு சூழலில்தான். திருக்கடவூரில் என் பாட்டனாரைப் பார்க்கப் பற்பல தமிழறிஞர்கள் வருவார்கள். அவர்கள் எழுதிய நூல்களையோ, பதிப்பித்த நூல்களையோ பரிசளிப்பார்கள். சின்னச் சின்னக் கையேடுகள் தொடங்கி, அளவில் பெரிய நூல்கள் வரை வெவ்வேறு வகைமைகளில் அவை காணக் கிடைக்கும். அப்போது நான் எட்டாவதோ, ஒன்பதாவதோ படிக்கும் மாணவன்.

அந்த வயதில் நான் பார்த்த சிறு நூல்களில் ஒன்று, டாக்டர். மெ. சுந்தரம் என்பவர் எழுதிய "கலைஞரின் கவிதை வளம்" எனும் நூல். அதில் ஒரு கவியரங்கத்தில் அப்துல் ரகுமான் அவர்களை அறிமுகம் செய்து கலைஞர் பாடிய வரிகள் இடம்பெற்றிருந்தன.

"அவை கூட்டும் அரங்கிற்கு
சுவைகூட்ட வேண்டாமா?
அதற்காக வருகின்றார்
அப்துல் ரகுமான்;
இவரொரு வானம்பாடி
இருக்குமிடம் வாணியம்பாடி..."

என நீளுமிந்தக் கவிதை. அப்போது தான் இவர் பெயரை முதன்முதலில் கேள்விப்பட்டேன்.

பின்னர் வயது கூடக்கூட அவர் எழுத்துகளுடன் பரவலாக அறிமுகம் நேர்ந்தது. கல்லூரியைக் கடக்கும் பருவத்தில் கோவை இராமநாதபுரம் பகுதியில் திரு. மு.மா. சண்முகசுந்தரம் எனும் உள்ளூர்ப் பிரமுகர் குறளோவிய மாநாடு எனும் நிகழ்வை பிரம்மாண்டமாக நடத்தினார். அந்த நிகழ்வில் கவிக்கோ அப்துல் ரகுமான் கவிதை வாசித்தார்.

"கடைப்பால் – எனவே – கலப்புப் பால்" என்று காமத்துப்பால் பற்றிய அவரின் வரியை அப்போதுதான் முதன் முதலாகக் கேட்டேன்.

அதன்பின்னர் கல்லூரிப் பருவத்தில் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தில் கவிஞர் சிற்பி தமிழ்த் துறைத் தலைவராக இருந்தபோது, ஒரு கவியரங்கம்



மரபின் மைந்தன் முத்தையா

ஏற்பாடு செய்திருந்தார். கவிக்கோ அப்துல் ரகுமான் தலைமை ஏற்றிருந்த கவியரங்கில் நானும் பங்கேற்றேன். கவிக்கோ உடன் நேரடி அறிமுகம் அப்போதுதான் நிகழ்ந்தது.









கவியரங்கத் தலைமை ஏற்கும் கவிஞர்களின் படைப்புகளினுடைய தலைப்புகளைக் கோர்த்துக் கோர்த்துத் தலைவர் வணக்கம் சொல்லுகிற பாணி எனக்குப் பிடித்தமான ஒன்று. அந்த வகையில், கவிக்கோ அவர்களுக்கும் தலைப்புகளைக் கொடுத்துப் பாடிய கவிதையின் சில வரிகள் இப்போதும் நினைவில் இருக்கின்றன.

“உங்கள் சுட்டு விரலில் சூடு படர்ந்து தான்
சில முட்டை வாசிகள் ஓடு பிளந்தனர்
இரவெல்லாம் உங்களது கவிதைகளை வாசித்தேன்
எனவே உன் கண்ணால் கொஞ்சம்
தூங்கிக் கொள்கிறேன்”

சிக்கனமான புன்னகை, சுருக்கமான சொற்கள், ஊடுருவும் பார்வை, ஒரு சிறு தலையசைப்பு இவற்றின் வழி தன் அங்கீகாரத்தைக் கவிக்கோ அப்போது தந்தார். அதன்பின் அவருடன் ஓரளவு நெருங்கிப் பழகுகிற நல்வாய்ப்பைக் காலம் ஏற்படுத்தித் தந்தது.

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் கவிதைத் தொடர் நிகழ்ச்சி ஒன்றைச் சில கவிஞர்களுடன் இணைந்து வாரா வாரம் கவிக்கோ வழங்கிக் கொண்டிருந்தார். அந்த நிகழ்ச்சிக்கு ஒருமுறை என்னை அழைத்தார். கவிஞர் மு. மேத்தா, கவிஞர் கலாப்ரியா மற்றும் திரைப்படப் பாடலாசிரியர் ஒருவருடன் அந்த அமர்வு இருந்தது.

அந்த அமர்வில் மறக்க முடியாத ஒரு சம்பவம். அந்தத் திரைப்படப் பாடலாசிரியரிடம் கவிக்கோ, “நீங்கள் ஏன் தனிப்பட்ட முறையில் அதிகம் கவிதைகள் எழுதுவதில்லை” என்று கேட்க, உடனே அந்தப் பாடலாசிரியர் “இல்லண்ணே! சினிமாவில் எனக்கு நிறையப் பணம் கொடுக்கிறார்கள்” என்று சொன்னது விசித்திரமாக இருந்தது.

அந்த நிகழ்ச்சி ஒளிப்பதிவுக்கு முன்னர் நடந்த உரையாடலில்தான் கம்பதாசன் பற்றிய அரிய தகவல்களைக் கவிக்கோ புரிந்து கொண்டார். இந்திப்பட மெட்டுக்கு எப்படியெல்லாம் கம்பதாசன் அனாயசமாகப் பாடல்கள் எழுதினார் என்பதைப் பல உதாரணங்களுடன் விளக்கினார்.

கவியரசர் கண்ணதாசன் பற்றிப் பேச்சு வந்தது. அங்கிருந்த ஒவ்வொருவரும் கண்ணதாசன் பற்றிய தங்கள் கவிதைகளைப் பகிர்ந்து கொண்டோம். “மீன்களின் சந்தையில் விண்மீன் விற்றவன்’ என்ற வரியை கவிக்கோ சொல்ல

“அவன் மதுக்கோப்பைகளில்
தன் முகம் பார்த்துக் கொண்டான்;
நல்ல தமிழ்க் கவிதைகளில்
தன் நடை பார்த்துக் கொண்டான்;
இளைய மயில்களிடம்
தன் எடை பார்த்துக் கொண்டான்”

என்ற வரிகளைக் கவிஞர் மு. மேத்தா சொல்ல, ஒவ்வொருவராக சொல்லிக் கொண்டே வந்தோம். அந்தத் திரைப் படப் பாடலாசிரியர் முகத்தில் ஈயாடவில்லை. கவியரசர் மறைந்தபோது, தான் ‘ஜெமினி’ சினிமாவில் எழுதிய ஒரு கட்டுரையை மட்டும் அவரால் நினைவு கூர முடிந்தது.

கவிக்கோவின் நெருங்கிய நண்பர் சிங்கப்பூர் தொழிலதிபர் திரு. முஸ்தபா அவர்கள். சென்னை போயஸ் கார்டனில் அவருடைய மாளிகை வாயிலில் நியான் விளக்குகளில் ‘தமிழ் வெல்க!’ ‘தமிழில் பேசுவோம்’ என்பது போன்ற வாசகங்களை ஒளிர விட்டிருப்பார். முதல் நாள் அவரைச் சென்னையில் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தபோது, மறுநாள் வீட்டிற்கு அழைத்தார். “முழு நாள் என்னுடன் இருங்கள். கவிக்கோ அவர்களையும் கூப்பிடு

வோம்” என்றவர், உடனே தொலை பேசியில் அழைத்து “அண்ணே, நாளைக்கு மீன் வாங்கவா?” என்றார். கவிக்கோவுக்கு மீன் உணவு மிகவும் பிடிக்கும் என்பதால், விருந்துக்கு அழைக்கும் சங்கேதச் சொல்லாக அதைப் பயன்படுத்தினார் போலும்.

மறுநாள் கவிக்கோ வந்தார். முஸ்தபா அவர்களைப் பார்த்து, “என்னையா சிங்கப்பூர்!” என்றபடி உள்ளே வந்தவர், நண்பர் தஞ்சை செழியனையும் என்னையும் பார்த்து “அடடே! இவங்களும் இருக்காங்களா” என வியந்தார்.

பிற்பகல் வரை உரையாடல் நீண்டது. இலக்கியம், கஜல், சமயப் பாடல்கள், சமகாலக் கவிஞர்கள் என்று பற்பல விஷயங்கள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுக்கு அகத்தியர் பற்றி விரிவான ஆராய்ச்சி உண்டு. தென்னிந்தியாவின் வாழ்வியல் முறையில் அகத்தியர் ஏற்படுத்திய தாக்கம் பற்றி என் குருநாதர் ஈஷா யோக மைய நிறுவனர் சத்குரு அவர்கள் பேசி வருவது குறித்து அவருடன் விவாதித்தேன். மிகவும் ஆர்வம் கொண்டார். “இதுகுறித்து சத்குரு அவர்களுடன் நீங்கள் ஒருமுறை பேச வேண்டும்” என்று கேட்டுக் கொண்டேன்.

சென்னை நந்தனத்தில் உள்ள ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் சத்குருவின் கிராமப் புத்துணர்வு இயக்கம் நடத்திய நிகழ்ச்சியில் என் வேண்டுகோளை ஏற்றுச் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டார். அவரை சத்குரு அவர்களுக்கு அறிமுகம் செய்தேன். இருவரும் மகிழ்ச்சியாகக் கொஞ்ச நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர்.

மலேசியாவில் கம்பன் கழக விழாவில் ‘இலக்கியச் சுடர்’ இராமலிங்கம், டாக்டர் சுதா சேஷய்யன், வழக்கறிஞர் சுமதி, பர்வீன் சுல்தானா, நான் ஆகியோர் கலந்து கொண்டபோது, கவிக்கோவின் துணைவியார் மறைந்த செய்தி கிடைத்தது. இரண்டு நாட்களில் தமிழ்நாடு வந்ததும் பர்வீன் சுல்தானாவும் நானும் நேராக கவிக்கோ இல்லத்திற்குச் சென்றோம்.

தன் மனைவியைப் பற்றி மனமுருகப் பல செய்திகளைப் பகிர்ந்து கொண்டார். “பாலைவனத்திற்கு என்றே படைக்கப்பட்ட ஒட்டகம் மாதிரி, எனக்கென்று படைக்கப்பட்டவள் அவள்” என்று சொன்ன கவிக்கோ, தன்னுடைய நிறைவான குடும்ப வாழ்வின் அடையாளமாக ஆழமான செய்தி ஒன்றைச் சொன்னார்.

“இன்று பல இளைஞர்கள் திருமண வாழ்க்கை என்பது தங்கள் உரிமைகளை நிலைநாட்டுகிற இடம் என்று நினைக்கிறார்கள். திருமணம் என்பது உரிமைகளை நிலைநாட்டும் இடம் அல்ல. உரிமைகளை விட்டுக் கொடுக்கிற இடம்” என்றவர் சிறிது நேரம் மவுனத்தில் ஆழ்ந்தார்.

பின்னர் சொன்னார், “பொது வாழ்க்கைக்காக எப்போதும் வெளியிலேயே சுற்றிக் கொண்டிருக்கும் என்னை, என் மனைவி எந்த நிலையிலும் தடுத்தது இல்லை. அவள் கடைசியாக உடல்நலமின்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, நான் ஒரு நிகழ்ச்சிக்காக வெளியூர் புறப்பட்டேன். இத்தனை ஆண்டுகளில் அப்போதுதான் முதல்முறையாக “இப்போது கூடவா நீங்கள் வெளியூர் போக வேண்டும்” என்று வாய் திறந்து கேட்டார்” என்று சொன்னபோது, அவர் குரல் தழுதழுத்தது.

கவிக்கோ அவர்களை நான் கடைசியாகப் பார்த்தது தஞ்சாவூர் மகாராஜா ரெடிமேட்ஸ் உரிமையாளர் நண்பர் ஆசிப் அலி அவர்களின் இல்லத் திருமணத்தில். அவர் மறைவுக்குக்கூடப் போக முடியாத சூழலில் மாட்டிக் கொண்டேன்.

இன்றளவும் இலக்கிய மேடைகளில் பல சொற்பொழிவாளர்கள் உதடுகளில் மேற்கோளாகவும் பல இலக்கிய நூல்களில் மேற்கோள் காட்டப்படக் கூடிய வரிகளை வழங்கியவர் ஆகவும் கவிக்கோ வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

ஒரு மகத்தான கவிஞர் தன் மறைவுக்குப் பின்னரும் தன் எழுத்துக்களால் சிரஞ்சீவியாக வாழ முடியும் என்பதற்குச் சமீபத்திய உதாரணம் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள். ●

7-ம் பக்கத் தொடர்ச்சி

இந்த மக்கள் நரகத்திற்குப் பயந்தாவது நல்லது செய்யட்டுமே என நினைக்கும் திருமூலர்,

"பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லோரும் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பாரே" (198)

என்று பாடுகிறார்.

கொல்வதும் தவறு, கொன்றதால் வந்த ஊனை உண்பதும் தவறு. உள்ளத்தைக் கெடுத்து விலங்குத் தன்மையை விளைவிப்பதால் புலால் பொல்லாததாயிற்று. உடலையும் கெடுக்கும் புலாலை உண்பவர்களை எமதூதர் நரகத் தீயில் மல்லாக்கத் தள்ளுவார்கள். அவர்கள் படும் துன்பத்தை எல்லோரும் காண வேண்டும் என்று, முகம் மேலிருக்கத் தள்ளுவார்கள். எழுந்து ஓட நினைத்தால், அதைத் தடுத்துத் திரும்பவும் தள்ளு வார்கள் என்பதை விளக்க ''மறித்து வைப்பாரே'' என்கிறார் திருமூலர்.

கொல்லாத விரதம் பூண்டவர்களைக் கொல்லச் சொல்லிக் கொடுத்துக் கெடுத்தவர் களும், ஊன் உண்ணாதவர்களைக் கட்டாயப் படுத்தித் தண்டித்து ஊன் உண்ணச் செய்தவர் களும் பன்றியாய்ப் பிறப்பர் என்றும், ஏழ் நரகில் வீழ்வர் என்றும் கூறுகிறார் திருமூலர்.

"கொன்றி லாரைக் கொலச்சொல்லிக் கூறினார்
தின்றி லாரைத் தினச்சொல்லித் தெண்டித்தார்
பன்றி யாய்ப் படியில் பிறந்து ஏழ்நரகு
ஒன்றுவார் அரன்ஆணை ஈது உண்மையே"

என்ற திருமந்திரம், சில பதிப்புகளில் மிகைப் பாடலாகக் காணப்படுகிறது. இதன் மூலம் பன்றி களின் எண்ணிக்கை அதிகமாவதற்கு நாமும் காரணமாகலாமா?

பிறன்மனை நயவாமை : கொலை புரிவது போலவே, மாற்றான் மனையாளை விரும்புதலும் தீய செயலாகும். நம் வீட்டுத் தோட்டத்தில் நமக் காகக் காய்த்துக் கிடக்கிறது பலாப்பழம். அதை உண்ணாமல் எதிர்வீட்டில் உள்ள ஈச்சம்பழத்தை உண்ண ஆசைப்பட்டுத் துன்புறலாமா? பிறர் மனை நயத்தலும் இத்தகையதே என்பதை,

"ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடர்உற்ற வாறே" (199)

என்று பாடுகிறார் திருமூலர்.

மிக நெருங்கிய சொந்தம் மனைவி என்ப தைக் குறிக்க ''ஆத்த மனையாள்'' என்றும், பிறர் மனை வேறொருவரால் பாதுகாக்கப்பட்டவள் என் பதைக் குறிக்கக் ''காத்த மனையாள்'' என்றும் இடமறிந்து சொல் பெய்த திருமூலர், பிறன்மனை நயந்தால் துயர் வரும் என்பதை விளக்க, 'இடர் உற்றவாரே' என்று பாடினார். உன் மனைவி இனிய பலாச்சுளை. அடுத்தவன் மனைவி ஈச்சம் பழம். சோலையில் மணப்பது பலா. பாலையில் கிடைப்பது ஈச்சம்பழம். கையிலுள்ள பலாவை உண்ணாமல் ஈச்சம் பழத்துக்காக இடர்ப்படக் கூடாது என்கிறார் திருமூலர்.

எட்டிப்பழம் கண்ணுக்குக் கவர்ச்சியாக இருந் தாலும், உண்ணப் பயன்படாது. அதன் சுவையை எண்ணி அதன் மேலுண்டாகும் ஆசையை விட வேண்டும். கவர்ச்சியான மகளிர் மேல் செல்லும் ஆசையை, அதன் விளைவு கருதி விடவேண்டும். அப்படி விடாமல் பெண்ணாசைக்கு இடம் கொடுத் தால் என்ன ஆகும்? பாசியால் மூடப்பட்ட ஆழந் தெரியாத குளத்தில் காலை விட்டுக் கெடுவது போல் வாழ்க்கை கெட்டுவிடும். இப்படிக் கெட்டுப் போகக்கூடாது என்பதற்காக,

"கோழை ஒழுக்கம் குளமூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூழை நுழைந்தவர் போகின்ற வாறே" (206)

என்று அறிவுரை கூறுகிறார் திருமூலர். பரத்தை ஒழுக்கம் குற்றம் உள்ளது. எனவே, அதைக் கோழை ஒழுக்கம் என்றார் திருமூலர். அது ஒழுக்கமல்ல, இழுக்கம் என்பார் வ.சுப. மாணிக்க னார். பீழை என்றால் துன்பம். அது பூழை என மருவிற்று.

மனைவியிடம் இன்பம் துய்க்கும் வாழ்க்கை நெறி கருப்பஞ்சாறு போன்றது. பிற மகளிர்பால் துய்க்கும் இன்பம் உடம்பினுள் சென்று தீண்டும் பாம்பு போன்றது. அதனிடமிருந்து தப்ப முடியாது. எனவே, அந்த நேயத்துடன் இல்லறமாகிய கருப் பஞ்சாற்றை ஏந்துவதால் பயனில்லை. எனவே, பிறன்மனை நோக்காத பேராண்மை வேண்டும். இந்த அறிவுரையை,

"வையத் தேமட வாரொடும் கூடிஎன்
மெய்யகத் தோர்உளம் வைத்தவிதி – அது
கையகத் தேகரும் பாலையின் சாறு;கொள்
மெய்யகத் தேபொரும் பாம்பு அதுஆகுமே" (205)

என்று அழகாகப் பாடுகிறார் திருமூலர். மனைவி தரும் இன்பம் நனவு. பிற மகளிர் இன்பம் கனவு.

அந்த எட்டிப் பழத்திற்காக இடர்ப்படாதே என்று நம்மை எச்சரிக்கிறார் திருமூலர்.

கள்ளுண்ணாமை : கள் உண்பது பொருளுக்கும் கேடு. அறிவுக்கும் கேடு. இதைக் கட்டாயமாக விலக்க வேண்டும் என்பதால், கள்ளுண்ணாமை பற்றிப் பதினொரு பாடல்கள் பாடுகிறார் திருமூலர். பசுக்கள் அரிசி கழுவிய நீரை உண்டு பழகிவிட்டால், குளத்தில் உள்ள தூய நீரை நாடிச் செல்லமாட்டா. அந்தக் கழுநீரையே நினைத்து உடல் மெலியும். அதுபோலச் சுவை மிக்கதென்று கள் உண்பவர் சிவபக்தியால் கிடைக்கும் சிவானந்தத் தேனை உண்ணமாட்டார்கள் என்பதை,



திருவள்ளுவர்

"கழுநீர்ப் பசுப்பெறில் கயம்தொறும் தேரா
கழுநீர் விடாய்த்துத் தன்காயம் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்
செழுநீர் சிவன்தன் சிவானந்தத் தேறலே" (322)

என்று குறிப்பிடுகிறார்.

சிவானந்தத் தேறல் சுகமளிக்கும். இதை உணராத அறிவிலிகள் கள்ளை உண்டு, காமத்தில் மயங்கிக் கெடுவர். சக்தி வழிபாடு செய்யக் கூடிய சிலர் மது உண்பர். காமம் மிகுந்தோர் கள்ளுண்டு கலங்குவர். ஆனால், மூலாதாரத்து அக்கினியை மேலே எழுப்பும் யோகியர் இறைவனை உள்ளத்துள் காண்பர். அவர்கள் சிவானந்தத் தேனைப் பருகுவர். கள்ளுண்பதால் வாய்மை கெடும். காமம் அதிகமாகும். ஞானநிலை தவறும், பேரின்பம் கிடைக்காது. ஆனால், சிவானந்தத் தேறலை உண்பவர் முப்பத்தாறு தத்துவங்களையும் நீக்கி, உண்மை இன்பமெய்திச் சித்தி பெறுவார். இந்தக் கருத்துக்களை,

"சத்தியை வேண்டிச் சமயத்துக் கள்உண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞான ஆனந்தத்தில் சார்தலே" (329)

"மயங்கும் தியங்கும் கள்வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும், நயங்கொண்ட ஞானத்து முந்தாது
இயங்கும் இடையறா ஆனந்தம் எய்துமே!" (328)

என்று பாடுகிறார். நீதியோடு சேர்ந்த ஞான நெறியை அடைய முயலாமல் கள்ளுண்பவன் இடையறா ஆனந்தம் பெறுவானோ என்று கேட்கும் திருமூலர், மலத்தை நீக்க வேண்டிய சமய நெறியில் செல்பவர் மலத்தில் அழுத்தும் கள் உண்பதையும் கண்டிக்கிறார். யோகிகள் மூச்சைக் கணக்காக நடுநாடியில் செலுத்தி, நெற்றியில் உள்ள சந்திரமண்டலத்தில் ஊறும் ஞான அடையாளமான ஆனந்தம் தரும் அமுதை உண்பார்கள்.

ஆனால் அட்டமாசித்திகள் பெற ஆசைப்பட்டவர்கள் வாமநெறியில் கள் உண்டு; அறியாமை வயப்பட்டு; உலகியல் மோகம் கூடிக் கள் வெறியால் அறிவு நீங்கப் பெறுவர். இதனை விளக்க,

"யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர், எண்சித்தி
மோகியர், கள்உண்டு மூடராய் மோகமுற்று
ஆகும் மதத்தால் அறிவழிந் தோரே" (332)

என்று பாடும் திருமூலர், கள் உண்பதை மட்டுமின்றிச் சில தெய்வங்களுக்குக் கள்ளைப் படைத்து உண்பதையும் கண்டிக்கிறார்.

கொடையும் ஈகையும் : தள்ளத்தக்க தீமைகளை எடுத்து விளக்கிய திருமூலர், கொள்ளத் தக்க நற்செயல்களையும் பட்டியலிட்டுப் பாராட்டுகிறார். அவர் கூறும் அறச்செயல்களில் குறிப்பிடத் தக்கவை தானமும் தருமமும் ஆகும். நம் பொருளைப் பிறர்க்கும் பயன்படச் செய்யும் முறைகள் இவை. இவற்றுள் உயர்ந்தோர்க்குக் கொடுப்பது தருமம். இதுவே ஈகையாகும்.

"ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை உடையீர் விரைந்துஒல்லை உண்ணன்மின்

காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே" (249)

என்பது திருமந்திரம். இந்தப் பாடலில் கீழ்க்கண்ட நல்லறச் செயல்களைப் பட்டியலிடுகிறார் திருமூலர்.

1. நல்லவர், தீயவர் என்று வேறுபாடு கருதாமல், ''நேர வந்தவர் யாவராயினும்'' அவர்களுக்கு உணவளியுங்கள். அற்றார் அழிபசி தீர்த்தலே ஈகை. அதற்கு ஏற்பார் தகுதியை ஆராய வேண்டாம். பெரிய புராணத்தில் இளையான் குடி மாற நாயனார் வரலாறும், கலிக்கம்பர் வரலாறும் இதை உணர்த்துகின்றன.

2. உண்ணும்பொழுது விரைவாகச் சென்று உண்ணாதீர்கள். விருந்தினர் வருகையை எதிர்பார்த்து உண்ணுங்கள். தக்கார் வந்தால் மகிழ்ந்து, வரவேற்று அவருடன் உண்ணுங் கள். வராவிட்டால், வரவில்லையே என்று வருந்தித் தானாக உண்ணுங்கள்.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு" (86)

என்ற திருக்குறள் இங்கு ஒப்புநோக்கத் தக்கது.

3. பழம்பொருளைப் போற்றிப் பதுக்கி வைக்கா மல் வாரி வாரி வழங்கி ஈத்துவக்கும் இன்பம் பெறுங்கள். முன்னோர் தேடிய சொத்து, நீங்கள் தேடிய சொத்து ஆகியவற்றைப் பொன்காக்கும் பூதம்போல் காத்துப் பதுக்கா தீர்கள். பலருக்கும் கொடுங்கள்.

4. காக்கைகள் தமக்குக் கிடைத்த உணவை உண்ணும்பொழுது தம் இனத்தை அழைத்து உண்பதை, நீங்கள் உண்ணும் காலத்தில் நினைத்துக் கொள்ளுங்கள்.

"காக்கை கரவா, கரைந்துண்ணும் ஆக்கமும்

அன்னநீ ரார்க்கே உள" (527)

என்ற குறள் இப்பொழுது விளக்கம் பெறுகிறது. காக்கையைப் போலத் தன்னுடைய இனத்துக்கு மட்டும் கொடுக்காமல் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்பதை ''ஆர்க்கும் இடுமின் அவர் இவர் என்னன்மின்'' என்று தொடங்கும் பொழுதே எச்சரித்தவர் திருமூலர்.

இந்தப் பாடலில் 'வேட்கை உடையீர்' என்ற சொல், கொடுத்து வாழ வேண்டும் என்ற வேட் கையைக் குறிக்கிறது. பழம்பொருள் போற்றன்மின் என்பது, பழைய உணவைக் குளிர்சாதனப் பெட்டி யில் வைத்துப் பல நாட்கள் உண்ணக்கூடாது என்பதையும் குறிக்கிறது. ''விரைந்து ஒல்லை உண்ணன்மின்'' என்பது, சாப்பிடும்பொழுது வேக வேகமாகச் சாப்பிடாதீர்கள், பாதி ஜீரணம் வாயி லேயே முடிய வேண்டும். நொறுங்கத் தின்றால் நூறு வயது என்பதையும் குறிக்கக் காணலாம். இது போலவே,

"யாவர்க்குமாம் இறை வற்கொரு பச்சிலை

யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி

யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே"

என்ற பாடலும் கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் பாடலாகும்.

இறைவனுக்குப் பச்சிலை இட்டு வணங்கு. பசுவுக்கு உணவிடு. நீ உண்ணும்போது மற்றவர் களுக்குப் பிடி சோறாவது கொடு. அதுவும் முடியா விட்டால், இன்னுரையாவது பேசு என்று கூறுவது அறம் செய்ய வேண்டும் என்ற எண்ணமாவது உண்டாகட்டும் என்பதற்காகப் பாடப்பட்டது போல் தோன்றுகிறதல்லவா? ''அறம் செய விரும்பு'' என்ற ஔவையின் அமுதமொழிக்கு இத்திருமந்திரம் அணி செய்கிறது.

அறம் செய்யாதவரை நோக்கி ஓர் எச் சரிக்கை விடுகிறார் திருமூலர். மனத்தில் உள்ள அழுக்குகளை நீக்கி மெய்ஞ்ஞானம் பெறமாட்டீர் கள். செல்வம் நிரம்பியுள்ள போது தருமமும் செய்ய மாட்டீர்கள். கண்ணிருந்தும் குருடர் ஆனீர். காலன் வந்து உயிரைக் கொண்டு போகும் பொழுது என்ன செய்யப் போகிறீர்கள். காலன் வருமுன்னே அறம் செய்யுங்கள் என்பதை,

"அழுக்கினை ஒட்டி அறிவை நிறையீர்

தழுக்கிய நாளில் தருமமும் செய்யீர்

விழித்திருந் தென்செய்வீர்? வெம்மை பரந்து

இழுக்க அன்று என்செய்வீர் ஏழை நெஞ்சீரே" (253)

என்று பாடும் திருமூலர், செல்வத்துப் பயனே ஈதல் என்பதைத் தெளிவாகக் கூறுகிறார் அல்லவா? அவர் இவ்வளவு விரட்டிய பின்பாவது நாம் தருமம் செய்ய வேண்டாமா? தருமம் செய்யாவிடில் என்ன ஆகும்? இருமல், சோகை, காசம், வெப்புநோய் இவை உண்டாகும். பேரிடியும், பாம்புக்கடியும் துன் புறுத்தும். கட்டியும், கழலையும் கவலை தரும் என்கிறார் திருமூலர்.

"இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்

தருமம்செய் யாதவர் தம்பால தாகும்

உருமிடி நாகம் உரோணி கழலை

தருமம்செய் வார்பக்கல் சாரகி லாவே" (262)

என்பது திருமந்திரம். தருமம் செய்தால் நோய் களுக்குத் தப்பலாம் என்பது காலமறிந்து மூலர் கொடுத்த, பிணி தவிர் மந்திரப் பெருவழியாகும்.

நூல் விமர்சனம்

மகாபாரதத்தில் தர்மம் எதிரும் – புதிரும்



“மகாபாரதத்தில் தர்மம் எதிரும் – புதிரும்” என்ற நூல் ஒன்று வெளியாகியுள்ளது. அதை எழுதியவர் கோகுலாச்சாரியோ, கோவர்த்தனனோ, கோபாலகிருஷ்ணனோ அல்ல. நாம் ஆச்சரியப்படும்படியாக இதை எழுதியவர் ஜனாப் காதர் மைதீன் ராவுத்தரின் திருமகனாகிய **பேரா. கா. காசிம், ஐ.பி.எஸ்.** இஸ்லாமின் திருக்குர்ஆனுக்கு இவர் விளக்கவுரை எழுதியிருந்தால் அது ஆச்சரியமானதல்ல. மகாபாரதத்திற்கு எழுதியது சற்று வியப்புத்தான்.

இந்த நூலின் ஆசிரியர் மதத்தால் இஸ்லாமியர். இவரை இதனை எழுதத் தூண்டியவர் இவருடைய தாய் ஆயிஷா.

இவர் ஐ.பி.எஸ். அதிகாரியாகக் காவல் துறையில் பணியாற்றியவர். இத்தகையவருக்கு மகாபாரதத்தின்மீது எப்படி ஈடுபாடு ஏற்பட்டது என்று அறிவதற்காகவே அவருடைய தமிழ் நூலைத் தமிழ் தெரிந்தவர்கள் அனைவரும் கட்டாயம் படிக்க வேண்டும்.

மதத்தில் இஸ்லாமியராகவும், பணியின் காரணமாகக் காவல் துறை உயர் அதிகாரியாகவும் பணியாற்றி முதுமையில் வாழ்ந்து கொண்டிருக்கிற பேரா. காசிம் அவர்களை, இந்நூல் இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்குக் காற்று உள்ளே வரக் கதவைத் திறந்துவிட்டவர் என்றுகூடச் சொல்லலாம்.

காவல்துறைப் புலன் விசாரணை அதிகாரி ஒரு ஹிந்து சாஸ்திரத்தை அவருடைய கோணத்தில் எழுதியிருக்கிறார். சூதாட்டம், கொலை, கொள்ளை, கபட வேடங்கள், வஞ்சகம், சூழ்ச்சி எனச் சமூகத்தில் உள்ள அனைத்துக் குற்றங்களும் மலிந்துள்ள நூல் மகாபாரதம்.

இக்குற்றங்களை இன்றைக்குச் செய்பவர்களும் காவல்துறையின் கண்காணிப்புக்கு உள்ளாகிறார்கள். இக்குற்றங்களை மோசமானவர்கள்தான் செய்வார்கள் என்றில்லை. மகாபாரதத்தில் மன்னர்கள் செய்திருக்கிறார்கள். அதனுடைய விளைவுகள், அதன் நீண்ட, நெடிய பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ளன.

உண்மையில், மகாபாரதம் என்பதை ஆழமாகவும், அதேசமயம் நுட்பமாகவும் புரிந்துகொள்ள வேண்டுமானால், அருட்செல்வர் அடிக்கடி சொல்வார், “மகாபாரதத்தைப் பாண்டவர்க்கும் கௌரவர்க்கும் நடந்த யுத்தநூல் என்பதைவிட, பாண்டவர்களை ஆட்டிப்படைத்த கிருஷ்ணனுக்கும், கௌரவர்களை ஆகர்ஷித்துக் கொண்ட சகுனிக்கும் நடந்த அறிவுப்போட்டி என்றே கூறலாம்” என்பார்.

மகாபாரதத்தில் கிருஷ்ணனா, சகுனியா என்று தொடர்ந்து மோதல் நடந்து கொண்டேயிருக்கிறது. இறுதியாக கிருஷ்ணர் ஜெயிக்கிறார். தோற்றுப்போன சகுனி கொல்லப்படுகிறான் என்றுதான் நினைக்கிறோம். ஆனால், சகுனியின் ஒரு சாவுக்குக் கிருஷ்ணனின் யாதவகுலமே அழிகிறது. சகுனி ஒருவன் அழிகிறான். கிருஷ்ணனின் வம்சம் அழிகிறது. அப்படியானால், யார் ஜெயித்தார்கள் என்ற கேள்விக்கான விடை என்ன?

பேரா. காசிம் இதற்கு விடை தேடுகிற விடாமுயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். சமஸ்கிருதப் புலமையும், சாஸ்திரிய ஞானமும் கொண்ட வேத

விற்பன்னர்கள்கூட கைகளால் எட்டித் தொட முடியாத சிகரம் அது. அச்சிகரத்தில் பேரா. காசிம் ஏறி நிற்கிறார்.


பேரா. காசிம் முதலில் "Dharma vs Adharma" என்று ஆங்கிலத்தில்தான் இந்நூலை எழுதி யிருக்கிறார். இந்த ஆங்கில நூலுக்கு அணிந் துரை வழங்கிய உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் டாக்டர் எஸ். மோகன் அவர்கள் குறிப் பிடுகையில், "ஒரு முஸ்லீம் பேராசிரியர் காசிம் எப்படி இந்து சமயத்தின் மிகப்பெரிய இதிகாச மான மகாபாரதத்தைத் தெரிந்தெடுத்து தர்மத்தை யும், அதற்கு எதிரான அதர்மத்தையும் விளக்க முனைந்திருக்கிறார் என்ற ஐயம் எழலாம். இவை யெல்லாம் உலகிற்குப் பொதுமையான கொள் கைகள் என்பதை எந்தச் சமயமும் மறுக்காது" என்று சுட்டிக் காட்டியுள்ளது சிந்திக்கத்தக்கது.

நூலாசிரியர் மிக விளக்கமாகக் கூறுகின்றார். "ஒருவன் இந்துவாக இருந்தாலும், முஸ்லீமாக இருந்தாலும், கிறிஸ்தவனாக இருந்தாலும், யாராக இருந்தாலும் எல்லோருக்கும் ஏற்புடைய நூல் மகா பாரதம். இதில் காணப்படுகின்ற கொள்கைகளும், தத்துவமும் எல்லோருக்கும் பொதுவானவை; முழு மையாக ஏற்றுக்கொள்ளத் தக்கவை.


"அதர்மத்தைப் புறந்தள்ளு, தர்மத்தைக் கைக் கொள்ளு; கோபத்தையும் பேராசையையும் விட் டொழி; அன்பையும் இரக்கத்தையும் பயிர் செய், போரை விடு; அமைதியில் வாழ்; பகையையும் வெறுப்பையும் அழி; ஒற்றுமையையும் கருணை யையும் பெருக்கு.

"இதயத்தைத் தொடுகின்ற இந்த அறிவிப்பு கள் எல்லோருக்கும் உயிருக்குச் சமமான கருத் தாகின்றன.

இவையெல்லாம்தான் இந்நூலை எழுதிய காசிம் அவர்கள் குறுகிய மனப்பான்மை இல்லா தவர் என்பதையும் வாசகர்களைத் தீய வழியில் செல்லவிடாமல் தடுத்து நல்வழியில் இட்டுச் செல்லக்கூடியவர் என்பதையும் எனக்கு ஏதும் ஐயமில்லாமல் புரிய வைத்திருக்கிறார்" என்கிறார் நீதியரசர்.



பேரா. காசிம் அவர்கள் அவ்வப் போது காஞ்சிபுரம் சென்று காஞ்சி ஜெகத்குரு ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைப் பார்த்து ஆசி பெற்று வருகிற வழக்கமுடை யவர். அப்படிப் பெற்ற ஆசி களில் ஒன்றுதான் மகா



பாரதத்தைக் காசிம் எழுதுவதற்குக் கிடைத்த பாக்கிய மாகும்.

நூலை எழுதிய பிறகு சங்கர மடத் திற்குச் சென்று அவர் பெற்ற அணிந்துரை யில், சுவாமிகள், பேராசிரியர் கா. காசிம் 'தர்மமும் எதிரான அதர்ம மும்' என்று ஆங்கிலத்திலும் 'மகாபாரதத்தில் தர்மம் எதிரும் – புதிரும்' என்று தமிழிலும் எழுதி யுள்ளதைப் பாராட்டியுள்ளார்.

ஒரு முஸ்லீம் பேராசிரியர் மகாபாரதத்தைப் பற்றி எழுதிய அந்த நூலைப் படிப்பவர்கள் பயனடைவார்கள் என்றால், அந்த ஆசியைத் தந்த ஜெகத்குருவும் அதை எழுதியவர் முஸ்லீம் என்றா லும், அதனைக் கடந்து அவர் எழுதிய கருத்தை மட்டுமே எடுத்துக்கொண்டு பாராட்டியிருப்பது இந்து சமயத்திற்கும் பெருமிதம், முஸ்லீம் சகோதர ருக்கும் பெருமை.

ஆங்கிலத்தில் உள்ள இந்நூலைத் தமிழாக்கம் செய்தவர் சிறந்த காந்தியவாதியும், பேராசிரியரு மான முனைவர் மா.பா. குருசாமி அவர்கள். மா.பா. அவர்களும், காசிம் அவர்களும் ஒரு சாலை மாணக்கர்களாக இருந்தவர்கள். ஆனா லும், மொழிபெயர்த்த பேராசிரியர் மா.பா., "ஆசி ரியர் கூறும் எல்லாக் கருத்துக்களும் முழுக்க என்னால் ஏற்க முடியாதவை. கருத்து வேறுபாடும் உண்டு" என்று வெளிப்படையாகவே குறிப்பிட் டுள்ளார்.

இதன் மூலம் நட்புக்காகச் செய்யப்பட்ட பணியாக இது இல்லாமல், அவருடைய அறிவு நுட்பத்திற்காகவே இப்பணியை மா.பா. அவர்கள் மேற்கொண்டுள்ளது தெரிகிறது. அதுமட்டுமல்ல, மா.பா. அவர்கள் பேராசிரியர் காசிம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில், "இந்த நூலைப் பேராசி ரியர் காசிம் சமய நோக்கில் எழுதவில்லை. அதற்கு மாறாக, 'அரசியல் அறம்' என்ற கண் ணோட்டத்திலேயே எழுதியிருக்கிறார். இந்த ஆய்வு, கருத்து வேறுபாடுகளுக்கு ஒருவேளை இடம் தரலாம்" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மகாபாரதத்தை எழுதியவர் வியாச முனிவர் என்று நாம் எல்லோரும் அறிவோம். வியாச முனி வர் மகாபாரதத்தை விநாயகரிடம் இடைவெளி யில்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார்; அதை

எழுதுவதற்காகத் தனது ஒரு தந்தத்தை இரண்டாக உடைத்து அதையே எழுதுகோலாக்கி எழுதிய தாக ஒரு தொன்மக்கதை உண்டு.


ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி

வியாச முனிவர் பற்றிப் பேரா. காசிம் சில வித்தியாசமான விளக்கங்களைத் தந்துள்ளார். பாண்டவர்கள், கௌர வர்கள் ஆகியோரின் தாத்தா பெய ரும் வியாசர்தான் என்கிறார். இந்த வியாசர் மகாபாரதக் கதையில் வரு கிற ஒரு பாத்திரமாகவும் உள்ளார். இவ்வாறு, வியாசர் பற்றியும் நம்மைச் சிந்திக்கத் தூண்டியுள்ளார்.


நீதியரசர் எஸ். மோகன்

இதேபோல மகாபாரதம் உண்மையில் நடந்ததா அல்லது கற்பனையா என்ற கேள்வியையும் பேரா. காசிம் எழுப்பி யுள்ளார். ஏனெனில், கதாசிரியரே மகாபாரதத்தில் ஒரு பாத்திரமாக வருவது என்பது ஆச்சரியமாகத் தான் உள்ளது. இப்படிப்பட்ட துணுக்குச் செய்திகளும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.


மா.பா.குருசாமி

எப்படி இருந்த போதிலும் மகாபாரதம் என்ற அந்த மகத்தான படைப்பு, காஞ்சி காம கோடி பீடாதிபதிகள் சொன்னதுபோல, கிரேக்க இதிகாசங்களான ஹோமரின் இலியட்டும், ஒடிசியும் போன்ற மாபெரும் காவியமாகும்.

தர்மம், அதர்மம் என்பதைப்பற்றிப் பேரா. காசிம் தமது சுய சிந்தனைகளைத் தந்திருக் கிறார். எல்லோருக்கும் தெரியும், தர்மத்திற்கு எதிரானது அதர்மம் என்று. பேரா. காசிம் அவர்களுக்குத் தமிழ் தெரிந்த அளவிற்கு இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலமும் தெரியும்.

தர்மம் பற்றி அவர் குறிப்பிடுகையில், அதற்குச் சமமான சொல் வேறு எந்த மொழியிலும் இல்லை என்று நிறுவியுள்ளார். தர்மத்திற்குச் சமமானது அறம் என்று சொல்லப்படுகிறது என்றாலும், காசிம் அவர்களுக்கு அது திருப்தியளிக்கவில்லை.

தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்ற நான்கையும் பற்றி நமது வைதீக சாஸ்திரங்கள் குறிப்பிடுகின்றன. இந்த நான்கையும் தமிழ்ப் படுத்திய திருவள்ளுவர் நான்கை, மூன்று எனக் குறைத்தார். தர்மத்தை அறம் என்றார், அர்த்தத் தைப் பொருள் என்றார், காமத்தை இல்லறம் என்ற பகுதியாக்கி, மோட்சம் என்பதைப் பற்றிப் பேச வில்லை. இந்த மூன்றும் சேர்ந்ததுதான் மோட்சம். தனியாக மோட்சம் என ஒன்று இல்லை என்ற வள்ளுவரின் கருத்து, வைதீக மரபுக்கு எதிரானது.

அதனால், தர்மத்தை அறம் எனச் சமப் படுத்துவதைப் பேரா. காசிம் அவர்கள் ஒப்புக்கொள்வாரானால் அது தவறாகாது. தர்மத்திற்கு எதிராக அதர்மம் உண்டு. தர்மம், அதர்மம் என்ற இரண்டையும் தாண்டி 'சுதர்மம்' என ஒன்றும் உண்டு. அந்தச் சுதர்மம்தான் நமது வாழ்க் கைச் சுழற்சிக்கான சக்தியாக உள்ளது.

ஓர் ஆசிரியர் வகுப்பறையில் தன் கடமையைச் செய்தால் அது சுதர்மம். ஒரு போர் வீரன் யுத்த களத்தில் எதிரி களைக் கொன்றால், அது சுதர்மம். சுதர் மத்தை மறந்துவிடுகிற மக்கள் உள்ள நாடு சுபிட்சமாக இருக்காது. 'பொறுப் புள்ள மனிதரின் தூக்கத்தினால் பல பொன்னான வேலைகள் தூங்கு தப்பா' என்ற பட்டுக்கோட்டையாரின் எளிய விளக்கம் எத்தனை மகத்தா னது எனச் சொல்லத் தேவையில்லை.

ஜிகாத் என்பது திருக்குர்ஆனில் இறை வசனத்தில் இருக்கிறது. அதைப் புனிதப் போர் என்று மொழிபெயர்க்கிறார்கள். பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் முஸ்லீம் அல்லாதவர்களை அழித்தால், அவர்களுக்குச் சொர்க்கம் கிடைக் கும் எனச் சொல்லப்படுகிறது.

ஆனால், அண்மைக் காலமாக மார்க்க அறி ஞர்கள் ஜிகாத்திற்குப் புது விளக்கம் தருகிறார் கள். ஒரு முஸ்லீம், முஸ்லீம் அல்லாதவனை அழிப் பதைவிட, தனக்குள் மண்டிக் கிடக்கிற மாசு களை, தீய குணங்களை அழித்துத் தன்னைச் சுத்திகரித்துக் கொள்வதுதான் 'ஜிகாத்' என்ற புனிதப் போராகும் எனப்படுகிறது. இதனை 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' என்று வள்ளுவர் வாக்கிலும் கூறலாம்.

பேரா. காசிம் மகாபாரதம் நூலைப்போல இது போன்ற வரிகளுக்கும் சிறந்த விளக்கங்களைத் தர வல்லவர் என்பது, வாசகர்களின் எதிர்பார்ப் பாகும். தருவார் என்பது எங்களைப் போன்றவர் களின் நம்பிக்கையும் ஆகும்.

'மகாபாரதத்தில் தர்மம் எதிரும் – புதிரும்'

ஆசிரியர் : பேரா. கா. காசிம்,

வெளியீடு : கிருஷ் பப்ளிஷர்ஸ், 1 பி, புதுநத்தம் சாலை, மதுரை – 625 002.

செல் : 94430 52721. பக். 312, விலை ரூ. 300/–

– ந.நி.

அருட்பாடல்கள் வழங்கிய அன்னமாச்சார்யா



என்.ஆர். ஜெயசந்திரன்

திருமலையில் 'பாரத ரத்னா' திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பாடிய சுப்ரபாதமும், நாலாயிர திவ்யப் பிரபந்தப் பாடல்களும் அன்னமாச்சார்யா பாடிய வேங்கடாசல மகாத்மியப் பாடல்களும் நாள்தோறும் பாடப்படுகின்றன. அன்னமாச்சார்யா தெலுங்கு மொழியில் மிகச்சிறந்த கவிஞர்.


திருமலையில் அன்னமாச் சார்யாவின் சிலை

கி.பி. 22.5.1408 ஆம் நாள் வைகாசி மாதம் ஆந்திராவிலுள்ள கடப்பா மாவட்டம் தாளப்பாக்கத் தில் பிறந்தார். தந்தையின் பெயர் நாராயணசூரிய ஐயங்கார், தாயின் பெயர் லக்கமாம்பா. எட்டாவது வயதிலேயே உபநயனம் செய்துகொண்டு வேங்கடவன் மீது பக்தி மிகுந்ததால், இல்லற வாழ்க்கையைத் துறந்தார். தெலுங்கு மொழியின் பிதாமகனாகக் கருதப்படுகிறார்.

சிறுவயதில் அவருடைய அண்ணியார் அவரைக் கொடுமைப்படுத்தினார். பெற்றோர் இருந்தும் அவருக்கு ஆறுதல் சொல்வாரில்லை. அண்ணியா ரின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டார்.



அன்னமாச்சார்யா காலை யில் எழுந்து பசு மாடுகளைக் கழுவி, மாட்டுத் தொழுவத் தைச் சுத்தம் செய்து வீட்டிற்கு வந்தார். வந்தவுடன் அண்ணியார் அவ ருக்குக் காலை உணவு தருவார் என்று எதிர்பார்த்தார்.

ஆனால் அண்ணியார் அவரிடம் 'புல் அறுத்து வா' என்று கட்டளையிட் டார். அன்னமாச்சார்யா அறுவாளை எடுத்துக் கொண்டு கிராமத்திற்கு வெளியே இருக்கும் புல்வெளியில் புல் அறுக்க ஆரம்பித் தார். அப்போது "கோவிந்தா... கோவிந்தா..." என்று பக்தர்களின் கோஷம் கேட்டது. திரும்பிப் பார்த்தார். திருப்பதி போகும் வழியில் ஒரு பெரிய பக்தர் கோஷ்டி போய்க் கொண்டிருந்தது.

பஜனையின் இனிய நாதம் அன்னமாச்சார்யா வின் செவிகளில் விழுந்தது, மெய்மறந்தார். அறு வாளைக் கீழே போட்டார். ஓடிப் போய் அந்தப் பஜனைக் கோஷ்டியுடன் சேர்த்துக் கொண்டார். அவர்களோடு சேர்ந்து திருமலை நோக்கிப் பயண மானார்.

கோஷ்டி, திருமலை அடிவாரம் அடைந்ததும் மறுநாள் காலை திருமலையில் படிகளின் வழி யாகச் சென்றது. 'முழங்கால் முறித்தான்' பகுதி வழியே மலையை அடைந்தனர். பிரபல வைணவ

ஆசாரியார் மகான் இராமானுஜர் தமது முழங்காலாலேயே தவழ்ந்து மலைமேல் ஏறினார் என்பதை அவர் அறிந்து, அதன்படியே அவரும் பாதம் படாமல் ஒரு நாலுகால் பிராணி போல ஏறினார்.

கோஷ்டியினர் விரைவாக முன்னால் சென்று விட்டார்கள். அன்னமாச்சார்யா பின்தங்கிவிட்டார். ஊரிலிருந்து புறப்பட்டதிலிருந்து உணவு சாப்பிட வில்லை. பசி வயிற்றைக் கிள்ளியது. கண்கள் இருண்டன. மயங்கி விழுந்தார். அப்பொழுது ஒரு பெண்மணி அவர் எதிரே தோன்றி, அவருக்கு உணவும் நீரும் தந்து பசியைப் போக்கினார். வயி றார உண்டதும், களைப்பு நீங்கியது. அவருக்குத் திருமலைக்குப் போகும் வழியைக் காட்டிவிட்டு அப்பெண்மணி மறைந்துவிட்டார்.

அலர்மேல்மங்கைத் தாயார்தான் தனக்கு உதவி செய்தாள் என்பது பிறகு புரிந்தது. ஆனந் தப்பெருக்கில் தாயார் மீது நூறு பாடல்களைப் பாடினார். அதற்கு ‘‘அலர்மேல்மங்கை சதகம்’’ என்று பெயர்.

திருமலையை அடைந்து சுவாமி புஷ்கரணி திருக்குளத்தில் நீராடி மகிழ்ந்தார். அப்பொழுது வேங்கடநாதன் மீது நூறு பாடல்களைப் பாடினார். அதற்கு ‘‘வேங்கடாசல மகாத்மியம்’’ என்று பெயர்.

பெருமாளைத் தரிசித்து அன்று இரவில் ஒரு வீட்டுத் திண்ணையில் உறங்கினார். அன்று புனிதமான துவாதசி நாள். திடீரென ஒரு முனிவர் அவரை ‘‘அன்னமாச்சார்யா...’’ என்று அழைத்தார். ஆச்சர்யப்பட்டுக் கேட்டபோது, அவர் தன் பெயர் ‘‘கண விஷ்ணு’’ என்றும் நேற்று இரவில் என் கனவில் பெருமாள் தோன்றி உனக்கு வைணவ னுக்குரிய பஞ்சசமஸ்காரம் செய்து வை என்று கூறினார். அதனால்தான் இங்கு வந்தேன் என்றார்.

காலையில் அன்னமாச்சார்யாவை சுவாமி புஷ்கரணியில் நீராடவைத்து, அவரது இரு கை களிலும் சங்கு, சக்கரம் இலச்சினைகளைப் பொறித்தனர். வைணவர்களுக்கே உரிய சரணா கதித் தத்துவத்தையும் உபதேசித்தார். அன்னமாச் சார்யா வேங்கடவனின் மீது பூரண பக்தியில் ஈடுபட்டுத் திருமலையிலேயே தங்கிவிட்டார்.

புல் அறுக்கப் போன அன்னமாச்சார்யா வீடு திரும்பவில்லையே என்று அவரது பெற்றோர்கள் அவரைத் தேடினார்கள். திருமலையில் அவர் இருப்பதாக அறிந்து அங்கு வந்து, ‘‘நீ ஊருக்கு வந்துவிடு. உனக்கு எந்தவிதமான தொந்தரவு



களும் தரமாட்டோம்’’ என்றனர்; ஊருக்குத் திரும் பிய அவருக்குத் திருமலம்மா, அக்கலம்மா என்ற இரு பெண்களைத் திருமணம் செய்து வைத்தனர்.

அப்பொழுது அஹோபில மடத்தை நிறுவிய பரம வைணவரான ஆதி வன்சடகோப முனி வரைச் சந்தித்த அன்னமாச்சார்யா, அவரிடம் வேதாந்தப் பாடங்களைக் கேட்டுத் தெரிந்துக் கொண்டார். ஆழ்வார்களின் பாடல்களையும் வால் மீகி இராமாயணத்தையும் அறிந்து கொண்டு பாடல்களைப் பாடிப் பலரையும் பரவசத்தில் ஆழ்த் தினார். அதனால் அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது.



அப்பொழுது ‘டங்குடூர்’ என்ற ஊரில் சாளுக்கிய மன்னர் நரசிம்ம ராயர் என்ற சிற்றரசர் இருந்தார். அவர் அன்னமாச்சார்யாவை அழைத்துத் தமது அரசவையில் அமைச்சராக வேண்டும் என்று தெரிவித்தார். அன்னமாச்சார்யா அதை ஏற்றுக் கொண்டார். அரசருக்குக் குருவாகவும், அமைச்சராகவும் பணியாற்றிச் சிறந்த நிர்வாகத்தை வழங்கினார்.

சிற்றரசராக இருந்த நரசிம்ம ராயர் பெனுகொண்டா பேரரசுக்கு அதிபரானார். அந்தச் சிறப்பு அன்னமாச்சார்யாவால்தான் வந்தது என்று நம்பி அவருக்குத் தனது அரண்மனைப் பக்கத்திலேயே ஒரு மாளிகையைக் கட்டி, அதை அன்னமாச்சார்யாவிற்கு வழங்கினார்.

அரசர் அவருக்கு நிறையப் பரிசுப் பொருள்களை வழங்கினார். ஓர் அரசவையில் சுவாமி தன்னைப் பாராட்டித் தன்மீது பாடல்கள் பாட வேண்டும் என்றார். உடனே அன்னமாச்சார்யா எழுந்து, ‘நான் வேங்கடநாதனைத் தவிர மானிடனைப் பாடமாட்டேன்’ என்று கூறினார்.

கோபம் கொண்ட மன்னர் அவரைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். அவரது கைகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு விலங்குகள் பூட்டப்பட்டன.

தனக்கு நேர்ந்த கதியைக் கண்டு வேங்கட நாதன் மீது பாடல்களைப் பாட, பூட்டப்பட்டிருந்த விலங்குகள் தெறித்து விழுந்தன. அதைக் கண்ட மன்னர், அவரது கால்களில் விழுந்து தன்னை மன்னிக்குமாறு வேண்டினார்.

அன்னமாச்சார்யாவை ஒரு பல்லக்கில் அமர வைத்து, அதைத் தானும் ஒருவராகத் தூக்கி நகரில் ஊர்வலம் கொண்டு சென்றார். அன்னமாச்சார்யாவிற்கு ஒரு கிராமத்தை உடைமையாக்கினார்.


மன்னருக்குப் பல நல்ல வழிமுறைகள் சொல்லி, தமது பதவியை விட்டு விலகி, திருமலைக்குச் சென்றுவிட்டார். அங்கே தினமும் பெருமாள்மீது பாடல்கள் பாடினார். திருமலைக்கு வந்த புரந்தரதாசர் அன்னமாச்சார்யாவைச் சந்தித்து இருவரும் பெருமாளுக்குப் பல பாடல்களைப் பாடினர்.

திருமலையில் அன்னமாச்சார்யா பெருமாள் மீது 32000 பாடல்கள் பாடினார். அவரது புகழ் நாடெங்கும் பரவியது. பக்தர்கள் அவரது பாடல்களை விரும்பிக் கேட்டார்கள். அவர் பாடிய பாடல்களில் 13735 பாடல்கள் மட்டுமே மிஞ்சி உள்ளன. அவை செப்புப் பட்டயத்தில் எழுதப்பட்டுக் கோவிலில் கல் அறையில் வைக்கப்பட்டுள்ளன.

புகழோடும் பெருமையோடும் வாழ்ந்த அன்னமாச்சார்யா, தனது 95–வது வயதில் 4.4.1503 ஆம் ஆண்டு வேங்கடநாதனின் திருவடிகளைச் சரணடைந்தார். அவருடைய பெருமையையும், புகழையும் போற்றும் வகையில் திருமலையில் உள்ள தலைமை அஞ்சலகத்திற்கு அவர் உருவம் தாங்கிய சிறப்பு அஞ்சல் முத்திரை போடப்படுகிறது.

அன்னமாச்சார்யாவின் வாழ்க்கை வரலாறு ‘அன்னமய்யா’ என்ற பெயரில் தெலுங்குத் திரைப்படமாக வெளியானது. தெலுங்குத் திரைப்பட வரலாற்றில் அதிக வசூல் சாதனைப் படைத்துள்ளது.

அவருடைய பாடல்களுக்குக் கடையநல்லூர் வெங்கட்ராமன் இசை அமைத்துள்ளார். “பிரம்மன் ஒக்கட்டே” என்ற பாடலைப் பாரத ரத்னா எம்.எஸ். சுப்புலட்சுமி பாடியுள்ளார். அந்தப் பாடல் பல லட்சம் ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்டது.



உடலைக் குண்டாக்கும் காரணிகள் 3

ஓர் இளைஞர் என்னைத் தேடி வந்தார். 'உடம்பைக் குறைப்பதற்கு ஏதாவது மருந்து அல்லது மாத்திரை கொடுங்கள்' என்று கேட்டார். 'நீ உன் உயரத்திற்கு ஏற்ற சரியான எடையில் இருப்பது நன்றாகவே தெரிகிறது. பிறகு ஏன் உடம்பைக் குறைக்க வேண்டும்' என்று சொல்கிறாய்?' என்று கேட்டேன்.

'மருந்து எனக்கு இல்லை டாக்டர். எனது அப்பாவுக்கு. அவருக்கு 52 வயதாகிறது. கிட்டத்தட்ட 109 கிலோ இருக்கிறார். நடந்து செல்ல ரொம்பவும் சிரமப்படுகிறார். அதனால் அவருக்குத்தான் மருந்து வாங்க வந்தேன்' என்று சொன்னார்.

'மருத்துவமனைக்கு வரமுடியாத அளவுக்கு மிகவும் மோசமான நிலையிலா இருக்கிறார்?' என்று கேட்டதும், 'அதெல்லாம் இல்லை டாக்டர். எதுக்குத் தேவையில்லாம அலையணும், நீ போய் என் எடையைச் சொல்லி மருந்து வாங்கிட்டு வான்னு அவர்தான் சொல்லி அனுப்பினார்' என்று சொன்னார்.

என்னை மீறி எனக்குப் புன்னகை வந்துவிட்டது. 'மருத்துவமனைக்கு வந்து மருந்து வாங்குவதற்குக்கூட அசட்டையாக இருப்பதுதான் உன் அப்பாவுக்கு இருக்கும் முக்கியப் பிரச்சனையாக இருக்கும். வாக்கிங், ஜாக்கிங் என்று எந்தப் பயிற்சியும் செய்ய மாட்டார்தானே' என்று கேட்டதும், 'ஆமாம் டாக்டர், காலையில் ஆட்டோவில் ஏறி எங்கள் ஹோட்டலில் இறங்கினால், அதன் பிறகு இரவுதான் வீட்டுக்கு ஆட்டோவில் வருவார். கல்லாப்பெட்டியில்தான் உட்கார்ந்து இருப்பார். நடப்பதற்கு விரும்பவே மாட்டார்' என்று மேலும் விளக்கமாகச் சொன்னார்.

'சரிப்பா, நீ எப்படியாவது உன் அப்பாவை அழைத்துவா, அவரை நேரில் பார்க்காமல் எந்த மருந்தும் கொடுக்க முடியாது. காலதாமதம் செய்வது சிக்கலாகலாம்' என்று விளக்கமாகச் சொல்லி அனுப்பிவைத்தேன்.

உடல் பருமனால் பாதிக்கப்பட்ட நிறையப்பேர் இவரைப் போன்றே சோம்பேறிகளாகத்தான் இருக்கிறார்கள். நடைப்பயிற்சி செய்வதற்குக்கூடத் தயங்குகிறார்கள்.

மரபணுக்களால் வரும் எடை : கிட்டத்தட்ட 25 சதவீதம் பேர் பாரம்பரிய ஜீன் குறைபாடு மூலம் பாதிக்கப்பட்டவர்களாக அறியப்படுகிறார்கள். அதனால் உடல் பருமன் உள்ள யாரைப் பார்த்தாலும், அவர்கள் வாயைக் கட்ட முடியாதவர்கள், உடற்பயிற்சி செய்யாத சோம்பேறிகள் என்று முத்திரை குத்திவிடக் கூடாது. பரம்பரைத் தன்மையினால் உடல் பருமன் பிரச்சனைக்கு ஆளானவர்களாகவும் அவர்கள் இருக்கக்கூடும்.

மரபணுக்களால் உடல் பருமன் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிந்தாலும், எடையைக் கட்டுப்படுத்தும் ஆசையும், அக்கறையும் வரவேண்டும். உடல் எடையைக் குறைப்பதற்கான வழியைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

உணவு தரும் ஆபத்து : உடல் பருமன் உள்ளவர்களிடையே உணவுப் பழக்கம் முக்கியப் பங்கு வகிக்கவே செய்கிறது. பசி இருக்



டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத்

கிறதோ, இல்லையோ எதையாவது கொறித்துக் கொண்டே இருக்கும் பழக்கம் நிறையப் பேரிடம் இருக்கிறது.

அதேபோல் வாரத்தில் இரண்டு நாட்களாவது குடும்பத்தோடு ஹோட்டலுக்குப் போய் விதவித மாகச் சாப்பிடும் பழக்கம் அதிகரித்து வருகிறது. பிள்ளைகள் நன்றாகச் சாப்பிட வேண்டும் என்று ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை ஏதாவது பழம், ஜூஸ், சூப், ஸ்நாக்ஸ் எனக் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள். இப்படி எல்லாம் சாப்பிடு பவர்கள் நிச்சயம் உயரமாக வளர மாட்டார்கள். அதற்குப் பதிலாக அகலமாக வளர்ந்துகொண்டே போவார்கள்.

அநேகமாக எல்லாக் குடும்பப் பெண் களிடமும் ஒரு பழக்கம் இருக்கிறது. அதாவது, வீட்டில் மிச்சம் மீதியாக இருக்கும் உணவை வீணடிக்க மனசு வராது. மற்றவர்கள் பழைய உணவைச் சாப்பிட மாட்டார்கள் என்பதால், மீதம் இருக்கும் எல்லாவற்றையும் தங்கள் வயிற்றுக்குள் கொட்டிக் கொள்வார்கள். குப்பையில் போடு வதற்கு மனமின்றி ஏகப்பட்ட உணவுகளை வயிற் றுக்குள் தள்ளுவதால், வயிறும் குப்பைத்தொட்டி போன்று பிதுங்கிக் கொண்டுதான் இருக்கும்.

சாப்பிட்டுக் கொண்டே தொலைக்காட்சித் தொடர் பார்க்கும் பெண்கள் ஏராளமான எண்ணிக்கையில் இருக்கிறார்கள். தொடர் பார்க்கும் மும்முரத்தில் எவ்வளவு சாப்பிடுகிறோம் என்பதை அந்தப் பெண்களே அறிவதில்லை. சீரியல் பார்த்தபடி சாப்பிட்டுக்கொண்டே இருப் பார்கள். திடீரெனப் பானையில் இருக்கும் உணவு முழுமையாகக் காலியான பிறகுதான் கணவருக் கும், குழந்தைக்கும்கூட இல்லாமல் முழுமையாகச் சாப்பிட்டதை உணர்வார்கள்.

இளைஞர்களிடம் ஒரு கெட்ட பழக்கம் உண்டு. எப்போது யாரைச் சந்தித்தாலும் கையில் கோக், பெப்சி முதலிய பானங்களைக் குடித்துக் கொண்டேதான் பேசுவார்கள். நம் நாட்டுக் கலா சாரத்திற்குக் கொஞ்சமும் சம்பந்தமில்லாத உணவு வகைகளை மட்டுமே எடுத்துக் கொள்வார்கள். இதுபோன்று இயல்பாகச் செய்யும் பல்வேறு விஷயங்கள் உடல் பருமனை உருவாக்குவதற்கு முக்கியக் காரணங்களாக இருக்கின்றன.

கலோரி அளவு : நாம் உண்ணும் உணவி னால் கிடைக்கும் சக்தியை அளக்கும் ஓர் அளவு கலோரி எனப்படுகிறது. நாம் உட்கொள்ளும் ஒவ்வொரு உணவிலும் குறிப்பிட்ட அளவு கலோரி இருக்கிறது. அதேபோல் செய்யப்படும் ஒவ்வொரு வேலையிலும் குறிப்பிட்ட அளவு கலோரி எரிக்கப்படுகிறது. அதனால் உடம்புக்கு எத்தனை கலோரி வேண்டும் என்பதைத் தெரிந்து கொள் வது அவசியம்.

கர்ப்பிணிகளுக்கும், சிறியவர்களுக்கும் மட்டும்தான் உடலுக்கு மீறிய கலோரி தேவைப் படும். மற்றவர்கள் தங்கள் உடலுக்குத் தேவை யான அளவு மட்டுமே கலோரி எடுத்துக்கொள்ள வேண்டும்.


எப்படிச் சாப்பிட வேண்டும்? : உடல் பெருத்து விடக் கூடாது என்பதற்காக ஏதாவது ஒரு நேரம் சாப்பிடுவதைத் தவிர்ப்பது, உடல் பருமனுக்கு முக்கியக் காரணமாகத் திகழ்கிறது. உடலுக்குத் தேவையான அளவு கலோரி கிடைக்காத பட்சத் தில், உடலில் வளர்சிதை மாற்றம் ஏற்படுவதால் உடல் பருமன் அடைகிறது.

உடலுக்கு 100 கலோரி தேவை என்றால், ஒரு வாழைப்பழம் மூலம் அதனைப் பெறுவதற்கு முயற்சிக்கலாம். அப்படியின்றி 100 கலோரியை வாழைக்காய் பஜ்ஜி மூலம் பெற்றுக்கொள்ள முடிவு செய்தால், இதுவும் சிக்கலை உருவாக்கி உடல் பருமனுக்கு ஆதாரமாகிவிடும்.

வியர்வை சொட்டச் சொட்ட காலையில் ஜாகிங் செய்துவிட்டு, அதே ஜோரில் ஹோட்டலில் போய் உருளைக்கிழங்கு போண்டா, சர்க்கரைப் பொங்கல், ஒரு காபி என்று வெட்டினால், உடற் பயிற்சி செய்ததற்கான பயன் இல்லாமல் போய் விடும்.

தினமும் காலையில் அரை மணி நேரம் தவறாமல் நடைப்பயிற்சி மேற்கொள்கிறேன். என்றாலும் உடல் பெருத்துக்கொண்டே போகிறது என்று சொல்பவர்கள் உண்டு. இதற்குக் காரணம் தினமும் அரை மணி நேரப் பயிற்சி உடலுக்கு போதுமானதாக இல்லை என்பதுதான். வெவ்வேறு வகையினில் உடற்பயிற்சி செய்து கலோரிகளைக் கரைக்க வேண்டுமே தவிர, ஒரே மாதிரியான உடற்பயிற்சிகளைத் தொடர்ந்து செய்வதால் மட்டும் உடல் எடை குறைவதில்லை.

மூன்று நேரமும் கட்டாயம் சாப்பிட வேண்டும் என்பதைவிட, பசிக்கும்போது சாப்பிட்டால் ஜீரணப் பிரச்சனை இல்லாமல் முழுமையான கலோரி



களைப் பெற்றுக்கொள்ள முடியும். முன்பு சாப்பிட்ட உணவு செரிக்காதபட்சத்தில் மீண்டும் மீண்டும் உணவு உண்பதால் உடல் பருமன் ஏற்படுகிறது.

உணவை எப்போதும் நன்றாக மென்றுதான் சாப்பிட வேண்டும். அதனால் எச்சில் கலந்து உணவை விழுங்கினால்தான் ஜீரணம் எளிதாக நடக்கும். எச்சில் கலக்காத உணவு செரிப்பதற்குச் சிரமப்படுகிறது.

பொதுவாகத் தங்களுக்கு என்ன சுவை பிடிக்கிறதோ, அந்த வகையான உணவை மட்டுமே நிறையப்பேர் எடுத்துக் கொள்கிறார்கள். இது சரியான உணவுப் பழக்கம் கிடையாது. இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, காரம், கசப்பு, துவர்ப்பு ஆகிய அறுசுவைகளும் கலந்த உணவை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நம் உடலுக்குத் தேவையான அனைத்துச் சத்துக்களும் கிடைக்கும்.

அதேபோல் உடலுக்குப் போதுமான அளவு தண்ணீர் அருந்துவதும் அவசியம். அப்போதுதான் கொழுப்பு எரிக்கப்பட்டு உடல் எடை அதிகரிக்காமல் இருக்கும்.

கொழுப்பு ஆபத்தானது என்பது உண்மை என்றாலும், அதனை முழுமையாகப் புறக்கணிக்கக்கூடாது. ஏனெனில், நமது உடலுக்குக் கொழுப்புச் சத்தும் அவசியம் தேவையே. அதனால் கெட்ட கொழுப்பு எது என்பதை மட்டும் கண்டறிந்து விலக்க வேண்டும்.

கொழுப்பைக் குறைக்கும் உணவுப் பொருள்கள் : காலை என்றால் இட்லி அல்லது தோசை என்பதுதான் பெரும்பாலான வீடுகளில் மெனுவாக இருக்கிறது. இரண்டு நாட்களாவது மாற்றுத் தானியங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். காலையில் ஓட்ஸ் எடுத்துக் கொள்வது நல்லது. கம்பு, சோளம், தினை முதலிய சிறு தானியங்களை வாரம் ஒரு நாளாவது காலை உணவாகப் பயன்படுத்துவது நல்லது.

ஓட்ஸ் மற்றும் சிறுதானியங்களில் நார்ச்சத்து அதிகம் இருப்பதால், உடலில் தங்கியிருக்கும் கொழுப்பின் அளவைக் குறைக்க உதவுகிறது. இதுபோல் பார்லியும் கொழுப்புக்கு எதிராக வினையாற்றுவதால், அவ்வப்போது பார்லியைப் பானமாக அல்லது சிற்றுண்டியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

கத்தரிக்காய், வெண்டைக்காய், முட்டைக்கோஸ், ஃப்ரோகோலி, பூண்டு, வெங்காயம், மிளகாய் முதலியவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தும் போது, உடலில் கொழுப்புச் சத்து விரைந்து குறைகிறது. மேலும் இவற்றில் கலோரி குறைவாகவே இருப்பதால் நிறையவே எடுத்துக் கொள்ளலாம். பசலைக் கீரையில் கொழுப்புக்கு எதிராகச் சத்துக்கள் நிறைந்திருப்பதால், வாரம் ஒரு முறை எடுத்துக் கொள்வது மிகவும் நல்லது.

பழங்களைப் பொறுத்தவரை ஆப்பிளில், கரையக்கூடிய நார்ச்சத்து அதிகம் உள்ளது. இது தவிர ஆரஞ்சு, எலுமிச்சை, பப்பாளி, தர்பூசணி முதலிய பழங்களும் கொழுப்புக்கு எதிராகவே போராடும் தன்மை வாய்ந்தவை.

அசைவத்தில் மீன் மட்டுமே சிறந்த முறையில் கொழுப்புக்கு எதிராகப் போரிடுகிறது. குறிப்பாக, சால்மன் மீன் சாப்பிடும்போது உடலில் இருக்கும் கெட்ட கொழுப்பு தானாகவே குறைகிறது. சாக்லேட், பிஸ்கட், ரொட்டி, ஐஸ்கிரீம், ஃபாஸ்ட் ஃபுட் உணவுகள் மற்றும் எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவு வகைகளில் கொழுப்புச் சத்து நிரம்பியிருப்பதால், இவற்றைக் குறைவாகவே உட்கொள்ள வேண்டும்.

வயதால் வரும் தொந்தரவு : அதிகப்படியான உடல் பருமன் 40 வயதுக்கு மேற்பட்டவர்களையே அதிகம் தாக்குகிறது. பொதுவாகவே, வயதாகும் போது உடல் தசைகள் சுருங்கத் தொடங்குகின்றன. உடல் உழைப்புக் குறைகிறது. அதோடு ஜீரண சக்தியிலும் குறைபாடு ஏற்படுகிறது. அதனால் உடலில் கலோரிகள் எரிக்கப்படுவது குறைந்து, வழக்கத்தைவிட அதிகமாகச் சேமிக்கப்படுகிறது. செலவழிக்காத கலோரிகள் உடல் எடையை அதிகரிக்கின்றன. அதனால் வயதாகும் போது எடுத்துக் கொள்ளப்படும் உணவின் அளவைக் குறைக்கவில்லை என்றால், நிச்சயம் உடல் பருமன் பிரச்சனைக்கு ஆளாக நேரிடும்.

பெண்களைவிட, ஆண்களே வயது காரணமான உடல் பருமன் பிரச்சனைக்கு ஆளாகிறார்

கள். ஏனென்றால் பெண்களுக்குச் சமையல், வீடு பராமரிப்பு, குழந்தை கவனிப்பு முதலிய பல்வேறு பணிகள் எப்போதும் இருக்கின்றன. அதனால், அவர்களுக்கு அதிகப்படியாகக் கலோரி தானாகவே செலவாகிறது. ஆனால், ஆண் களுக்கு அவர்களது பணி தவிர, வேறு வகையில் கலோரி செலவழிய வாய்ப்பில்லை என்பதால், அதிகம் பாதிப்புக்கு ஆளாகிறார்கள்.

ஹார்மோன் குறைபாடு : மெனோபாஸ் காலத்தில் பெண்களுக்கு ஈஸ்ட்ரோஜன் மற்றும் புரோஜெஸ்ட்ரான் ஹார்மோன் சுரப்பும் குறைந்து விடுகிறது. இந்த ஹார்மோன் சுரப்பு குறைவதால் கலோரிகளை எரிப்பது குறையத் தொடங்குகிறது. அதனால் கலோரிகள் கொழுப்பாக மாறி உடல் பருமனை உண்டாக்குகிறது. அதனால் ஆரம்பக் கட்டங்களிலேயே ஹார்மோனுக்கான சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால் உடல் பருமன் அபாயத்திற்கு அதிகபட்ச வாய்ப்பு உண்டாகிறது.

இன்சுலின் சுரப்பு : உண்மையில், இன்சுலின் என்பது ஒரு வகையான ஹார்மோன். கணையத்தில் உள்ள பீட்டா செல் இன்சுலினைச் சுரக்கிறது. இரத்தத்தில் குளுக்கோஸ் அளவைச் சரியான அளவில் வைத்துக் கொள்வதற்கு இன்சுலின் உபயோகப்படுகிறது.

இந்த இன்சுலின் இரத்தத்தில் கலந்து ஒவ்வொரு செல்லுக்கும் செல்கிறது. இதனால் இரத்தத்தில் உள்ள குளுக்கோஸ் சக்தியாக மாற்றப்பட்டு உடல் செயல்பாட்டுக்குத் துணை புரிகிறது. ஏதேனும் காரணங்களால் கணையம் பாதிக்கப்பட்டு இன்சுலின் சுரப்புச் சிக்கலாகும்போது, இரத்தத்தில் குளுக்கோஸ் அளவு அதிகரிக்கிறது. இதனால் நீரிழிவு நோய் உண்டாகிறது.

இந்த குளுக்கோஸ் அளவு அதிகரிக்கும் போது கொழுப்பாக மாறி உடலில் தங்கிவிடுகிறது. அதிகப்படியான கொழுப்புச் சேர்வது உடல் எடையை அதிகரிக்கிறது. அதனால்தான் நீரிழிவு நோயாளிகளில் பெரும்பாலோர் உடல் பருமன் பிரச்சனையால் அவதிப்படுகிறார்கள்.

மருந்துகள் ஜாக்கிரதை : தொடர்ச்சியாக எடுத்துக்கொள்ளப்படும் ஒரு சில மருந்துகள் உடலில் எடை கூடுவதற்குக் காரணியாக அமைவதுண்டு. குறிப்பாக கர்ப்பத்தடை மாத்திரை, ஸ்டீராய்டு முதலியவை உடலின் கலோரி எரிக்கும் திறனைக் குறைக்கின்றன. தொடர்ந்து ஸ்டீராய்டு பயன்படுத்தும்போது, உடலில் பல்வேறு இடங்களில் கொழுப்புச் சேர்ந்து உடல் எடை அதிகரிப்பதற்குத் துணை செய்கிறது. மன அழுத்தம், மனத்தளர்ச்சி முதலிய பிரச்சனைகளுக்காக எடுத்துக்கொள்ளும் மருந்துகளும் உடல் எடையில் தாக்கத்தை உருவாக்கலாம்.

வாழ்க்கை முறை : உட்கார்ந்த இடத்தில் இருந்தபடியே காலை முதல் இரவு வரை கம்ப்யூட்டர் பணியில் இருப்பவருக்கு எழுந்து நடப்பதற்கும், ஓடியாடுவதற்கும் தேவை இருப்பதில்லை. இந்த வகையினருக்கு உடல் எடை அதிகரிப்பதற்கு ஏகப்பட்ட வாய்ப்புகள் இருக்கின்றன. இவர்கள் அவ்வப்போது எழுந்து நடப்பது, குறைவாகச் சாப்பிடுவது, குறைந்தது அரை மணி நேரமாவது உடற்பயிற்சி செய்வது முதலியவை உடல் பருமன் அபாயத்தைக் குறைக்கின்றன.

எப்படிப்பட்ட வேலைப்பளுவாக இருந்தாலும், காலாற நடந்து, முடிந்தவரை கலோரியை எரிப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதேபோல் வீட்டில் தொடர்ச்சியாக 3 மணி நேரம் தொலைக்காட்சி பார்க்கும் பெண்களுக்கும் உடல் எடை கூடுவதற்கு அதிகமான வாய்ப்பு உண்டு.

உறக்கம் அவசியம் : தூக்கமின்மையாலும் தேவைக்கும் அதிகமாகத் தூங்குவதாலும் உடல் எடை அதிகரிப்பதற்கு வாய்ப்பு உண்டு. போதுமான அளவு தூங்குபவர்களுக்கு அதிகப் பசி இருப்பதில்லை. குறைவான தூக்கம் அல்லது அதிகமாகத் தூங்குபவர்களுக்கு ஹார்மோன் தூண்டுதல் குழப்பமாகி, பசியை அதிகப்படுத்துகிறது. இதனால் உடல் எடை அதிகரிக்கத் தொடங்குகிறது.


குறைந்த அளவு மட்டுமே தூங்குபவர்களுக்கு நீரிழிவு, இரத்த அழுத்தம் முதலிய பிரச்சனைகள் தோன்றுவதற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, தினமும் குறைந்தது ஆறு முதல் ஏழு மணி நேரம் தூங்க வேண்டும். அதேபோல் சிகரெட் பிடிப்பவர்கள், மதுக் குடிப்பவர்களுக்கு ஹார்மோன் மாற்றம் காரணமாகவும் உடல் பருமன் அதிகமாகிறது. எனவே, உடல் பருமன் அதிகரிக்காத வகையில் நமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வது அவசியம். ●

கட்டுரை

தமிழர்களுடைய வாழ்வில் ஆளுமைபெற்ற ஊடகமாகிவிட்டது திரைப்படம்! படங்கள் சில வாரங்கள் ஓடிப் பெட்டிக்குள் அடங்கிவிட்டாலும், பாடல்கள் சாகாவரம் பெற்றவையாக நம் காது களில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. படங்கள் சில வாரங்கள் ஓடிப் பெட்டிக்குள் அடங்கிவிட் டாலும், பாடல்கள் சாகாவரம் பெற்றவையாக நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

படங்கள் பிடிக்கவில்லை என்று கண்ணை மூடிக்கொண்டாலும், பாடல்கள் பிடிக்கவில்லை என்று காதை மூட முடியாது அல்லவா! அந்தப் பாடல்களில் நம் சிந்தையையும் செவியையும் சிலிர்க்க வைக்கும் பாடல்களைத் தீட்டியவர் தேனி சைக்கவிஞர் அ. மருதகாசி எனலாம்.

அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ் 3000 பாடல்கள். ஆனால் கிடைத்திருப்பவை 1304 மட்டுமே. அதுபோல மருதகாசியார் பாடியவை 3000 என்றாலும், கிடைத்திருப்பவை 331 பாடல் கள் மட்டுமே!



கவிஞர் மருதகாசி

மனதில் நிற்கும் மகாக்கவிஞர்

மருதகாசி

வயலும் வயல்சார்ந்த இடத்தைப் பாடுவதில் வல்லவர் மருதன் இளநாகனார். அதனால் கலித் தொகையில் மருதத் திணைக்கு மருதன் இள நாகனாரின் பாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

திரைத்துறையில் உழவுத்தொழிலை ஆழமா கவும் அகலமாகவும் உழுதவர் மருதகாசி என்பத தால், அவருடைய பெற்றோர்கள் இடுகுறிப் பெய ராகவே 'மருதகாசி' என்ற பெயரைத் தம் பிள் ளைக்குச் சூட்டியிருக்கிறார் கள். ஓலைகளுக்கு இடை யில் உறங்கிக்கிடந்த தமிழை ஓலைக்குடிசையில் உறங்கிக் கிடந்த வயிறு காய்ந்தவனுக் கும் கொண்டு சேர்த்தவர் அ. மருதகாசி.



பேரா. தி. இராசகோபாலன்

கவிஞர் மருதகாசி திருச்சி மாவட்டத்தில் கொள்ளிடக் கரையிலுள்ள மேலக்குடிகாடு என் னும் சிற்றூரில் அய்யம்பெருமாள் – மிளகாயி தம்பதியருக்கு 13.02.1920–இல் மகனாகப் பிறந் தார். குடந்தை பாணாதுறை உயர்நிலைப் பள்ளி யில் பள்ளிக் கல்வியை முடித்த பிறகு குடந்தை அரசுக் கல்லூரியில் இண்டர்மீடியட் படிப்பையும் முடித்தார். காவிரி ஆற்றுநீர் ஓசை அவருடைய ஜீவ னில் நாதத்தையும் கீதத்தையும் சுதி சேர்த்தன.

எம்.எஸ். சுப்புலட்சுமி பாடிய "குக சரவணபவ சிவபாலா" எனும் இசைத்தட்டைக் கேட்டுவிட்டு, அதே மெட்டில் "கலைமகள் உறைந்திடும்" கலா சாலை எனத் தொடங்கும் கீர்த்தனையைப் பாடி னார். திரைத்துறையில் கவிதைத் தேரோட்டிக் கலக்கியவர், சொந்தக் கிராமத்தில் ஏர் ஓட்டுவதி லேயும் இன்பம் கண்டார். கவிஞர் மருதகாசி அவர்கள் தனக்கோடி எனும் மங்கையை மனைவி யாகப் பெற்று ஒன்பது குழந்தைகளுக்குத் தந்தை ஆவார்.

தொடக்கத்தில் தேவி நாடகசபாவில் சேர்ந்து பாத்திரத்திற்கேற்ற பாடல்களையும் தீட்டினார்;

பாத்திரத்திற்கேற்றவாறு அரிதாரத்தையும் ஏந்தி நடிக்கவும் செய்தார். ஏ.கே. வேலனுடைய “சூறா வளி” நாடகத்திற்கும் அரு. இராமநாதனுடைய “வானவில்” நாடகத்திற்கும் இவர் எழுதிய பாடல்கள் திரையுலகத்தில் வாசல்களைத் திறக்கச் செய்தன.

1949–ஆம் ஆண்டு மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரம் தயாரித்த “மாயாவதி” எனும் படத்திற்குப் பாடல் தீட்டியவர் 1978–ஆம் ஆண்டு வெளிவந்த “தாய் மீது சத்தியம்” படம்வரைக் கோலோச்சி நின்றார். “நீலவண்ணக் கண்ணா வாடா! நீயொரு முத்தம் தாடா” எனும் பாடலைக் குழந்தையைப் பெற்ற எந்தத் தந்தையும் ஒருமுறை உச்சரித்திருப்பான்.

திரைப்படப் பாடலாசிரியர்களில் மருதகாசி அவர்கள் மட்டும் இன்றைக்கும் நங்கூரம் பாய்ச்சி நிற்பதற்குக் காரணம், அவர் இந்த மண்ணின் மணம் அறிந்து பாடினார்; மானுடத்தின் நாடி பிடித்துப் பாடினார். துட்டுக்காகவும் மெட்டுக்காகவம் பாட்டு எழுதாமல், பாமர மக்களின் ஏக்கத்திற்கும் ஆக்கத்திற்கும் எழுதினார்.

அவருடைய பாடல்களில் சங்கத்தமிழின் சாரமும் இருக்கின்றது; நாட்டுப்புறப் பாடல்களின் சந்தமும் இருக்கின்றது. அதனால் காவியக் கவிஞர் வாலி அவர்கள் “செய்ய நற்றமிழின் சீர்த்திகள் அனைத்தும் சிந்துகள் மூலம் செப்பிய மேதை” என மருதகாசியைப் பாராட்டினார்.

இந்திய விடுதலைக்குப் பிறகு



எம்.எஸ். சுப்புலட்சுமி

வயலில் குனிந்த விவசாயியின் வாழ்க்கை நிமிர வேயில்லை. “ஏர் முனைக்கு நேரிங்கே எதுவுமே யில்லே, என்றும் நம்ம வாழ்விலே பஞ்சமே இல்லே” எனக் கவிஞர் “பிள்ளைக் கனியமுது” படத்திற்கு எழுதிய பாடல்தான் விவசாயி வர்க்கத்திற்குக் குளுகோஸ் கொடுத்து எழுந்து நிற்கச் செய்தது.

அந்தப் பாடலில் வயலில் முற்றி அறுவடைக்குக் காத்திருக்கும் நெற்கதிரை ஒரு மணப்பெண்ணாகப் பாவித்துப் பாடியிருக்கும் பாங்கு இன்றைக்கும் நம் மனத்தை வருடிக் கொண்டிருக்கிறது.

“வளர்ந்து விட்ட பருவப்பெண்போல் உனக்கு
வெட்கமா? தலை
வளைஞ்சு சும்மா பாக்கிறியே தரையின்
பக்கமா – இது
வளர்த்துவிட்ட தாய்க்குத் தரும் ஆசை
முத்தமா? என்



மனைக்கு வரக் காத்திருக்கும் நீ
என் சொத்தம்மா”

எனும் பாடல் தமிழுக்குப் புதுக்கணக்கு எழுதிய பாடல் ஆகும்.

விவசாயத்திற்குத் தம் பாட்டு வயலில் எரு விட்டு, ஏர் ஓட்டி, நீர்பாய்ச்சி விவசாயிகளின் முன்னேற்றம் எனும் கதிரை அறுவடை செய்தவர் மருதகாசி. “விவசாயி... விவசாயி! கடவுள் எனும் முதலாளி கண்டெடுத்த தொழிலாளி விவசாயி; என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்! ஒழுங்காய்ப் பாடுபடு வயற்காட்டில்; உயரும் உன்மதிப்பு அயல்நாட்டில்” என விவசாயிகளுக்காகச் சிங்கக் கர்ஜனை செய்தவர் மருதகாசி.

மருதகாசியாரின் பாடல்களில் சமூகப் பொறுப்புணர்ச்சியைக் கண்ட ஏ.கே. வேலன் “விலைக்கு எழுதும் வியாபார நோக்கு அவருக்கு இல்லை; கலைக்கு எழுதும் கற்பனைப் போக்கு



பற்றி, அவரே

“இனிய குரலில் குயில்போலே
இசையும் அழகாய்ப் பாடுகிறான்!
எருதுகள் போல வண்டிகளை
இழுத்துக்கொண்டு ஓடுகின்றான்!
வானத்தில் வாழும் பறவைகள் போல்
வானில் பறந்து திரிகின்றான்!
மனிதனாக வாழ மட்டும்
மனிதனுக்குத் தெரியவில்லை”

என ‘‘அழகுநிலா’’ எனும் திரைப்படத்திற்குப் பாடலாகப் பதிவு செய்திருக்கிறார்.



மிக்கவர்’’ எனக் கவிதையின் மூலமே பாராட்டியிருக்கிறார். மருதகாசியின் பாட்டுத்திறத்தைச் செவிமடுத்த எம்.கே. தியாகராஜ பாகவதர் தம் படத்திற்கும் பாட்டு எழுத மருதகாசியை அழைத்தார்.

ஆனால் கவிஞர் அவர்கள் மாடர்ன் தியேட்டர்ஸ் டி.ஆர். சுந்தரம் அவர்களுடைய குத்தகைக்குக் கீழ் இருந்ததால் பாகவதரின் வேண்டுகோளை ஏற்க முடியவில்லை. காரணத்தைக் கேள்விப்பட்ட பாகவதர் உடனே டி.ஆர். சுந்தரத்திற்குத் தொலைபேசியில் பேசினார். பாகவதரே வேண்டியதால் டி.ஆர். சுந்தரம் மருதகாசியாருக்குப் பெருந்தன்மையோடு இசைவு வழங்கினாராம்.

மெட்டுக்குப் (தத்தகாரத்திற்கு) பாட்டு எழுதுவது மற்ற கவிஞர்களுக்குச் சிசேரியன்; ஆனால் மருதகாசியாருக்கு அது சுகப்பிரசவம். இசையமைப்பாளர் பல்லவிக்குரிய மெட்டை ஆர்மோனியத்தில் வாசிக்கும்போதே மருதகாசியார் அனுபல்லவி, சரணத்திற்குரிய மெட்டையும் யூகித்து அவற்றிற்குரிய வார்த்தைகளை அசைபோட்டு விடுவார். மெட்டுக்குப் பாட்டு எழுதுகின்ற நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றபொழுது உடுமலை நாராயண கவியும், கவியரசர் கண்ணதாசனும் மருதகாசியைக் கைகாட்டி விடுவார்களாம்.

திரைத்துறை ஒரு மனிதனுக்குச் செல்வத்தை மட்டுமன்று; செருக்கையும் சேர்த்துத் தந்துவிடும். திரைத்துறையில் வெளிச்சத்திற்கு வந்தவர்களில் சிலர் தங்களைத் தேவகுமாரனாகவே நினைத்துச் செயல்படுவர். ஆனால் கவிஞர் மருதகாசியார் புகழேணியின் உச்சத்தில் இருக்கும்போதும் சராசரி மனிதராகவே நடந்து கொண்டார். மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழாதவர்களைப்

திரைப்படப் பாடலாசிரியர்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நெஞ்சத்தில் நிறைந்து நின்றவர் மருதகாசியார். ‘‘கனவு’’ எனும் திரைப்படத்தில் ‘‘திருநாடு தன்னில் திருவோடு ஏந்தி, தெருவோடு போகும் நிலைமாறிடாது; சீமான்கள் உள்ளம் மாறாதபோது’’ என மார்க்சியப் பார்வையில் ஒரு பாடல் எழுதியிருக்கிறார்.

தொடர்ந்து ‘‘தங்கரத்தினம்’’ எனும் திரைப்படத்திற்கு ‘‘இன்னொருவர் தயவெதற்கு இந்நாட்டில் வாழ்வதற்கு; இல்லை என்ற குறையும் இங்கே இனிமேலும் ஏன் நமக்கு?’’ ஒரு பாடல் எழுதியிருக்கிறார்.

அந்த இரண்டு பாடல்களையும் கேட்ட அண்ணா அவர்கள் கவிஞரை அழைத்து வரச் சொல்லிப் பாராட்டினார். மேலும் கவிஞரின் சோசலிசச் சிந்தனையைப் பாராட்டி ‘திராவிடநாடு’ இதழில் ஐந்து பக்கத்திற்கு ஒரு கட்டுரை எழுதினார் அறிஞர் அண்ணா அவர்கள்.

மருதகாசியாரின் மனிதத்திற்கும் பெருந்தன்மைக்கும் நடந்தவொரு நிகழ்ச்சியைச் சான்றாகச் சுட்டலாம். பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர். நடித்த ‘‘நல்லவன் வாழ்வான்’’ எனும் திரைப்படத்திற்குக்

கே.வி. மகாதேவன் இசையமைப்பில் காவியக் கவிஞர் வாலி, ''சிரிக்கின்றாள் இன்று சிரிக்கின் றாள் சிந்தியக் கண்ணீர் மாறியதாலே'' என்றொரு பாடலை எழுதியிருந்தார். அந்தப் பாடல் எம்.ஜி.ஆர். மனத்திற்கு நிறைவைத் தராததால், மருதகாசியாரை அழைத்துப் பாடல் எழுதும்படி வேண்டினார்.

மருதகாசியார் படத்தொழிற்சாலைக்கு (ஸ்டுடியோ) வந்து வாலியார் எழுதிய பாடலைக் கேட்டு வாங்கிப் படித்துப் பார்த்தபின், காட்சி யமைப்பிற்குரிய கதைப் பின்னலை இயக்குநர் ப. நீலகண்டன் அவர்களிடம் கேட்டு அறிந்துவிட்டு, ''ஐயா! இந்தக் காட்சிக்கு வாலி எழுதியதைவிட வேறு என்ன பாட்டு வேண்டும்? இவன் வார்த் தைப் பிரயோகத்தைப் பார்த்தால், சினிமா உலகில் மிகப்பெரிய ஆளாக வருவான் என்று தோன்று கிறது. அவன் வீட்டு வாசலில் காத்திருந்து பாட்டு வாங்க வேண்டிய கட்டாயம் உங்களுக்கு ஏற்படும். எத்தனை தடங்கல் வந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் வாலி பாடலையே ஒலிப்பதிவு செய்யுங்கள். நன்றாக வளரும் ஒரு கவிஞனின் வளர்ச்சி என்னால் பாதிக்கப்படக் கூடாது ''எனச் சொல்லிப் புறப்பட்டுவிட்டாராம். காவியக்கவிஞர் வாலி திரைத்துறையில் அடியெடுத்து வைக்கும் காலம் என்பது தெரிந்து, ஒரு சக மனிதனுக்கு வாழ்வு கொடுத்த மருதகாசியாரின் மனித நேயத்தை மறக்க முடியுமா?

'கலைவாணர்' என்.எஸ். கிருஷ்ணன் நடித்த ''ராஜா ராணி'' படத்திற்குப் பலவகைச் சிரிப்புக் களைப் பற்றி ஒரு பாடல் வேண்டியிருந்தது. என்.எஸ்.கே.–யின் ஆஸ்தானக் கவிஞர் உடுமலை நாராயணக்கவி அவர்கள் ஒரு வாரம் முயன்றும் பாடல் பிறக்காததால், உடுமலையார் மருதகாசியாரிடம் அப்பாடலைப் பெறும்படிச் சொன்னார்.

உடுமலையாரைத் தம்முடைய வழிகாட்டிய காகக் கருதிய மருதகாசியார், ''சிரிப்பு... இதன் சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பது நமது பொறுப்பு'' எனப் பல்லவியைத் தொடங்கி ஆணவச் சிரிப்பு, அசட்டுச் சிரிப்பு, சாகசச் சிரிப்பு, சங்கீதச் சிரிப்பு முதலிய பல சிரிப்புக்களை அடுக்கி ஒரு பாடலை எழுதித் தந்தார்.

கலைவாணரின் நடிப்பாலும் மருதகாசியாரின் வரிகளாலும் அப்பாட்டு வெற்றிக்கொடி கட்டி இன் றும் பறந்து கொண்டிருக்கிறது. மருதகாசியாரின் கவித்துவத்தில் மயங்கிய கலைவாணர், தம் வாழ்நாள் வரை கவிஞருக்கும் அவருடைய மனை விக்கும் ஒவ்வொரு தீபாவளிக்கும் ஒரு பட்டுவேட்டியும் ஒரு பட்டுப்புடவையும் அனுப்பி வைத்துக் கொண்டிருந்தாராம்.

மருதகாசியாரின் ''வாராய் நீ வாராய்'' எனும் பாடலும் ''மனுசனை மனுசன் சாப்பிடுறான்டா தம்பிப்பயலே'' எனும் பாடலும் ''ஏர்முனைக்கு நேர் இங்கே எதுவுமேயில்லே'' எனும் பாடலும் காற்று உள்ளவரை நம் காதுகளில் ஒலித்துக் கொண்டி ருக்கும்.

இப்படிப் பாடல் உலகில் சரித்திரம் படைத்த மருதகாசியாருக்கு ஒரு நேரத்தில் ஒரு சறுக்கல் ஏற்பட்டது. நயவஞ்சகம் படைத்த நண்பர்கள் கவி ஞரை ஒரு திரைப்படம் எடுக்கும்படியாக வற் புறுத்தி, அவரை மாயவலையில் சிக்க வைத்தனர். கவிஞர் ''அல்லி பெற்ற பிள்ளை'' என்ற தலைப்பில் எடுத்த படம் அதல பாதாளத்தில் அவரைத் தள்ளி யது. பல காலம் தேடிய செல்வம் அனைத்தையும் ஒரு திரைப்படத்தால் இழந்தார்.

கடன்சுமை தாங்க முடியாமல் தான் வசித்த வீட்டையும் விற்றுவிட்டுக் கிராமத்திற்கே போய் விட்டார். ஆறு ஆண்டுகள் கிராமத்திலேயே தங்கி விட்டார். தம்முடைய சொந்த வாழ்வின் சோகத்தை ''ஆனாக்க அந்த மடம் ஆவாட்டி சந் தைமடம்! இதுவும் கூட இல்லாகாட்டி பிளாட்பாரம் சொந்த இடம்'' என 'ஆயிரம் ரூபாய்' எனும் திரைப்படத்தில் பதிவு செய்துவிட்டுக் கிராமத் திற்குப் புறப்பட்டுவிட்டார்.

கவிஞருக்கு ஏற்பட்ட பேரிடரைக் கேள்விப் பட்ட பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். பலரையும் வாழவைத்த வள்ளல் மருதகாசியாரையும் வாழ வைக்க முயன்றார். அதனால் அவர் விற்ற வீட்டை மறுபடியும் விலைக்கு வாங்கிப் பத்திரத்தை மருத காசியாரிடம் ஒப்படைத்தார்.

ஆனால் ஒரு பெருந்தன்மையை இன்னொரு பெருந்தன்மையால் வெல்ல முடியும் என்பதற்கேற்ப மருதகாசியார் பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆருக்கு நன்றி தெரிவித்துவிட்டு, வீட்டுப் பத்திரத்தை வாங்க மறுத்துவிட்டார். அதனால் வள்ளல் எம்.ஜி.ஆர். பல பட வாய்ப்புக்களை மருத காசியாருக்கு உருவாக்கிக் கொடுத்து மறுவாழ்வு தந்தார்.

கவிஞர் மருதகாசியார் எம்.ஜி.ஆருக்கு நன்றி சொல்லும் முகத்தான் ''என்னை வாழ வைத்த தெய்வம் தென்னையைப் போன்ற வள்ளல்! தன்னை நம்பிய என் போன்றோர்க்குத் தாய் தந்தை தமையன் எல்லாம் அவரே'' என ஓர் ஆற்றுப்படையே பாடிவிட்டார்.

பட்டு இழைகளைப் போன்று பாட்டு இழை களைப் பின்னிய கவிஞர் மருதகாசியாரின் நூற் றாண்டு இது. மானுடம் பாடிய அந்த மகாக் கவிஞனுடைய பாடல்கள் காலங்கள் தோறும் புதுப் புது வசந்தங்களைத் தோற்றுவித்துக் கொண்டே இருக்கும். ●

சிறுகதை

நினைவு நல்லறம் வேண்டும்

கீதா சீனிவாசன்



சென்னை மெரினாவின் நீண்ட கடற்கரையை ரசித்தபடி சுந்தரமும், அவர் மனைவி லலிதாவும் நடக்க... அவர்களது ஒரே மகன் தீபனும் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தான்.

அவர்களது சொந்த ஊர் கோவைக்கு அருகிலுள்ள மனந்தபுரம் என்ற சிறிய நகரம்... சுற்றுலாவிற்கு வந்திருந்தனர்.

பத்தாம் வகுப்புப் படிக்கும் தனது மகனிடம் கேட்டார் சுந்தரம்.

''தீபன்... உலகத்துல நீண்ட பெரிய கடற்கரை எங்க இருக்கு தெரியுமா...?''

''தெரியும்பா... லண்டன்ல...!''

''வெரிகுட்... அப்ப இந்த மெரினாவுக்கு என்ன சிறப்பு...?''

''இது ரெண்டாவது இடத்துல இருக்குப்பா...!''

தீபன் சொல்ல, அப்பா சிரித்தார்... அம்மாவிற்கும் மகிழ்ச்சியாக இருந்தது. வாத்தியார் பிள்ளை மக்கு என்ற வழிவழியாக வந்த வசனத்தைத் தன் மகன் பொய்யாக்குகிறான் என்பதால் வந்த மகிழ்ச்சி அது!

''அப்புறம் இன்னொன்று கேக்கட்டுமா...?'' சுந்தரம் கேட்க... லலிதா முறைத்தாள்.

''ஏங்க... நாம்ப ஜாலியாத்தான இருக்க வந்தோம்... இப்பப் போய்... பரிட்சை நடத்துறீங்க...?''

''இல்ல... லலிதா... பொழுது போக்கோட அறிவும் வளரனும்...'' படிப்புதான் கடைசி வரைக்கும் வரும்... தெரியுமா...?''

> "தீபன்... நான் எப்பவும் படி படின்னு சொல்றதோட அருமை புரிஞ்சுதா...? அந்த வீட்டோட மதிப்பு ரெண்டு கோடின்னு சொன்னதும்... எனக்குக் கொஞ்சம் மயக்கம் வந்தது... நல்ல வேளை சமாளிச்சேன்... இவ்வளவு பெரிய ஸ்டேட்டஸ் எப்படி வரும் தீபன்...? படிப்பு... படிப்புதான்... அதனாலதான் உன்கிட்ட எப்பவும் படிப்பு ஞாபகமாவே இருன்னு சொல்றேன்... அம்மா கூட கிண்டல் பண்ணுவா... இப்பவாவது படிப்பப் பத்திப் புரியுதா..?"



''போதும் போதும்... இப்ப... லீவுல புள்ளைய சுதந்திரமா விடுங்க...''

லலிதாவின் அன்புக் கட்டளைக்குச் சுந்தரம் பணிந்து போனார்.

நேரம் மாலை ஆறு மணியை நெருங்க... பகல் பொழுது விடை பெறத் தொடங்கியது... கடற்காற்று மூவருக்கும் பசியைத் தூண்ட... பீச் அருகில் உள்ள ஓர் உணவு விடுதிக்குள் நுழைந்தனர்...

ஆர்டர் செய்துவிட்டுக் காத்திருக்க...

''சார்... நீங்க மேத்ஸ் டீச்சர் சுந்தரம் சார்தானே...?'' ஒரு குரலுடன் ஓர் இளைஞன் முன்னால் வர, சுந்தரம் அவனை ஏறிட்டார்...

''ஆமாம்... நீங்க தம்பி...?''

''சார்... நான் செல்வமணி. மதனந்தபுரம்... ஹை ஸ்கூல்ல உங்ககிட்ட படிச்சவன் சார்... எங்கப்பா கூட அங்க ஜவுளிக்கடை வெச்சிருந்தாரு சார்... உங்க முகம்... கொஞ்சம் மாறினதால.... சந்தேகமா கேட்டேன் சார்...!''

செல்வமணி உற்சாகமாகப் பேசினான்.

சுந்தரத்திற்கு உடனே நினைவுக்கு வரவில்லை... அவரது இருபத்தைந்து வருட சர்வீஸில்... எல்லோரையும் நினைவில் வைக்க முடியுமா என்ன...!

''நல்லது தம்பி... எந்த வகுப்புனு யோசிக்கிறேன்...!''

''சார்... நான் படிச்சது தொண்ணுத்தாறு பேச் சார்... அப்ப நீங்க பேச்சிலர்...!''

ஏதோ கொஞ்சம் ஞாபகம் வந்தது.

"ஆங்... இந்தக் கடுக்கன் ரவி... பேச்சா... நீ...?"

"இல்ல சார்... அவன் எனக்கு ஒன் இயர் சீனியர்... நான் கரெக்டா சொல்லனும்னா... வந்து... சிவான்னு ஒரு ஃப்ரெண்டு சார்... அவன்கூட மூக்குத்தி போட்டிருப்பான்... நீங்ககூட பத்மினி'ன்னு... கிண்டல் பண்ணுவீங்களே... ஞாபகம் வருதா சார்...?

செல்வமணி கேட்க... முகம் சுருக்கிய... சுந்தரம் பிறகு பிரகாசமானார்.

"ஓ... இப்ப வருதுப்பா... சிவான்னு... எஸ்.எஸ். அப்புறம் மோகனும் உன் செட்தானா...? கணக்குல நூறு வாங்குவானே... ஒரு தடவ நீ கூட அவனுக்குப் போட்டியா சாலன்ஞ் பண்ணி நூறு மார்க் வாங்கிக் காட்டினியே! எஸ்... இப்ப ஞாபகம் வருது செல்வமணி... பாத்து எவ்வளவு நாளாச்சு... சௌக்கியமாப்பா...?"

தன் ஆசிரியருக்கு ஞாபகம் வந்தது செல்வமணிக்குச் சந்தோஷமாக இருந்தது...

"ரொம்ப நல்லாருக்கேன் சார்...! இவங்க உங்க மனைவியா சார்...?" செல்வமணி கேட்க...

"ஆமாப்பா... சாரி... நானே சொல்லியிருக்கனும்... இவ என் மனைவி லலிதா... இவன் தீபன்... பையன்... டென்த்... படிக்கிறான்..."

"சார்... இப்பவும் அங்கதான் இருக்கீங்களா சார்...?"

"ஆமாம் செல்வமணி... நடுவுல புரமோஷன்ல வேற ஸ்கூல் போனேன்... அப்பறம் நம்ப ஸ்கூல்லயே எச்.எம். மா இருக்கேன். சரி... என்னை விடு... நீ என்ன பண்ற...? எங்க இருக்க...? வா... இப்படி உட்காரு... மொதல்ல என்ன சாப்பிடற சொல்லு...?"

சுந்தரம் கேட்க.... "ஐயோ என்ன சார்... எனக்கு வரவேற்புக் கொடுக்கறீங்க? நான்தான் உங்கள கவனிக்கனும் சார்..." என்ற செல்வமணி சுந்தரம் அருகில் அமர்ந்தான்...

அதற்குள் சர்வர் மூன்று இட்லி... தட்டுடன் வர... "ஹலோ... இவங்களுக்கு கேக்கறத கொடுங்க... அப்பறம் எனக்கு ஒரு சோளாபூரி... கொடுங்க...!" உற்சாகமாகச் சொன்னான் செல்வமணி.

தன் மாணவன் இப்படி நடந்து கொள்வது சுந்தரத்திற்குப் பெருமையாக இருந்தது.

"அப்பறம்... செல்வமணி... உன்னைப் பத்திச் சொல்லேன்!"

"சார்... நான் பிளஸ் டூ முடிச்சு, பி.இ. ஈசிஈ., கோயம்புத்தூர்ல சேர்ந்தேன்... அப்பறம் ஓர் ஆசைல யு.எஸ். யுனிவர்சிட்டில எம்.எஸ். அப்ளை பண்ணினேன் சார்... சீட் கிடைச்சது... அங்க போய் ரெண்டு வருசம் படிச்சேன்... அங்கேயே வேலையிலே சேர்ந்தேன் சார்... நல்ல சேலரி கூட... அப்பறம்... நல்லா யேர்ன் பண்ணிட்டு இப்ப இங்க சொந்தமா ஒரு பிபிஓ... ரன் பண்றேன் சார்... வீடு கூட பக்கத்துல ஓ.எம்.ஆர்.–ல சார்...

"அவசியம் நீங்க வரனும் சார்... அப்பா, அம்மா என்கூட இல்ல... அந்த ஊரவிட்டு வர அவங்களுக்கு மனசில்ல... சரி... நீங்க கண்டிப்பா வரனும் சார்...!"

செல்வமணி அழைக்க... சுந்தரத்திற்குப் பெருமையாக இருந்தது... தன் மகனை ஓரக் கண்ணால் பார்த்தார்.

"பிறகு... உனக்குக் கல்யாணம்...?"

"ஆச்சு சார்... ரெண்டாயிரத்து பத்துல... என் பையனுக்கு ரெண்டு வயசாகுது சார்... ஒய்ப் பேரு ஷீலா... பையன் பரத்... சார்!"

செல்வமணியின் பணிவு... அவனது தற்போதைய ஸ்டேட்டஸ் எல்லாமே சுந்தரத்திற்குப் பிடித்திருந்தன. நடுவில் சோளா பூரி வர அனைவரும் சாப்பிட்டனர். எவ்வளவு வற்புறுத்தியும் தானே பணத்தைக் கொடுத்தான் செல்வமணி... பிறகு சுந்தரம்...

"சரி... செல்வமணி... உன்னை சந்திச்சது ரொம்ப சந்தோஷம். நாங்க ரூமுக்குக் கிளம்பறோம்... நாளைக்கு சில இடங்கள் பாத்துட்டு நைட்டு ட்ரெயின் ஏறனும்...!" சொல்ல...

"என்ன சார் விளையாடறீங்களா...? மொதல்ல என் வீட்டுக்கு வந்துட்டுப் போங்க... நான் உங்கள விட மாட்டேன்...!" கறாராகச் சொன்னான் செல்வமணி.

பார்வதியும் தீபனும் சுந்தரத்தைப் பார்க்க... சுந்தரம் "சரி, பார்வதி இவன் வீட்டுக்குப் போய்ட்டு வரலாம்!" சொல்லிவிட்டுச் செல்வமணியைப் பார்த்தார். "ஆனா செல்வமணி... வீட்ல தங்க வற்புறுத்தக் கூடாது... அப்படின்னா வர்றோம்...!" சுந்தரமும் கறாராகச் சொல்லச் செல்வமணி சம்மதித்தான்.

சாம்பல்நிற குவாலிஸில் அனைவரும் ஏறிக் கொள்ள... செல்வமணி ஓட்ட, கார்... ஓ.எம்.ஆர். நோக்கிப் பறந்தது... ஒரு பெரிய அபார்ட் மென்ட் டின் அடிவாரத்தில் காரைப் பார்க் செய்தான் செல்வமணி.

அந்தப் பத்து மாடி உள்ள பெரிய அபார்ட் மென்ட்டில் பத்துக் குடும்பங்களே வசித்தன... ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஃப்ளோர். சுமார் மூவாயிரம் சதுர அடியில் ஐந்து அறைகளைக் கொண்டதாக ஒவ்வொரு வீடும் இருந்தது. செல்வ மணி தன் மனைவியை அறிமுகம் செய்தான். அன்போடு ஷீலாவும் அவர்களை வரவேற் றாள். சென்னையிலே இது மாதிரி வீடும் சுற்றிப் பார்க்க வேண்டிய இடம் தானோ... என்றே சுந்தரத்திற்குத் தோன்றியது. பார்வதியும் தீபனும் சந்தோஷமாகத் தெரிந்தார்கள்.... அப்போது,

''தம்பி'' என்று ஒரு குரல் கேட்க... ஓர் அறையிலிருந்து வயதானவர் ஒருவர் வெளிப்பட்டார்.

சுந்தரம் யார் என்பது போல் பார்க்க... ''சார்... இது ஊர்ல எங்க வீட்ல வேலை பார்த்தவர். பேரு



சண்முகம்... உங்களுக்கு அவ்வளவா தெரியாது. ரொம்ப நேர் மையானவர்... பண்பானவர்... குழந்தைங்கக் கிடையாது. இவர் மனைவி போனப்பறம் எங்கக் கூடவே அழைச்சிட்டு வந்திட்டேன் சார்... என் னோட அப்பா மாதிரின்னு கூடச் சொல்லலாம் சார்...'' செல்வமணி சொல்ல... அந்த சண்முகம் அனைவரையும் பார்த்துக் கும்பிட்டார்.

''தம்பி, இவங்களுக்கு நான் ஏதாவது செய்யனுமா...?'' கேட்டார் சண்முகம்.

''இல்ல... இல்ல... நான் பாத்துக்கறேன்'' செல்வமணி சொல்ல, சண்முகம் ஷீலாவுக்கு உதவி செய்யச் சமையலறைக்குள் நுழைந்தார்.

அனைவரும் சிறிது நேரம் சந்தோஷமாகப் பேசினர்.

தீபனிடம் செல்வமணி சொன்னான், ''தம்பி, சார் எங்களுக்குப் படிப்போட அருமையப் பத்திச் சொல்லிட்டுத்தான் வகுப்பே ஆரம்பிப்பாரு... அந்தப் படிப்போட அருமைய... அப்ப விட இப்பத்தான் உணர்றேன்... இப்ப நான் அனுபவிக்கிறது எல்லாம்... நான் ஓர் எட்டு வருஷம் கஷ்டப்பட்டுப் படிச்சதோட பயன்தான்... நீயும் நல்லாப் படிக்கனும்... சாருக்குப் பெருமைத் தேடித் தரனும்... ஓ.கே...?''

தீபன் தலையாட்டினான். அன்று இரவுச் சாப்பாட்டை அங்கேயே முடித்துவிட்டு சுந்தரம் கிளம்பினார்.

எவ்வளவோ தடுத்தும்... சுந்தரம் தங்கியிருந்த லாட்ஜுக்குக் காரிலேயே கொண்டு விட்டான் செல்வமணி...

விடைபெற்றுச் செல்வமணி சென்ற பிறகு... சுந்தரம் தன் மகன் பக்கம் திரும்பினார்.

''தீபன்... நான் எப்பவும் படி படின்னு சொல்றதோட அருமை புரிஞ்சுதா...? அந்த வீட்டோட மதிப்பு ரெண்டு கோடின்னு சொன்னதும்... எனக்குக் கொஞ்சம் மயக்கம் வந்தது... நல்ல வேளை சமாளிச்சேன்... இவ்வளவு பெரிய ஸ்டேட்டஸ் எப்படி வரும் தீபன்...? படிப்பு... படிப்புதான்... அதனாலதான் உன்கிட்ட எப்பவும் படிப்பு ஞாபகமாவே இருன்னு சொல்றேன்... அம்மா கூட கிண்டல் பண்ணுவா... இப்பவாவது படிப்பப் பத்திப் புரியுதா..?''

''புரியுதுப்பா... நானும் நல்லா படிப்பேன்பா'' தீபன் சொல்ல, பார்வதி தன் மகன் தலையைக் கோதினாள்.

''தீபன்... அப்பா சொன்ன மாதிரி... அந்த செல்வமணி சொன்ன மாதிரி... படிப்பு ரொம்ப முக்கியம்... ஆனா அதைவிட இன்னொன்னு ரொம்ப முக்கியம்ப்பா...!'' அம்மா நிறுத்த,

சுந்தரம் கேள்விக் குறியோடு பார்க்க... தீபனும் ஆச்சரியமாகப் பார்த்தான்.

''அது... ஏட்டுக்கல்வி இல்ல... வாழ்க்கைக் கல்வி... அதாவது வாழ்க்கைல கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள் சம்பந்தமான கல்வி... இதைப் பெற்றோர்களும்... ஆசிரியர்களும் சேர்ந்து சொல்லித் தரனும்... மாணவர்களும் அதை ஏத்துக்கனும்...!''

மீண்டும் சற்றுப் புரியாமல் பார்த்தனர்... அப்பாவும் மகனும்! பார்வதி தொடர்ந்தாள்...

''அது... இனிமையான பேச்சு... குருபக்தி... பெரியவங்கள மதிக்கிற குணம்... நம்பிக்கையான நடத்தை... விசுவாசமான குணம்... விருந்தோம்பல். இதுமாதிரி... நிறைய நல்ல பண்புகள் தான் வாழ்க்கைக் கல்வி. இந்தக் குணங்கள் இல்லாம வெறும் படிப்பு மட்டும் இருந்து... பணக்காரனா மாறி யாரையும் மதிக்காதவங்கள நாம் பாத்திருக்கலாம்... வெறும் 'ஹலோ'ன்னு சொல்லிவிட்டுப் போறவங்களும் உண்டு... ஆனா இந்த செல்வமணி... இந்த அற்புத குணங்களோட படிப்பும் சேர்ந்து... ஒரு நல்ல மனிதனா வாழ்ந்து, பல பேருக்கு வேலை கொடுக்குது... இந்தப் பையனுக்குப் படிப்பு இல்லாமப் போனாக்கூட, சொந்த ஊர்லயே ஒரு நியாயமான நல்ல வாழ்க்கைதான் வாழ்ந்திருக்கும்!

''அவன் வீட்ல இன்னொன்னு கவனிச்சியா... நினைவு... சொல்... செயல்... இது மூனும் நல்லதையே கொண்ட அந்த சண்முகம்... எவ்வளவு நல்ல குணம் இருந்தா... அந்த வீட்ல ஒரு சொந்தம் போல அவர வெச்சிருப்பாங்க...? அவரு என்ன படிச்சவரா...? ஆனா வாழ்க்கைக் கல்வியில ஜெயிச்சவரு... அந்தச் செல்வமணி அனுபவிக்கிற அத்தனை வசதியும் அவருக்குக் கிடைக்குது... இதுலேந்து ஒன்னப் புரிஞ்சுக்க...

''வாழ்க்கைல படிப்பு முக்கியம்... அதைவிடப் பண்பும் முக்கியம். பண்புக்கு அந்த சண்முகம் உதா ரணம்... பண்பும் படிப்பும் சேர்ந்து... இன்னொரு உதாரணம் அந்த செல்வமணி...''

மகனுக்கான தன் அறிவுரையை முடித்தாள் பார்வதி. தீபன் சிரித்தபடி தலையாட்டினான். சுந்தரம் அசந்து போனார். தன் பார்வையில் இவ்வளவு நாள் படிப்புதான் உயர்ந்தது என்ற கருத்திலிருந்து மாறுபட்டு... வாழ்வில் படிப்பைவிடப் பண்புக்கே முதலிடம் என்று அற்புதமாகக் கணித்த தன் மனைவியின் அறிவுக்கூர்மையை எண்ணி வியந்தார்.

''என்ன பார்வதி கலக்கற...?'' ஆசையாகத் தன் மனைவியைச் சுந்தரம் புகழ...

''மனைவி ஒரு மந்திரி...–ங்க.'' பார்வதி பதிலுக்குச் சொன்னாள்.

●

விவாதம்

ஏற்பது இகழ்ச்சியன்று - எதிர்ப்பது நாகரிகமன்று!

‘ஏற்பது இகழ்ச்சியன்று’ என்ற தலைப்பிட்ட நடுப்பக்கக் கட்டுரை தினமணியில் சென்ற 5.3.2020–இல் வெளியாகியுள்ளது. தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழகத்தின் முனைவர் ஜெ. ஹாஜாகனி அதனை எழுதியுள்ளார்.



அக்கட்டுரையில் ஆதாரங்களைக் காட்டிலும், அவதூறுகளே அதிகம். குடி உரிமைத் திருத்தச் சட்டத்தைப் பற்றியும் (CAA), குடிஉரிமைப் பதிவேட்டைப் பற்றியும் (NRC), குடி உரிமை மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் பற்றியும் (NPR) நேர்மையான புரிதலை வாசகர்களுக்கு அவர் தரத் தவறியுள்ளார்.

கட்டுரையாளர், இக்குடியுரிமைத் திருத்தச் சட்டம் ஈழத் தமிழர்களுக்கும் முஸ்லீம்களுக்கும் மட்டுமல்ல, இந்தியர் அனைவருக்குமே எதிரானது என்கிறார். ஈழத்தமிழர்கள் பௌத்தப் பேரினவாதிகளின் தாக்குதலால் தமிழ்நாட்டிற்கு வந்தவர்கள். இவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நிலபுலன்கள் உண்டு. வீடு, வாசல் உண்டு. அனைத்தையும் இழந்து வந்தவர்கள்.

இந்தியாவில் அவர்களுக்குக் குடிஉரிமை தரப்பட்டால், அன்றாடக் கூலிகளாகத்தான் அவர்கள் இங்கே இருக்க முடியும். அவர்கள் யாரும் இந்தியாவில் குடிஉரிமை கேட்டுப் போராடுவதுமில்லை.

இவர்களோடு இந்தியாவில் புதிதாகப் பிரவேசித்துள்ள முஸ்லீம்களை ஒப்பிடுவது சரியாகுமா?

பக்கத்தில் உள்ள மூன்று முஸ்லீம் நாடுகளும் முஸ்லீம் அல்லாதவர்களைத் துரத்தியடித்தவை. அச்சித்திரவதைகளைத் தாங்காத கிறிஸ்தவர்கள், பார்சிகள், சீக்கியர்கள், பௌத்தர்கள், இந்துக்கள், சமணர்களுக்குக் குடிஉரிமை தருவதற்குத்தான் அரசு சட்டம் இயற்றியுள்ளது.

முஸ்லீம்களுக்கும், ஈழத்தமிழர்களுக்கும் குடிஉரிமைத் திருத்தச் சட்டத்தில் ஏன் இடமில்லை என்ற உண்மையை ஏனோ கட்டுரையாளர் மறைத்துவிட்டார். மியான்மர் ரோகிங்யா முஸ்லீம்கள் பர்மியர்களைப் போலவே அந்நாட்டுக் குடிமக்கள். பர்மாவில்தான் குடிஉரிமை கேட்கிறார்கள். இந்தியாவில் அல்ல. கட்டுரையாளர் அவர்களையும் குடிஉரிமை கேட்கச் சொல்கிறாரா?

குடி உரிமை இஸ்லாமியர்களுக்குத்தான் இல்லை. ஏன்? இஸ்லாமியர்கள் பாக் – பங்களாதேஷ் – ஆப்கானிலிருந்து துன்புறுத்தப்பட்டு இந்தியாவுக்கு வந்தவர்கள் அல்ல. அந்நாடுகளில் உள்ளதைவிட அதிக வசதிகளைத் தேடி இந்தியாவுக்குள் ஊடுருவி வந்தவர்கள்.

6 மதங்களின் அகதிகளுக்கும் அந்த 3 நாடுகளில் வாழ்வுரிமை உண்டு. ஆனாலும் அவர்கள் முஸ்லீம்களாக மதம் மாறினால்தான் அந்த உரிமைகளைப் பெற முடியும். மதம் மாறவில்லையானால் அவர்களின் உயிருக்கு ஆபத்து. மனைவி, மக்களைக் காப்பாற்றுவதற்காக அவர்கள் தங்கள் சொந்த உடைமைகளையெல்லாம் துறந்துவிட்டுப் பக்கத்து நாடான

இந்தியாவில் தஞ்சம் புகுந்தார்கள். இதுதானே உண்மை!

ஏறக்குறைய 70 ஆண்டுகளுக்கு முன்பு இது நடந்தது. இவர்கள் அனைவரும் இந்துக்களல்ல. ஆப்கானிஸ்தானத்திலிருந்து கிறிஸ்தவர்கள், பாகிஸ்தானிலிருந்து சீக்கியர்களும், இந்துக்களும், பங்களாதேசத்திலிருந்து பௌத்தர்களும், பார்சிகளும், வங்காள மொழி பேசுகிற இந்துக்களும் வந்தார்கள்.

வங்காள மொழி பேசுகிற முஸ்லீம்களுக்குத் துன்புறுத்தல்கள் இல்லை. ஆனால், அதே மொழி பேசிய இந்துக்களுக்குச் சித்திரவதைகள் அங்கு நடந்தன. அந்த இந்துக்கள் எண்ணிக்கையில் சிறு பான்மையினர். அதனால் பெரும்பான்மை இஸ்லாம் மதத்தினர் அதே வங்காள மொழி பேசிய சிறுபான்மை இந்துக்களை ஏற்றுக்கொள்ள வில்லை. அவர்களை மதம் மாறச் சொன்னார்கள். மறுத்தவர்கள்தான் தப்பித்து வந்தவர்கள்.

அந்த இந்துக்கள் அடைந்த சித்திரவதைகள் பற்றி டாக்டர் தஸ்லிமா நஸ்ரீன் என்ற ஒரு மருத்துவர், வங்காள மொழியில் ஒரு நாள் நிகழ்ச்சியைப் புத்தகமாக எழுதியுள்ளார். 10 மணி, 11 மணி, 12 மணி என்று மணி வாரியாக நடந்த சித்திரவதைகளைப் பதிவு செய்திருக்கிறார். அந்தப் புத்தகத்தின் பெயர் 'லஜ்ஜா' 'வெட்கக்கேடு.'

இஸ்லாத்திற்கு இது வெட்கக்கேடானது என்று சுட்டிக் காட்டுவதற்காகவே அவர் அதை எழுதினார். இதை எழுதியதற்காகவே மத வெறியர்கள் சிலர் அவரைக் கொலை செய்ய முயற்சி செய்தனர். அவர் தலைநகர் டாக்காவி லிருந்து கல்கத்தா வழியாக டெல்லி வந்தார். டெல்லியிலுள்ள இஸ்லாமியர்களும் அவரைத் தாக்கச் சென்றனர். அப்போது சுவிட்சர்லாந்து அவருக்கு அடைக்கலம் தந்தது. அவர் சுவிட்சர் லாந்துக்குச் சென்றுவிட்டார்.

அவர் எழுதிய புத்தகத்தையும் அவர் இதுநாள் வரை பட்டு வந்துள்ள கஷ்டங்களைப் பற்றியும் இந்தியாவிலுள்ள இஸ்லாமியத் தலைவர்கள் எந்தக் கருத்தும் சொல்வதில்லை.

அதுமட்டுமல்ல, இன்றைக்கும் தஸ்லிமா நஸ்ரீன் பங்களாதேஷ் சட்டப்படி நாடு கடத்தப்பட்ட வராகவே உள்ளார். இந்து சிறுபான்மையினர் பங்களாதேசத்தில் துன்புறுத்தப்பட்டதை நிரூபிப்ப தற்கு இந்த ஒரு புத்தகம் போதாதா? இதைப் பற்றிக் கட்டுரையாளர் முனைவர் ஜெ. ஹாஜாகனி எந்தக் கருத்தையும் பதிவும் செய்யவில்லையே ஏன்?

குடிஉரிமைச் சட்டம் என்பது ஜனத்தொகைக் கணக்கிற்கு முன்னோடி என்று 'தினமணி' கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார். குடிஉரிமைச் சட்டத்தில் உள்ள அதே கேள்விகள்தான் அநேக மாக ஒன்றிரண்டு அதிகமாகவோ, குறைவாகவோ மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் படிவத்திலும் கேட்கப்பட்டுள்ளன. அந்தப் படிவத்தை இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து யாரும் பார்க்கலாம்.

மக்கள் தொகைக் கணக்கு எடுக்கப்பட்டால் தான் அவர்களுக்குத் தேவையான நலத் திட்டங் களை அரசு தீட்ட முடியும். இதற்கான படிவத்தில் குடும்பத் தலைவனின் பெயர், ஆண்டு வருமானம், குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கை இவையெல்லாம்தான் இடம் பெறும். அவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களா, இல்லையா என்பதை மக்கள் தொகைக் கணக் கெடுப்புத்தான் தெளிவு படுத்தும்.

அப்படித் தெளிவு படுத்தப்பட்டால்தான் அவர்களுக்கான நலத்திட்டங்களை மக்கள் நல அரசு தயாரிக்க முடியும். 2011–இல் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இதேபோல்தான் நடந்தது. அதற்குப் 10 ஆண்டுகளுக்கும் முன்பு, 2001–இல் இதேபோல்தான் எடுக்கப்பட்டது. இப்போது 2021–இல் இக்கணக்கெடுப்பைத்தான் அரசு எடுக்கப்போகிறது.



அதற்கான சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீட்டுக்கு வீடு சென்று குடும்பத்தாரைச் சந்தித்து, அதற்குரிய படிவத்தில் குடும்பத் தலைவர் கூறுகிற தகவல்களைப் பதிவு செய்வர். அத்தகவல்கள் தான் அரசுக்குத் தரவுகளாகும்.

அப்படி என்ன தகவல்கள் கேட்கப்படும்? ஆண்டு வருமானம், சொந்த வீடா, இல்லையா? சமையல் கேஸ் உண்டா? கழிப்பறை வசதி இருக்கிறதா? குடிநீர் வசதி உள்ளதா? மின்சார வசதி உள்ளதா? இவையெல்லாம்தான் மக்கள் தொகைக் கணக்கெடுப்புப் படிவத்தில் நிரப்பப்படுகின்றன.


குடிஉரிமைச் சட்டத்தின்படி இந்த நாட்டில் வசிப்பதற்கான குடி உரிமையை அவர் பெற்றுள்ளார் என்றால், அதே பதிவுகள்தான் குடிஉரிமை மக்கள்தொகைப் படிவத்திலும் இடம் பெற்றிருக்கும். கூடுதலாக மேலும் சில தகவல்கள் அவசியப்படலாம்.

எத்தனை ஆண்டுகளாக இந்த ஊரில் குடியிருந்தீர்கள், எந்த ஊரில், எந்த நாட்டிலிருந்து வந்தீர்கள்? பிழைப்பைத் தேடியா? பெரும்பான்மையினரின் சித்திரவதைக்குப் பயந்தா? இது போன்ற கேள்விகள்தான்.


இவர்களெல்லாம் பிற மதத்தினராக இருந்தாலும் அவர்கள் இந்தியாவில் 12 ஆண்டுகள் வசித்திருந்தாலே போதும், அவர்கள் குடிஉரிமை பெறுவதற்குத் தகுதிப்பாடுடைய வர்கள் என்று அரசு அறிவித்துவிட்டது.

அந்த 12 ஆண்டுகளையும் குறைத்து 5 ஆண்டுகள் நிரம்பியிருந்தாலே அவர்கள்





பக்ருதீன் அலி அகமது



அப்துல் கலாம்



தஸ்லிமா நஸ்ரீன்

குடிஉரிமை பெறத் தகுதியுடையவர்கள் என்று அரசு திருத்தி அறிவித்துவிட்டது. இதுதான் குடிஉரிமைத் திருத்தச் சட்டம்.

இந்தியாவில் 18 கோடி முஸ்லீம்கள் சார்பாக இப்போது கேட்கப்படுகிற கேள்வி, இந்தக் குடிஉரிமைத் திருத்தச் சட்டத்தில் பிற நாட்டிலிருந்து பிரவேசித்த இஸ்லாமியர் மட்டும் இல்லை என்பதுதான். அப்படியானால், இந்த 18 கோடி இஸ்லாமியர்கள் யார்? இந்தியாவில் பிறந்து வளர்ந்தவர்கள். அவர்கள் இந்தியர்கள், தேசிய முஸ்லீம்கள். இந்துக்களுக்குள்ள அத்தனை உரிமைகளும் அவர்களுக்கும் சமமாக உண்டு.

இன்னும் சொல்லப்போனால், இந்துக்களையும்விட அதிகமான உரிமைகள் அவர்களுக்கு உண்டு. எப்படி? ஓர் இந்துப் பள்ளியில் ஆசிரியர்கள் நியமனத்தை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகத்தான் நிரப்ப வேண்டும். அதுவும் பதிவேடு (Roaster) எனும் முறைப்படி காலியாக உள்ள பணிகளை தலித்துகள், கிறிஸ்துவர்கள், முஸ்லீம்கள். அதன் பின்பு இந்துக்கள் என நிரப்பப்பட வேண்டும். இது இந்துப் பள்ளியிலுள்ள நடைமுறை.

ஆனால், ஒரு முஸ்லீம் பள்ளியில் அந் நிர்வாகம் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து

உத்தரவு பெற வேண்டிய அவசியமில்லை. தாம் விரும்பியவரை நியமிக்கலாம். இன்றைக்கும் அப்படித்தான் உள்ளது.

இந்தியாவிலிருந்து 'ஹஜ்' யாத்திரை செல்கிற முஸ்லீம்களுக்கும், ஜெரூசலம் செல்லும் கிறிஸ்தவர்களுக்கும் மத்திய அரசு நிதி உதவி செய்கிறது. ஆனால், எந்த இந்துவுக்கும் காசி, அமர்நாத், பத்ரிநாத் யாத்திரைக்கு நிதியுதவி தரப் படுவதில்லை.

இந்தியாவிலுள்ள தேவாலயங்கள், மசூதிகள் முதலிய வழிபாட்டுத் தலங்கள், முஸ்லீம் வஃபு போர்டு மூலமாகவோ அல்லது கிறிஸ்தவ அமைப்புகள் மூலமாகவோ நிர்வகிக்கப்படு கின்றன. ஆனால், இந்துக் கோவில் எதுவும் இந்து மத நிர்வாகத்தால் நிர்வகிக்கப்படுவதில்லை. அரசுதான் அதை மேற்பார்வையிடுகிறது.

அவ்வளவு ஏன், இந்தியாவில் இஸ்லாமியச் சான்றோர்கள் அப்துல் கலாம் வரை பலர், இந்தியா வின் ஜனாதிபதிகளாக இருந்துள்ளனர், கிறிஸ் தவர்கள் உப ஜனாதிபதியாக இருந்திருக்கிறார் கள். இதேபோல, பாகிஸ்தானில், பங்களா தேசத் தில், ஆப்கானிஸ்தானில் ஓர் இந்துவையோ, சீக்கிய ரையோ அதிபராகச் சட்டப்படி நியமிக்க முடியுமா?

காரணம், இந்தியாவைச் சுற்றியுள்ள அந்த 3 நாடுகளும் இந்தியாவைப்போல செக்யூலர் தேசங் களல்ல. அவை இஸ்லாமிய தேசங்கள். அந்தத் தேசங்களின் புனித நூலே திருக்குர்ஆன்தான். இந்தியாவில் பெரும்பான்மை இந்துக்களின் பகவத் கீதை நூல் இந்தியாவின் புனித நூலாக இல்லை.

இதன் மூலம் இந்தியாவில் எல்லா மதத் தினரும் சமம்தான். மத்திய அரசோ, மாநில அரசுகளோ மதத்தை ஆதரிக்குமாறு சட்டங்களை இயற்றவோ, சலுகைகளைக் காட்டவோ கூடாது. இப்படித்தான் தொடர்ந்து 70 ஆண்டுகளாக இந்தியா செயல்பட்டு வருகிறது.

இந்தியாவில் பிற தேசங்களிலிருந்து ஊடுருவி வருகின்றவர்கள் (Infiltrators) வேறு, அகதிகள் (Refugees) வேறு. அகதிகளைப் பற்றிய தகவல்களை நம்மால் திரட்டிக்கொள்ள முடியும்.

ஆனால், ஊடுருவல்காரர்களைப் பற்றிய தகவல்களைத் திரட்ட முடியாது. அவர்களில் பயங்கரவாதிகள் இருக்கலாம். நமது நாடாளு மன்றம் தாக்கப்பட்டது, மும்பை நகரம் தொடர் குண்டுவெடிப்பிற்கு உள்ளானது யாரால்? ஆகவே தான் ஊடுருவிகளைக் கண்டுபிடிக்க நாம் உற்றுக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதேசமயம், அகதிகளுக்கு அடைக்கலம் தரவேண்டிய கடமைப்பாடும் நமக்கு உண்டு. அகதிகளாக 70 ஆண்டுகளாக இருப்பவர் களுக்குக் குடியுரிமை தரத் தீர்மானித்தோம். இதனை காந்திஜி முதல் மன்மோகன் சிங் வரை வரவேற்றவர்கள்தான்.

'தினமணி' கட்டுரையாளர் அஸ்ஸாம் பற்றிப் பேசுகிறபோது பக்ருதீன் அலி அகமது என்ற நமது ஐந்தாவது ஜனாதிபதியின் பெயரே குடிமக்கள் பதிவேட்டில் நீக்கப்பட்டுள்ளதாக எடுத்துக் காட்டி யிருக்கிறார்.


அவருடைய கண்ணோட்டத்தின்படி பக்ருதீன் அலி அகமது முஸ்லீமாக இருப்பதால் அவர் பெயர் நீக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகப்பட் டுள்ளார். ஆனால் அவரையும் அறியாமல் ஒன்றை அவர் ஒப்புக்கொண்டுள்ளார். இந்தியா என்ற இந்த தேசத்தில் பக்ருதீன் அலி அகமது என்ற முஸ்லீம், ராஜேந்திர பிரசாத் போல ஜனாதிபதியாக இருந்துள்ளார் என்பதுதான். அவருடைய பெயர் நீக்கப்பட்டது என்று சொல்வதைவிட, விடுபட்டுப் போனது எனக் குறிப்பிட்டிருக்கலாம். ஒரு பெரிய முயற்சியில் இதுபோன்ற குமாஸ்தாப் பிழைகள் நடக்கத்தான் செய்யும். அதைத் திருத்திக் கொள் வது சாத்தியமே தவிர, அதனையே சதி எனக் கட்டுரையாளர் வாதிப்பது வெறுப்பு அணுகுமுறை யையே காட்டும்.

அஸ்ஸாமில் 19 லட்சம் பேர் சட்ட விரோத மாகக் குடியேறியிருப்பதாக அவரே குறிப்பிட் டுள்ளார். அவர்களில் 12 லட்சம்பேர் பிற மதத் தைச் சார்ந்தவர்கள். 7 லட்சம் பேர்தான் முஸ்லீம் கள். இந்த 7 லட்சம் பேர்களுக்கும் குடிஉரிமை மறுக்கப்படலாம் என்பது அவருடைய யூகம்.

இந்த 7 லட்சம் முஸ்லீம்களும் நல்ல வாழ்க் கைக்காகப் பிழைக்க வழிதேடி இங்கு வந்தவர் கள். நீண்ட காலம் இங்கு வசித்திருப்பவர்களாக அவர்கள் தங்களை நிரூபித்துக் கொள்வார் களானால், நிச்சயமாக அவர்களுடைய குடி உரிமைக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. அதற்காக அறப்போராட்டமும் செய்யலாம்.

ஆனால், அவர்கள் பயங்கரவாதிகளாகவோ,

சமூக விரோதிகளாகவோ, ஒற்றர் களாகவோ இருந்துவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கை தேவை. சரியாகச் சோதனை செய்தால்தான் கண்டுபிடிக்க முடியும். அந்தச் சோதனையைச் செய்யாதே என்றால், அவர்களின் நோக்கம் தீயதா, நல்லதா? அதனை எப்படி ஆதரிப்பது? அதற்குத்தான் உரிய படிவங்களில் குடிஉரிமை இல்லாதவர்களைப் பற்றிய தகவல்கள் திரட்டப்பட வேண்டியுள்ளது. அதே தகவல்கள்தான் முஸ்லீம் அல்லாதவர்கள் பற்றியும் நிரப்பப்படுகின்றன.


காந்திஜி


மன்மோகன் சிங்

அவ்வாறு நிரப்பப்படுகிறபொழுது, நமது நினைவுக்கு வராத சில கேள்விகள் கேட்கப்படுவதாகக் கூறப்படுகிறது. குடும்பத் தலைவனுடைய, தலைவியுடைய அப்பா, அம்மா பிறந்த தேதியைக் கேட்பது தேவையில்லாத கேள்விதான். இதனை இஸ்லாமியர்கள் சுட்டிக்காட்டியபொழுது, மத்திய அரசு இந்தக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட குடும்பத் தலைவன் பதில் சொல்லத் தேவையில்லை என்று கூறிவிட்டது.

படிவத்திலுள்ள அந்தக் கேள்விக்குரிய கட்டம் காலியாகவே விடப்படும். ஆனால், முஸ்லீம்களுக்கு ஆதரவாக உள்ள செக்யூலர் கட்சிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், நிரப்பப்படாத அந்தக் காலிக் கட்டத்தில் அரசு அதிகாரிகள் **பிறநாட்டிலிருந்து குடியேறியவர்கள் என்று நிரப்பி விடுவார்கள்.** அப்படி நிரப்பப்பட்டு விட்டால், அவர்கள் குடியுரிமை பெறுவதற்குத் தகுதியில்லாதவர்கள் ஆவார்கள். அகதிகள் முகாமில் அவர்கள் அடைக்கப்படுவார்கள் என்று முஸ்லீம்களுக்கு மத்தியில் பீதியை ஏற்படுத்தி விட்டனர்.

அதனால் இச்சட்டத்தை எதிர்த்துத் தர்ணா, மறியல், மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். இதனுடைய உச்சமாக கிழக்கு டெல்லி மாநகரத்தில் குடியுரிமைச் சட்டத்தின் ஆதரவாளர்களும், எதிர்ப்பாளர்களும் நடத்திக்கொண்ட மோதலில் 53 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பீதியின் அடிப்படையில் உருவான இக்கலவரம் தேவைதானா?

குடிஉரிமைத் திருத்தச் சட்டம், தேசியக் குடிஉரிமைப் பதிவேடு, தேசிய மக்கள் தொகைப் பதிவேடு இம்மூன்றும் இந்தியாவைப் பாதுகாப்பதற்கானவைதான். பிற நாடுகளிலுள்ள சட்டங்களைப் போன்றவைதான். ஐரோப்பிய நாடுகளிலோ, அமெரிக்காவிலோ, சீனாவிலோ குடிஉரிமை இல்லாமல் வசிக்க முடியுமா? பங்களாதேஷில் வசிக்க முடியுமா? என நமது வெளிஉறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை.

குடிஉரிமை என்பது ஒருவருக்கான வாழ்வுரிமை. அவர் வறுமையிலோ, செல்வந்தராகவோ இருக்கலாம். ஆனால், அவருக்கான தேசம் உள்ளது. அது அவருடைய வாழ்வுரிமை. தேசம் இல்லையென்றால், அந்தத் தேசத்தையே அவன் காட்டிக் கொடுத்தாலும் அவன் தேசத் துரோகி ஆக முடியாது. தேசமே இல்லாதவன் எப்படி தேசத்துரோகியாக முடியும்?

கஜா புயல், ஒக்கி புயல், தானே புயல் என்பவற்றையெல்லாம் நாம் அனுபவித்துள்ளோம். அந்தப் புயல் வீசியதால் அந்தந்தப் பகுதிகளில் உள்ள வீடுகள் சேதமடைந்துள்ளன. அவர்கள் வைத்திருந்த வீட்டுப் பத்திரம், வரி ரசீது, குடும்ப அட்டை முதலியவையும் சேதமாகியிருக்கலாம். இந்தச் சேதத்திற்கு உட்பட்டவரிடம் அவருடைய பெற்றோர்களின் பிறப்புச் சான்றிதழ் கேட்பது நியாயமில்லை என்ற கட்டுரையாளரின் கருத்து ஆதரிக்கத்தக்கதாகும்.

அதற்காக, ஓர் ஆவணத் தயாரிப்பையே சதி என்றும், மோசடி என்றும், வஞ்சம் என்றும், வன்மம் என்றும் சொல்லிவிடலாமா?

இவ்வாறு, 'ஏற்பது இகழ்ச்சியன்று' எனக் கட்டுரை எழுதிய முனைவர் ஜெ. ஹாஜாகனி அவர்கள் இந்தியா, இஸ்லாமியச் சகோதரர்களுக்கும் உரிய தேசம் என்றுதான் சிந்திக்க வேண்டுமே தவிர, இந்து தேசமாக்கப்படுவதாகச் சந்தேகப்படக்கூடாது.

எப்படியாவது பதவிகளை எட்டிப் பிடித்துவிட வேண்டும் என்று துடிக்கிற எதிர்க்கட்சிகளின் தூண்டுதலுக்கு இரையாகி, அவர்களின் வாக்கு வங்கியாகிவிடக் கூடாது.

இதுபற்றி வாசகர்களாகிய நீங்கள் என்ன எண்ணுகிறீர்களோ, அதனை எழுதி அனுப்புங்கள் ஏப்ரல் 15–க்குள்.

– பி.சி.

சித்த மருத்துவத்தின் பார்வையில் கொரோனா வைரஸ்



மனிதர்கள் என்றைக்கு உலகில் தோன்றினார்களோ, அப்போதே நோய்களும் தோன்றிவிட்டன. சித்த மருத்துவத்தில் நோய்களைக் கணிக்கும் போது, பூமியில் ஏற்படும் கால மாற்றங்களைக் கருத்தில் கொண்டு, கார்காலம், கூதிர்காலம், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் ஆகிய பருவங்களை மிக முக்கியக் காரணிகளாக வைத்து நோய்களைக் கணிக்கின்றனர்.

இதில் உதராணமாக ஆவணி, புரட்டாசி மாதங்களில் (கார் காலம்) வந்தைகள் (பாக்டீரியா), ஒட்டுண்ணிகளால் உருவாகும் சளி, காய்ச்சல், இளவேனில், முதுவேனில் காலங்களில் (சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி) ஏற்படும் வைசூரி (அம்மை) நோய்கள் இவையெல்லாம்.

கால மாறுபாடுகள் ஏற்படும்போது பூமியில் ஏற்படும் தட்பவெப்ப நிலைகளால் வைரஸ், பாக்டீரியா மற்றும் ஒட்டுண்ணிகள் உற்பத்தியாகி அந்தக் காலங்கள் மாறும்போது அந்த நோய்க் கிருமிகள் அழிந்துவிடும்.

கொரோனா வைரஸ், தற்போது சீன நாட்டில் உருவாகிப் பொது மக்களைப் பாதித்து, இன்று உலகம் முழுவதும் மக்களைப் பீதியில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

இந்த வைரஸ் கிருமியானது, இதனால் பாதிக்கப்பட்ட சீனாவின் பாஹான் மாநிலத்தில் முதன்முதலில் கண்டறியப்பட்டது. கொரோனா வைரஸ் கிருமியானது, விலங்குகளிலிருந்து மனிதர்களுக்குப் பரவுவதாக உலக சுகாதார நிறுவனம் (World Health Organization) தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸ் கிருமி 'மெர்ஸ்' (MERS _ Middle East Respiratory Syndrome), 'சார்ஸ்' SARS (Severe Acute Respiratory Syndrome) முதலிய வைரஸ் கிருமிக் குடும்பத்தைச் சார்ந்தது. இதனை Novel Corona Virus என்று அழைக்கின்றனர்.

பத்து வருடங்களுக்கு முன் ஏற்பட்ட SARS வைரஸ் கிருமி சிக்குன் குனியா முதல் தற்போது பரவி வரும் டெங்கு, ஸ்பைன்புளூ (பன்றிக்காய்ச்சல் கிருமி) வரை அனைத்தும் வைரஸ் கிருமிகளால் உருவானவை ஆகும்.

பொதுவாகவே வைரஸ் கிருமிகளுக்கு நேரடி மருந்து கிடையாது. அம்மை நோய், பொன்னுக்கு வீங்கி எனப்படும் மம்ஸ் முதலியவையும்



டாக்டர் பி. சரவணன், பி.எஸ்.எம்.எஸ்.



வைரஸ் நோய்களே. அதனால்தான் அந்த மாதிரி நோய்கள் பரவும் காலங்களை ‘அநாதகாலம்’ என்றழைப்பர்.

அப்போதெல்லாம் ஊர் மக்கள் திருவிழாக்கள் மூலம் ஊரைச் சுற்றி நோய் பரவாமல் இருக்க வேப்பிலை கட்டுதல், மஞ்சள் நீர் தெளித்தல், ஊரிலுள்ள தெருக்களைச் சுத்தம் செய்து பசுச்சாணம் தெளித்தல், விறகுகள் இட்டுப் புகை எழுப்புதல் மூலம் விஷக் கிருமிகள் பரவாமல் தடுத்தனர்.

ஆனால், தற்போது பரவி வரும் நாகரிக மோகத்தால் பாரம்பரியமாக வரும் பழக்கங்கள் மாற்றப்பட்டு, இன்று நோய்க்கிருமிகள் பரவிவர வழிவகுக்கின்றோம்.

கொரோனோ வைரஸ் பாதிப்பால் ஏற்படும் அறிகுறிகள் :

1. மூக்கில் நீர் வடிதல், 2. தும்மல், 3. கண்கள் சிவந்து காணப்படுதல், 4. காய்ச்சல், 5. தொடர் இருமல், 6. நெஞ்சில் சளி கோர்த்து மூச்சுவிடச் சிரமம், 7. உடலில் பல்வேறு உறுப்புகள் பாதித்தல்.

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்கும் முறைகள் :

1. இந்த வைரஸ் கிருமிகள் பொதுவாகவே சுவாசப்பாதையைப் பாதிப்பதால், நமது கை, கால்களை வெந்நீரில் கழுவ வேண்டும். வெந்நீரில் திரிபலா சூரணம், காடி (வினிகர்) விட்டுக் கை, கால்களைச் சுத்தமாகக் கழுவ வேண்டும்.

2. காற்றின் மூலம் இக்கிருமி பரவுவதால், கூட்டமாக உள்ள இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

3. நோய் எதிர்ப்புச் சக்தியின்றி, உடல் பலவீனமாக உள்ளவர்களை வைரஸ் கிருமி எளிதில் தொற்றும். ஆகவே, உடல் நோய் எதிர்ப்புச் சக்தி பெற, நெல்லிக்காய் லேகியம், பவளப்பற்பம், முத்துச்சிப்பிப் பற்பம் ஆகியவற்றைப் பயன்படுத்தலாம்.

4. நிலவேம்புக் குடிநீர், கபசுரக் குடிநீர் முதலிய கஷாயங்களைத் தடுப்பு மருந்துகளாகப் பயன்படுத்தலாம்.

5. இஞ்சிச்சாறு, மஞ்சள் குடிநீர் முதலியவை, சுவாசப்பாதைத் தன்மையைச் சரிசெய்யும்.

6. நொச்சியிலை, மஞ்சள் தூள், கல்லுப்பு இவற்றை நீர் சேர்த்து மண்சட்டியிலிட்டு மூடிவைத்துக் கொதிக்க வைத்து ஆவி பிடிக்க, வைரஸ் கிருமிகளால் ஏற்படும் தலைவலி, மூக்கில் நீர் வடிதல் குறையும்.

7. வீட்டைச் சுற்றிலும், நாம் தங்கியிருக்குமிடங்களில் வேப்பிலை, நொச்சியிலை முதலியவற்றை இட்டுப் புகை எழுப்பினால், காற்றில் உள்ள வைரஸ் அழியும்.

8. விலங்குகள் மூலம் கொரோனா வைரஸ் பரவுவதாகக் கூறப்படுவதால், அசைவ உணவுகளைத் தவிர்ப்பது நலம்.

மேலும் விபரங்களுக்கு, கோவை மகாலிங்கம் மாரியம்மாள் மணிவிழா அறக்கட்டளையால் நடத்தப்படும் ‘கஸ்தூர்பா காந்தி சித்த மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்தை’ அணுகலாம். தலைமை மருத்துவர் பி. சரவணன் பி.எஸ்.எம்.எஸ். அவர்களின் தொடர்பு எண் : 90432 12789.

ஆங்கில இலக்கியம் உலக அளவில் முக்கியத்துவமானது. ஒரு தேசத்தின் இலக்கியம் ஆங்கிலத்தில் வெளியாகுமானால், அகில உலகத்திற்கும் அது கால தாமதமில்லாமல் சென்று சேர்கிற சிறப்புக்குரியது.

உதாரணமாக, உமர் கய்யாம் என்ற பாரசீகக் கவிஞன் அற்புதமான கவிதைகளை எழுதியவன். அக்கவிஞனுடைய படைப்புகள் வாசகரைச் சொக்க வைக்கக்கூடியவை.

உமர் கய்யாமின் பாடல்களை இப்போதும் நாம் சிறப்பித்து எழுதுகிற அளவுக்கு நமக்குத் தெரிந்திருக்கிறதென்றால், நமக்குப் பாரசீகம் தெரியாது. ஆனால், எட்வர்டு ஃபிட் ஜெரால்டு (Edward FitGerald) என்ற ஓர் ஆங்கிலப் புலமையாளன் அதனை அழகாக மொழிபெயர்த்த காரணத்தால்தான்.

அந்த மொழிபெயர்ப்பு நூல் வெளிவந்த பிறகுதான் உமர்கய்யாம் என்ற கவிஞனை உலகமே அறிந்து கொண்டது. அந்த ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்து அனுபவித்துத்தான் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தமிழில் அதை அழகாக மொழிபெயர்த்தார்.

“வெயிற்கேற்ற நிழலுண்டு வீசும் தென்றல் காற்றுண்டு

கையிற் கம்பன் கவியுண்டு, கலசம் நிறைய மதுவுண்டு

தெய்வ கீதம் பலவுண்டு, தெரிந்து பாட நீயுண்டு

வையந் தருமிவ் வனமின்றி வாழும் சொர்க்கம் வேறுண்டோ?”

இதனுடைய ஆங்கிலத்தை அனுபவிக்க வேண்டுமானால்,

“A Book of Verses undermeath the Bough / A Jug of Wine, a Loaf of Bread - and Thou / Beside me singing in the Wilderness - / O, Wilderness were Paradise enough!”

என்பவை ஆங்கில வரிகளாகும்.

தமிழ்நாட்டில் உள்ள இலக்கியச் சுவைஞர்களுக்கு உமர்கய்யாம் பாடல்கள் இன்றைக்கும் தேனினும் இனிமையாக இருப்பதற்குக் காரணம், கவிமணியின் இனிய மொழிபெயர்ப்புத்தான்.

இன்னொரு மொழியின் இலக்கியங்கள் தன்னுடைய மொழியில் இடம்பெற்று நம்மைக் கவருமானால், நமக்கு இரண்டு பலன்கள் உண்டு.

ஒன்று, அந்த மொழியைப் படிப்பதற்கான கால, நேரத்தை நாம் செலவிடத் தேவையில்லை. அந்த மொழியில் உற்பத்தியாகியுள்ள உன்னத இலக்கியங்களை நமது சொந்த மொழியில் படித்துக் கொள்ள வசதி ஏற்படுகிறது. உமர் கய்யாம் அப்படித்தான் நமக்குக் கிடைத்துள்ளார்.

இந்தப் பின்புலத்தில் ஆங்கில இலக்கியங்களைத் தமிழ் வாசகர்களுக்குத் தர வேண்டுமென்று, தமிழ்க் கவிஞராகவும், ஆங்கிலப் பத்திரிகையின் தலைமை நிருபராகவும் பணியாற்றி அனுபவம் பெற்ற கவிஞர் பா. மீனாட்சிசுந்தரம் அவர்களைச் சந்தித்தபோது தெரிவித்தேன்.

உற்சாகமடைந்த அவர், உடனடியாகத் தந்த பதில் ஆங்கிலக் கவிஞர்களில் பெண் கவிஞர்களை முதலில் எழுதுகிறேன். அதன் பிறகு தொடர்கிறேன் என்று முகமெல்லாம் தாமரையாய் மலர, ஒப்புக்கொண்டார்.

தொடரக்கூடிய அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்புக்கான முதல் பகுதியாக, “சூனியக்காரிகளின் சொந்த எழுத்து” என்பதை வாசகர்களுக்கு முன்னுரையாகத் தருவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

– இ.ஆர்.

சூனியக்காரிகளின் சொந்த எழுத்து

அவனது தலைமுடிகளுக்குக் கீழே வளர்ந்து கொண்டிருந்த கழுதையின் காதுகளை உலகிற்கெல்லாம் மறைத்துவந்த மிடாஸ் என்ற பண்டைய கிரேக்க மன்னன், தன் மனைவியிடம் மட்டும் அதை மறைக்க இயலாதவனாய் இருந்தான். அதனால், அந்த ரகசியத்தை எவரிடமும்

சொல்லக் கூடாதென்று அவளிடம் ஓர் உறுதிமொழியைப் பெற்றிருந்தான்.

நாள்கள் நகர்ந்தன. அவளிட மிருந்து வெளியேறத் துடித்த ரகசியம், நிதமும் அவள் நெஞ்சை அழுத்த,



அதை யாரிடத்திலேனும் வெளியிட வேண்டும் என்ற கட்டாயத்திற்கு ஆளா னாள்.

ஒருநாள், ஏரிக்கரைக்குச் சென்று, அங்கே ஓடிக் கொண்டிருந்த நீரின் மேல் தன் உதடுகளை வைத்து "என் கணவனுக்கு இரண்டும் கழுதைக் காதுகள்" என்று கத்தினாள்.

ரகசியங்களைக் காக்க முடியா தவள் மட்டுமல்ல பெண். அவள் ஒரு சூனியக்காரி. அவள் வணங்கும் தெய் வங்கள் ஸ்தாபிக்கப் பட்ட தேவாலயத்திற்குத் தொடர்பற்றவை, அதன் அடித்தளத்தைத் தகர்த் தெறிபவை. அவள் அபாயகரமானவள். கணக்கற்ற உயிர்களைக் கொன்று குவித்த 'த பிளாக் டெத்' (The Black Death) என்ற கொள்ளை நோய்க்கும், இங்கிலாந்து –பிரான்சிற்கு இடையே நடந்த நூறாண்டுப் போருக்கும் (The Hundred Years' War) பெண் என்ற அந்த சூனியக்காரியே காரணம் என்று நம்பியது அன்றைய மேற்குலகம். அந்த மூடநம்பிக்கையே நூற்றாண்டுகளாய்ப் பெண் அனுபவித்த சொல்லொணா வதைகளுக்கும், கணக்கற்ற மரணங் களுக்கும் காரணமானது.



அவ்வாறு வதைத்துக் கொல்லப் பட்ட பெண்களின் எண்ணிக்கை கோடிகளைத் தொட்டிருக்கலாம் என்று அமெரிக்கப் பெண்ணியவாதி களும் எழுத்தாளர்களுமான பார்பரா ஏரென்ரெய்க் (Barbara Ehrenreich) மற்றும் டெய்ட்ரே இங்க்லிஷ் (Deirdre English) கணக்கிடுகிறார்கள். இப்படி எந்தவொரு சமூகத் தீங்கிற்கும் ஆண்



களால் காரணம் காட்டப்படுகிற வளாகப் பெண் மட்டுமே வரலாறு நெடுக நிறைந்திருக்கிறாள்.

"இயற்கை படைத்த முடமே பெண்" என்றார் கிரேக்கத் தத்துவ அறி ஞர் அரிஸ்டாட்டில்.

"பெண்ணின் தூமை பட்டால் புதிய மது புளித்த மதுவாகிறது. அவளின் மாதவிடாய் ஒழுக்குத் தீண்ட, பயிர் கள் மலடாகின்றன. கூரிய வாளின் முனை

மழுங்குகிறது. தந்தத்தின் பளபளப்பு மங்கிப் போகிறது. ஒளிவீசும் பித்தளையும், உறுதியான இரும்பும் துருவின் கோரப் பிடிக்கு இரையாகின்றன. குரூரமான அவளின் தூமைநெடி காற்றில் நிரம்புகிறது" என்று பெண்ணின் உயிரியல் இயக்கம் குறித்து அருவருக்கிறார், கி.மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ரோமானியத் தத்துவ அறிஞர் பிளினி.



கிறிஸ்து பிறப்பதற்கு முந்தைய நூற்றாண்டுகளில் வாழ்ந்த சங்கப் பெண்பாற் புலவர்களின் அரசியல் சமூக அறிவைக் கண்டு வியக்கிறோம் நாம். **ஆனால் இயேசுபிரான் தோன்றி பதினான்கு நூற்றாண்டுகள் வரை ஆங்கில இலக்கியத்தில் ஒரு பெண் படைப்பாளியும் தோன்றவில்லை.** ஆங்கிலோ சாக்ஸன் மொழியில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற இங்கிலாந்தின் முதல் இலக்கியப் படைப்பான 'பெயவல்ப்' (Beowulf) கூட " பெண் என்பவள் ஒரு பண்டமாற்றுப் பொருள். ஆணிற்கான வேலையாளே அவள்" என்று வரையறுக்கிறது.

தேவகுமாரன் சிலுவையில் அறையப்பட்டதற்கு, இறைவனின் கட்டளையை மீறிய ஏவாளே காரணம் எனப் பெண்ணின்மீது பழி சுமத்தியது ஐரோப்பியச் சமூகம். ஆனால் அதே சமூகம்தான் இயேசுவைத் தன் கருவில் சுமந்ததற்காய்க் கன்னி மரியாளைப் போற்றி வணங்கியது. அதன் வடிவமே ஐரோப்பிய நாடுகளெங்கும் பரவியிருந்த 'மேரியோலட்ரி' (Mariolatry) என்ற 'கன்னி மரியாள் வணக்கம்'.

கன்னி மரியாள் வணக்கமே பிறிதொரு நாளில் 'சானட்' என்கிற பதினான்கு வரிக் காதல் கவிதையானது. அப்பாடலின் வழியேதான் தனது காதலி 'லாரா'வை மறுமலர்ச்சிக்கால இத்தாலியக் கவிஞன் பெட்ராக் (Petrach) கொண்டாடினான்.

மத்தியக்கால இங்கிலாந்து தம் தேசத்துப் பெண்களைச் 'சூனியக்காரிகள்' என்று உரைத்திருப்பினும், பின்னால் தோன்றிய மேற்கத்தியச் சமூகங்கள் அவர்களின் எழுத்தைக் கொண்டாடத் தவறவில்லை!



பா. மீனாட்சிசுந்தரம்

அப்படி ஒரு 'சூனியக்காரி' தான் வாழ்ந்த பதினான்காம் நூற்றாண்டில் ஒருமுறை இறைவனைக் கண்டாள்.

'லத்தீன்' எனும் தேவமொழி கற்கும் வாய்ப்பற்ற அந்த ஏழைப் பெண்துறவி, தான் கடவுளைக் கண்ட அனுபவத்தை ஆங்கிலத்தில் மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுதி வைத்திருந்தாள். அவளிலிருந்தே தொடங்குகிறது ஆங்கில இலக்கியத்தின் முதல் பெண்ணெழுத்து.

ஒரு நேர்காணலுக்காக அவளை அழைத்துப் பார்த்தேன். அடுத்த மாதம் நிச்சயம் வருவதாகச் சொல்லியிருக்கிறாள்.

●

கட்டுரை

இரா. வேணுகோபாலகிருஷ்ணன்

தமிழ்நாட்டில் வித்தியாசமான ஒரே மேல்நிலைப்பள்ளி

கல்வியானது ஏட்டுக்கல்வி, தொழிற்கல்வி என இருவகையாக உள்ளது. வெறும் ஏட்டுக்கல்வி மட்டுமே கற்றவர்களைவிட, தொழிற்கல்வி கற்றவர்கள் எளிதில் முன்னேறுகிறார்கள். அவர்கள் ஏதேனும் நிறுவனத்தில் பணியில் அமர்ந்தோ அல்லது சொந்தமாகத் தொழில் தொடங்கியோ தங்கள் வாழ்வைச் செம்மைப்படுத்திக் கொள்கிறார்கள்.

எனவேதான் பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் ஏதேனும் தொழில் தெரிந்திருக்க வேண்டும், அதற்காகப் பள்ளியிலேயே தொழிற்கல்வி கற்றுத்தர வேண்டும் என்று பத்மபூஷண் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் ஐயா வலியுறுத்தி வந்தார்.

அக்கருத்தைச் சொன்னதோடு நின்றுவிடாமல், அதனைச் செயல்படுத்துவதற்காக, பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் 1995–ஆம் ஆண்டு, அவரது தாத்தா திரு. பழனிக்கவுண்டர் அவர்களின் பெயரில் 'பழனிக்கவுண்டர் மேல்நிலைப்பள்ளி'யைத் தொடங்கினார்.

1995–ஆம் ஆண்டு 44 மாணவர்களுடன் தொடங்கப்பட்ட இப்பள்ளியில், தற்போது தொழிற்பிரிவில் 212 மாணவர்களும், பொதுப்பிரிவில் 206 மாணவர்களுமாக 418 மாணவர்கள் படிக்கிறார்கள்.

மேல்நிலைப்பள்ளியாக மட்டுமே செயல்படும் இப்பள்ளி, தொழிற்கல்விப் பாடத்திட்டத்தைக் கொண்டதாகும். இது, அருட்செல்வரின் நோக்கத்திற்கிணங்க, மாணவர்கள் படிக்கும்போதே உழைப்பு, படிக்கும்போதே தங்கள் கல்விக் கட்டணத்தைத் தாங்களே ஈட்டிப் படித்தல் என்ற நோக்கில்



வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தில் இம்மாதிரியான தொழிற்கல்வி கற்பிக்கத் தொடங்கப்பட்ட முதல் பள்ளி இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

மிகவும் குறைந்த மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சியடைந்தவர்கள், தேர்வில் தோல்வியுற்றுப் பின்னர் தேர்ச்சி பெற்றவர்கள் ஆகியோரைச் சேர்த்துக் கல்வி கற்பிப்பதும் இப்பள்ளியைத் தொடங்கியதில் அருட்செல்வர் ஐயாவின் குறிக்கோள்களாக இருந்தன.

பத்தாம் வகுப்பில் தோல்வியுற்ற



மாணவர்களைப் பெரும்பாலான தனியார் பள்ளிகள் மேல்நிலைக் கல்விக்குச் சேர்த்துக் கொள்வதில்லை. ஆனால் இங்கு, பத்தாம் வகுப்புத் தேர்வில் தோல்வியுற்றுப் பின்னர் தனித் தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தாலும் இங்குச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

மேலும், பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் தோல்வியுற்ற மாணவர்களுக்குத் தேர்ச்சி பெறாத பாடங்களில் சிறப்புப் பயிற்சி தந்து தேர்ச்சிபெற வைத்தும் அம்மாணவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

அரசால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே இங்குப் பெறப்படுகிறது. பெற்றோர்களின் பொருளாதாரச் சூழ்நிலைக்கேற்பத் தவணை முறையில் கட்டணம் செலுத்தலாம். அரசின் விலையில்லாப் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. அரசின் கட்டணமில்லாப் பேருந்து வசதியும் உள்ளது.

இப்பள்ளியின் தொழிற்கல்விப் பாடத்திட்டம் அரசாங்கம் உருவாக்கியது. தற்போது மத்திய அரசு 9–ஆம் வகுப்பிலிருந்தே தொழிற்கல்வி கொண்டுவரத் திட்டமிட்டுள்ளது.

தற்போது தொழிற்பிரிவு மட்டுமல்லாமல், பொதுப்பிரிவுக் கல்வியும் உள்ளது. ஸ்மார்ட் வகுப்புகள் (Smart Class) மூலம் சிறந்த கற்றல், கற்பித்தல் செயல்பாடுகள் உள்ளன. வெளியூர் மாணவர்களுக்கு விடுதி வசதி உள்ளது.



பொறியியல் படிப்புச் சேர்க்கையில், இந்தப் பிரிவில் தொழிற்கல்வி பயின்ற மாணவர்களுக்கு, அண்ணா பல்கலைக்கழகத்தின் அனைத்து உறுப்புக் கல்லூரிகளிலும் ஒற்றைச் சாளர முறையில் 10 விழுக்காடு இடங்கள் தனியாக ஒதுக்கப்பட்டுள்ளன என்பது இந்தப் பாடப்பிரிவுகளின் சிறப்பு.

மத்திய அரசின் கனவுத் திட்டமான இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் 'அடல் டிங்கரிங் ஆய்வகம்' (ATAL TINKERING LAB) வரும் கல்வியாண்டிலிருந்து இங்குச் செயல்படுத்தப்பட உள்ளது.

கல்லூரியில் கிடைக்கும் விஞ்ஞான அறிவைப் பள்ளிப் பருவத்திலிருந்தே வளர்க்க உருவாக்கப்பட்ட ஆய்வகமே "அடல் டிங்கரிங் ஆய்வகம்" ஆகும். அறிவியல் தொழில்நுட்ப அறிவை மாணவப் பருவத்திலிருந்தே வளர்த்துக் கொள்வதும், ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் பல அப்துல் கலாம்களை உருவாக்குவதும் இதன் இலட்சியமாகும்.

மத்திய அரசு 'அடல் டிங்கரிங் ஆய்வகம்' அமைக்க இப்பள்ளிக்கு ரூ. 20 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இது இந்தப் பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், சுற்று வட்டாரத்திலுள்ள தனியார் மற்றும் அரசுப் பள்ளிகளின் உயர்நிலை, மேல்நிலை மாணவர்களுக்கும் இலவசப் பயிற்சி தருவதற்கு உதவும்.

பள்ளியில் எத்தனை மாணவர்கள் வந்தாலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். மாணவிகளும் சேர்ந்து தொழிற்கல்வி பயின்று வருகிறார்கள். பழனி, தாராபுரம், கரூர், ஒட்டன்சத்திரம், கேரளா முதலிய வெளியூர்களிலிருந்து வந்தும் மாணவர்கள் தங்கிப் படிக்கின்றனர். மாணவர்களுக்கு மட்டும் விடுதி வசதி உள்ளது. மாணவியர்க்கு இல்லை.

இங்குப் படித்துச் செல்லும் மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும் சேர்ந்து பயிலும்போது நன்கு

பயின்று பிரகாசிக்கிறார்கள். காரணம், இங்கு ஏற்கனவே டாக்டர் மகாலிங்கம் பொறியியல் தொழில்நுட்பக் கல்லூரியின் அதிநவீனமான ஆய்வகங்களிலும், தொழிற்பயிற்சிப் பட்டறைகளிலும் செய்முறைப் பயிற்சிகளில் நல்ல அனுபவம் பெற்றுச் செல்கின்றனர்.


திரு. ஏ. சின்னசாமி

இங்குப் படித்து முன்னேறியவர்கள் இங்கேயே ஆசிரியர்களாகப் பணியாற்றுகிறார்கள். இந்தப் பள்ளியின் ஆசிரியர், தமிழ்நாடு அரசின் பாடத்திட்டக்குழுவில் ஆட்டோமொபைல் தொழிற்கல்விப் பாடநூலை எழுதியுள்ளார். கல்வித் தொலைக் காட்சியிலும் பாடம் கற்பித்துள்ளார். மத்திய அரசுத் திட்டத்தின்படி, 9, 10–ஆம் வகுப்புகளுக்கான தொழிற் கல்விப் பாடநூலையும் அவர் எழுதவுள்ளார்.

தமிழகத்தில் தற்போது இம்மாதிரிப் பள்ளிகள் பல செயல்படுகின்றன. எனினும், சேவை நோக்கத்தில் செயல்படுவதோடு, வெளியில் பல நிறுவனங்களுக்கு வேலைக்கு அனுப்புவது இந்தப் பள்ளியில்தான். இங்குப் பயின்று பொறியியல் கல்லூரிகளுக்கும், பாலிடெக்னிக்குகளுக்கும் எளிதாகச் சென்று சேர்ந்து படிக்கிறார்கள்.

இங்குப் படித்த மாணவர்கள் புகழ் வாய்ந்த பெரிய நிறுவனங்களில் தற்போது பணியில் உள்ளனர். சொந்தத் தொழிலும் செய்கிறார்கள். வெளிநாடுகளிலும் பலர் வேலை வாய்ப்புப் பெற்றுப் பணியாற்றுகிறார்கள்.

இந்தப் பாடத்திட்டத்தில் உள்ள தொழில்கள் தவிர, இவற்றைத் தாண்டிய வேறு தொழிற்சாலைகளுக்கும் இப்பள்ளி மாணவர்கள் சென்று வேலைகள் கற்றுக் கொள்கின்றனர்.


திரு. டி. கணேசன்

சென்னை போரூரிலுள்ள ‘ஜோஹோ யுனிவர்சிட்டி’ (Zoho University) என்னும் ஐ.டி. நிறுவனம் இங்கு வந்து சில மாணவர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு 18 மாதங்களுக்கு, மாதம் ரூ. 10 ஆயிரம் உதவித் தொகையுடன் பயிற்சிகள் தருகிறது.

அம்மாணவர்களுக்கு ஆங்கிலப் பயிற்சி, கணிப்பொறிப் பயிற்சி உள்ளிட்ட பல பயிற்சிகளுக்குப் பிறகு அவர்கள் எந்தத் துறையில் பிரகாசிக்கிறார்களோ, அந்தத் துறையில் மாதம் ரூ. 35 ஆயிரம் தொடங்கி ஊதியத்துடன் வேலைவாய்ப்புத் தரப்படுகிறது. வெளிநாடுகளுக்கும் செல்கின்றனர்.

மாணவர்கள் நிறுவனங்களில் வேலை செய்வதற்கு நாள் ஒன்றுக்கு ரூ. 50/– ஊதியமாகப் பெறுகின்றனர். பேருந்துக் கட்டணம், உணவு, தேநீர் அளிக்கப்படுகிறது. ஹரிராம் ஹோண்டா நிறுவனத்தினர் 9 மாணவர்களுக்குப் பள்ளிக் கட்டணம் கட்டியுள்ளனர்.

வரும் ஆண்டிலிருந்து அரசின் போட்டித் தேர்வுகளுக்குத் தனிப்பயிற்சி அளிக்க இப்பள்ளி நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

மாணவர்கள் நிறுவனங்களில் பயிற்சிகளுக்குச் செல்லும்போது, அவர்களைக் கண்காணிக்கக் கண்காணிப்பாளர் பள்ளியிலிருந்து அனுப்பப்படுகிறார். அவர் மாணவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதோடு, மாணவர்களின் பிரச்சனைகளையும் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்கிறார்.

மத்திய அரசின் மனிதவள

மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் இயங்கும் என்.சி.இ.ஆர்.டி. (NCERT) அமைப்பின் சிறந்த தொழிற்பயிற்சிப் பள்ளிக்கான விருதினை 2002 மற்றும் 2004 ஆண்டுகளில் இருமுறை பெற்றுள்ளது இப்பள்ளியின் சிறப்பிற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

பள்ளியில் கற்பிக்கப்படும் பாடங்கள் : எல்லா வகுப்புகளுக்கும் மொழிப் பாடங்களான தமிழ், ஆங்கிலம், மற்றும் கணிதம் ஆகியன பொதுவானவை. செய்முறைப் பயிற்சிகளுக்கு 100 மதிப்பெண்கள் உள்ளன.

தொழிற்பிரிவில் :

1. கணிதம், அடிப்படை இயந்திரவியல் (Basic Mechanical Engineering), கணினித் தொழில்நுட்பம் – தமிழ் வழி.
2. கணிதம், அடிப்படை மின் பொறியியல் (Basic Electrical Engineering), கணினித் தொழில்நுட்பம் – தமிழ் வழி.
3. கணிதம், அடிப்படை தானியங்கி ஊர்திப் பொறியியல் (Basic Automobile Engineering), கணினித் தொழில்நுட்பம் – தமிழ் மற்றும் ஆங்கில வழி.

இவையன்றி, செய்முறைப் பயிற்சி ஒரு பாடப்பிரிவாக உள்ளது. 'வைவா' எனப்படும் நேர்முக வாய்மொழித் தேர்வும் உண்டு.

பொதுப்பிரிவில் :

1. இயற்பியல், வேதியியல், கணிதம், கணினி அறிவியல் – தமிழ் மற்றும் ஆங்கில வழி.
2. இயற்பியல், வேதியியல், கணிதம், உயிரியல் – தமிழ் மற்றும் ஆங்கில வழி.

கலைப்பிரிவில் :

1. பொருளியல், வணிகவியல், கணக்குப் பதிவியல், கணினிப் பயன்பாடு – தமிழ் மற்றும் ஆங்கில வழி.

பொள்ளாச்சி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் அமைந்துள்ள கீழ்க்கண்ட தொழிற்சாலைகளில் மாணவர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

1. மேக் சால்வ்ஸ் (பி) லிட்.
2. லட்சுமி ஆட்டோமேட்டிவ் லூம் வொர்க்ஸ் லிட்.
3. ஆனைமலைஸ் எஞ்சினியரிங் (பி) லிட்.
4. நா. மகாலிங்கம் அன்ட் கம்பெனி.
5. சக்தி சுகர்ஸ் (சோயா டிவிஷன்) லிட்.
6. ஏபிடி மாருதி.
7. சாய்சரண் எலக்ட்ரானிக்ஸ்.
8. ரூட்ஸ் மல்டிகிளீன் லிட்.
9. அழகப்பா எஞ்சினியரிங் (டாடா மோட்டார்ஸ்).
10. ஹரிராம்ஸ் ஹோண்டா (ஹோண்டா டூ வீலர்).
11. என்.ஐ.ஏ. பவர் ஹவுஸ்.

என்.ஐ.ஏ. கல்வி நிறுவனங்களில் ஒன்றாகப் பழனிக்கவுண்டர் மேல் நிலைப் பள்ளியும் உள்ளது. தலைவர் டாக்டர் ம. மாணிக்கம் அவர்கள், தாளாளர் திரு. மா. ஹரிஹரசுதன், செயலர் டாக்டர் சி. இராமசாமி ஆகியோர் தலைமையில் சிறப்பாகச் செயல்படுகிறது. பள்ளியில் எல்லாப் பாடங்களுக்கும் சேர்த்து 18 ஆசிரியர்கள் உள்ளனர்.

பள்ளியின் நிர்வாக அலுவலர் திரு. ஏ. சின்னசாமி ஐயா, தலைமை ஆசிரியர் திரு. டி. கணேசன் ஆகியோரின் சிறப்பான நிர்வாகத்தில் மாணவ, மாணவியர் நல்ல கட்டுக்கோப்புடன் பயின்று, பள்ளிக்குப் பெருமை சேர்ப்பதுடன், தங்களுக்கும் சிறப்பான எதிர்காலத்தை இப்பள்ளியில் பெற்று முன்னேறி வருகிறார்கள்.

பழனிக்கவுண்டர் மேல்நிலைப் பள்ளியில் தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியர் ஒளிமயமான எதிர்காலத்திற்குச் சொந்தக்காரர்கள் என்பது மறுக்க இயலாத உண்மை!

●

அரசியலைச் சுத்திகரிக்குமா இம்முயற்சி?

விவாதக் கடிதங்களில் சில... சில...

எவரும் என்னுடைய மோர் புளிக்கும் என்று சொல்ல மாட்டார்கள். அது போன்றுதான் வேட்பாளர்கள் தங்கள் மீதுள்ள வழக்குகளைத் தாங்களாகவே முன்வந்து வெளிப்படுத்த மாட்டார்கள். தேர்தல் ஆணையம்தான் காவல், நீதித் துறை மூலம் அவற்றைப் பெற்று வேட்பாளர்களிடம் கொடுத்துத் தங்கள் விளம்பரங்களில் இவை கட்டாயம் இடம்பெற வேண்டும் என்று பணிக்கலாம். ஒரு தொகுதியில் போட்டியிடுவோர் அத்தொகுதியில் குறைந்தபட்சம் ஆறு ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும் மற்றும் குடியிருக்க வேண்டும் என்றும் திருத்தம் செய்யலாம்.

– **வரதன்,** திருவாரூர்.

உச்சநீதிமன்றத்தின் அதிரடி உத்தரவு மட்டுமே அரசியலைச் சுத்திகரிக்கும் என நாம் எதிர்பார்த்தோமேயானால், அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்குச் சமம். குற்றப்பின்னணி கொண்ட சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவர்களே மனந்திருந்திப் பதவி விலக வேண்டும் அல்லது மக்கள் ஓட்டளிக்கக் கூடாது. சம்பந்தப்பட்ட கட்சித் தலைமை குற்றப் பின்னணியுடையவர்களை ஒதுக்கி ஓரம் கட்ட வேண்டும்.

– **இரா. வளையாபதி,**
தோட்டக்குறிச்சி.

உச்சநீதிமன்றத்தின் உத்தரவு இப்படி வரவேண்டும் : 'கிரிமினல் என நிரூபணமானவர், தான் அல்லது தன் மனைவி / கணவர், உறவினர், தனது பினாமி யாரையும் தேர்தலில் நிறுத்தவோ, தேர்தலில் நிற்பவர் எவருக்கும் உதவவோ கூடாது.' இப்படியொரு கிடுக்கிப்பிடி போட்டால், ஓரளவு அவர்களின் ஆட்டத்தைக் குறைக்க, முடக்க முடியும். எனினும் அவர்கள் அரசியல் மேதாவிகளாக மக்கள் முன் நடமாடுவதைத் தடுக்க முடியாது.

– **இரா. கல்யாணசுந்தரம்,** மதுரை.

எல்லா அரசியல் கட்சிகளிலும் நீக்கமற நிறைந்துள்ள குற்றப் பின்னணியுள்ள கட்சிக்காரர்கள் பல்வேறு பதவிகளில் தொடர்ந்து கோலோச்சி வருவது நம் ஜனநாயக மரபை மாசுபடுத்தி வருகிறது. உச்சநீதிமன்றமும் சரியான தீர்ப்பு வழங்கிவிட்டது. காலந்தாழ்த்தாது, கிரிமினல்களைக் கண்டு பிடித்துக் களையெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

– **நவீன்குமார்,** நடுவிக்கோட்டை.

மக்களது நல்வாழ்வியலுக்கான நன்னெறி முறைகளை ஆதி தொட்டே பாரதம் வழங்கியதை எவரும் மறுப்பதற்கில்லை. அவற்றைக் கடைப்பிடிக்கத் தவறியமையால்தான் குறைகள் – குற்றங்கள் – சோதனைகள் – வேதனைகள் தொடர்ந்தன; தொடர்ந்தும் வருகின்றன. குறைந்தபட்சம் வள்ளலார், விவேகானந்தர் காட்டிய ஆன்மிக – அறிவுப்பூர்வ வழிமுறைகளைக் கண்

டால், கொண்டால் போதும், மானுட வர்க்கமே சீர்திருந்தும்.

– **எஸ்.ஜி. இசட்கான்,** திருப்பூர்.

1947–க்கு முன் அரசியலில் இராஜாஜி, ஓமந்தூரரார், குமாரசாமி ராஜா, காமராஜர் முதலிய நேர்மை யாளர்கள் இருந்த காரணத்தால், தேர்தல் முறைகளும், வேட்பாளர்கள் தேர்வும் நியாயமாக நடைபெற்று வந்தன. 1967–க்குப் பின் ஊழல்கள் பல புரிந்தாலும், அவை ஊடகங்களால் மக் களுக்கு எடுத்துரைக்கப்பட்டாலும், வாக்காளர்களின் மனதைக் கவர்ந்து மயக்கிய பிரபல்யங்களே நாடாளுமன்ற, ராஜ்யசபா உறுப்பினர்களாகத் தேர்வு செய்யப்படுகின்றனர். அரசியலைச் சுத்தப்படுத்த உச்சநீதிமன்ற உத்தரவுகள், தேர்தல் ஆணையத்தின் பொறுப்புக் களைவிட, மக்களின் மனமாற்றமே பெரிதும் உதவும்.

– **த. நாகராசன்,** சிவகாசி.

நாடாளுமன்றத்திலும், சட்டமன்றத் திலும் பல கிரிமினல் வழக்குகளும், பல்வேறு குற்ற வழக்குகளும் உள்ள எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள்தான் இருக் கிறார்கள். இவர்களுக்குப் பாதகமான சட்டங்களை இவர்கள் இயற்றுவார் களா? அரசியல் செல்வாக்கும், பண பலமும், ஆள் பலமும் உள்ளதால், நீதி மன்ற உத்தரவுகளையும், தேர்தல் கமிஷ னையும் துச்சமெனக் கருதிச் செயல் படும் இவர்களை மக்கள்தான் இனம் கண்டுகொள்ள வேண்டும்.

எந்தச் சட்டம் கொண்டுவந்தாலும், அதிலுள்ள ஓட்டைகளை வைத்துத் தப்பித்துக் கொள்பவர்களைத் தேர்தல் கமிஷனால் என்ன செய்ய முடியும்? மக்கள் சிந்தித்துச் செயல்பட்டா லொழிய, நாட்டில் எந்த நல்ல மாற்ற மும் நிகழாது!

– **பே. சண்முகம்,** செங்கோட்டை.

நாடு சுதந்திரம் பெற்று 70ஆண்டு களுக்கு மேல் ஆகியும், இன்னும்கூட அடிப்படை வசதிகள் பெரும்பாலான பகுதிகளில் செய்யப்படவில்லை. தொலைக்காட்சிகளிலும், நாளிதழ் களிலும் இச்செய்திகள் வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன. சமீபத்தில் தேர்தல் சமயத்தில் தேனி அருகே கழுதை மீது ஓட்டுப்போடும் உபகரணங்களைக் கொண்டு சென் றதைப் படிக்கும் பொழுது, நம் அரசி யல் தலைவர்கள்மேல் கோபம் கொப் பளிக்கிறது. ஒரு நாள் கழுதை மீது பாரம் ஏற்றிச் சென்றதற்கே செய்தி வெளியிடுகிறார்கள். அங்கே நிலையாக இருக்கும் பொதுமக்களுக்கு, அவர்கள் பொருள்கள் கொண்டு செல்வதற்கு எத்தனை சிரமம் இருக்கும்? இவற்றை ஏன் வெளியீடு செய்வதில்லை?

– **ஆ.ர. அருணகிரி,**
ஆலாம்பாளையம்.

ஜனநாயகமா – பணநாயகமா? என்று வாதம் வைத்தால், எது ஜெயித்து இருக்கிறது? வழக்கில் விசாரணை என்ற பெயரில் வாதாடும் வழக்குரைஞர்களே, உண்மை பேசுங்கள். நடைபெற்று முடிந்த தேர்தல்களில் பணநாயகம் வென்று, ஜனநாயகம் நின்று வேடிக்கை பார்த்தது. சட்டம் பேசும் இவர்களில், சட்டத்தை எத்தனை பேர் மதிக் கின்றனர்? இங்கு சட்டம் மனிதனின் வசதிக்குத் தகுந்தாற்போல் இருக்கிறது. நீதி தேவதையின் கண்கள் நீண்ட நாட்கள் மூடியிருக்காது.

– **கந்தசாமி – பாக்கியம்,**
குருவரெட்டியூர்.

தேர்தலில் நிற்பவர்களின் குற்ற வழக்கை உடனே நீதிபதிகள் எடுத்து விசாரிக்க வேண்டும். நீடிக்கும்பட்சத் தில் குற்ற வழக்கில் உள்ளவர் தேர்தலில் நிற்கத் தடை விதிக்கலாம். அவர் குற்ற மற்றவர் என்று தீர்ப்பு வந்தால், பொய் வழக்காகக் கருதிக் குற்றம் சுமத்தியவ ரிடமிருந்து மான நஷ்ட அபராதமாக ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத் துமாறு விதிக்கலாம். குற்றம் உறுதி செய்து தீர்ப்பளிக்கப்படுமானால், அவர் வாழ்நாள் முழுவதும் தேர்தலில் நிற்கத் தடை விதிக்கலாம். இதற்கு மேலாக மக்கள் விழிப்புணர்வுடன், சுயநலமின்றி



<u>அட்டைப்படம்</u>

திருச்சி அக்கரைப்பட்டியில் அழகிய தென் ஷீரடி

மராட்டிய மாநிலத்தில் உள்ள ஷீரடி கிராமத்தில் சாயிபாபா கோவில் உள்ளது. சுவாமியின் பூர்வீகம் அவர் முஸ்லீம் எனக் கூறப்படுகிறது. அதற்கு ஏற்ப ஷீரடி கோவிலின் வாசலிலேயே மசூதி இருக்கிறது. தொழுகை நடத்த முஸ்லீம்கள் வருகிறார்கள்.

இந்தியாவின் எல்லா மாநிலங்களிலிருந்தும், எல்லா மதங்களிலிருந்தும், எல்லா வயதினரும், எல்லா மாதங்களிலும் வந்துகொண்டேயிருக்கிறார்கள். அங்குள்ள வழிபாட்டு முறை, ஹிந்துக் கோவில் வழிபாட்டுமுறை போன்றது அல்ல. ஷீரடி பக்தர்கள் காணிக்கைக்குச் சமமாக அங்கேயே தங்கிக் கைம்மாறு செய்கிறார்கள்.

இவற்றையெல்லாம்விட, 24 மணி நேரமும் ஷீரடியில் விடுமுறையோ, ஓய்வு நேரமோ இல்லாமல் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிற இலவச மருத்துவமனை. ஆலயங்கள் அனைத்திலும் மடப்பள்ளியைவிட, இதுபோன்ற மருத்துவமனைகள் கட்டாயம் இருக்க வேண்டும்.

இந்த ஷீரடியைப் போன்றே, திருச்சி சமயபுரத்திற்குப் பக்கத்தில் அக்கரைப்பட்டியில் தென் ஷீரடிக் கோவில் ரூ. 40 கோடியில் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாத ‘ஓம் சக்தி’யின் முகப்பைத் தென் ஷீரடி, வாசகர்களை ஆசீர்வதிக்கிறது.

– ந.நி.

வேட்பாளரின் குணம் – குற்றங்களைச் சீர்தூக்கிப் பார்த்து வாக்களித்தால் நேர்மையாளர்கள் ஆட்சிக்கு வர வாய்ப்பிருக்கிறது.

– **மு. கணபதி,** பெருந்துறை.

உச்சநீதிமன்றம் அரசியல்வாதிகளுக்கு அளித்த தீர்ப்புகளை அரசியல் வியாபாரிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி வருவதைக் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. குற்றவாளிகளும் தேர்தலில் பங்கு கொள்கிறார்கள். நீதிமன்றங்களில் உயர் பதவி, அதிகாரத்தில் இருப்பவர்களின் தலையீடு அதிகம். பாகிஸ்தான், துபாய் முதலிய நாடுகளில் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதால் குற்றங்கள் குறைந்துள்ளன. அந்நாடுகளைப் பின்பற்றியாவது கடுமையான குற்றங்கள் செய்வதைத் தடுத்து நிறுத்த வேண்டும். ஆனால், இன்றுள்ள நிலையில் அரசியலை இம்முயற்சிகள் ஒருபோதும் சுத்திகரிக்காது என்பதே எங்களது கருத்தாகும்.

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

நீதிமன்றங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் அரசியலைச் சுத்திகரிக்கவே எடுக்கப்படுகின்றது. அதனால் நிச்சயம் அவர்களின் ஒவ்வொரு தீர்ப்பும் அரசியலுக்கு நல்லதொரு மாற்றத்தைக் கொண்டு வரும். அதனால் மக்களுக்கு நல்லது நிகழும் என்ற நம்பிக்கையுடனேயே நல்ல தீர்ப்புகளை அறிவிக்கிறார்கள். குற்றப் பின்னணி உடையவர்கள் அதை உணர்ந்து தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும் அல்லது அந்தக் கட்சியிலிருந்து விலகிவிட வேண்டும் என்பதற்காகவே நீதிமன்றங்கள் இதுபோன்ற தீர்ப்புகளைச் சொல்வதால், நிச்சயம் இந்தச் செயல் அரசியலில் ஒரு மாற்றத்தை உண்டாக்கிச் சுத்திகரிக்கவே செய்யும் என்று நம்புவோம்!

– **உஷா முத்துராமன்,** திருநகர்.

அரசியல் குற்றப் பின்னணியாளர்களைப் பற்றிய விபரங்கள் அனைத்தையும் பிரபலமான தினசரிகளிலும், தொலைக்காட்சிகளிலும் அந்த அரசியல்வாதிகளே தங்கள் செலவில் விளம்பரம் செய்ய வேண்டுமென உச்சநீதிமன்றம் உத்தரவிட்டிருப்பது மிகவும் புரட்சிகரமான, வரவேற்கத்தக்க தீர்ப்பு. இதற்கு மாறாக, ஆலோசனையோடு நில்லாமல், குற்றப்பின்னணி உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிடுவதற்கான தகுதியே இல்லை என்ற அதிரடியான

உத்தரவு பிறப்பித்தால்தான் முழு நிவாரணம் கிடைக்கும்.

இது குறித்துத் தேர்தல் ஆணையம் ஆய்வு செய்து தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் குற்றமற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்த வேண்டும். குற்றப் பின்னணி உள்ளவர்கள் தேர்தலில் போட்டியிட்டிருப்பது பின்னாளில் தெரிய வரின், வேட்பாளர் வெற்றி பெற்றிருப்பினும் அந்த வெற்றி செல்லாது என்று அறிவிக்க வேண்டும். இது குறித்து மத்திய அரசு, இந்தியத் தேர்தல் ஆணையம், நீதிமன்றம் மூன்றும் இணைந்து சட்ட விதிகளை மிகவும் கடுமையாக்க வேண்டும்.

– ***உ.மு.ந. ராசன் கலாமணி,*** கோபிசெட்டிபாளையம்.

அரசியலைச் சுத்தப்படுத்தும் முயற்சி என்பது கருங்கல்லில் இருந்து நார் உரிப்பது போலத்தான். அரசியல் கட்சிகள் கிரிமினல்களை ஏன் தேர்வு செய்தனர் என்று அரசியல் கட்சிகளே கூறவேண்டும் என்பதும் நடைபெறவில்லை. கையூட்டும், பணம் வாரி இறைக்கும் திட்டங்களைப் பறைசாற்றியுமே தேர்தலில் கிரிமினல்கள் பலனடைந்தார்கள், பலமடைந்தார்கள். தேர்தல் ஆணையமும் வாயை மூடிக் கொண்டுவிட்டது. இதற்கான தீர்வாக, உச்சநீதிமன்றம் மறுமுறையும் தானே குற்றப்பின்னணியுள்ளவர்களை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் அரசியலார் அறிவிக்க வேண்டும் என்ற கட்டாயமான உத்தரவை இடவேண்டும். அவர்களின் பெயர்களை மக்களே அறிவித்தால் நீதிமன்றமே நடவடிக்கை எடுக்கலாம்.

– ***டாக்டர் முனைவர் ஜே.ஜி. சண்முகநாதன்,*** கோவை.

வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டவர்கள் இன்னின்ன குற்றங்களில் தொடர்புடையவர்கள் என விளம்பரம் செய்து, அவர்களுக்கு வாக்களிக்காமல் தோற்கடிக்க வேண்டும் என்ற கருத்து, தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதாகும். குற்றப் பின்னணி உள்ளவர்களை வேட்பாளர்களாகத் தேர்ந்தெடுக்கும் அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்ய வேண்டும். எந்தவித வழக்கும் நிலுவையில் இல்லை என்ற சான்றிதழைப் பெற்றவர்களின் விண்ணப்பங்களை மட்டுமே தேர்தல் ஆணையம் போட்டியிடுவதற்குப் பெற வேண்டும்.

பொய்யான சான்றிதழைத் தந்து போட்டியிட்டு வெற்றி பெற்றாலும், அவர்கள் பற்றிய உண்மை தெரிந்தவுடன் பதவியைப் பறிப்பதோடு, அவர்களுக்கு வாழ்நாள் தடையும் விதிக்க வேண்டும். அதுமட்டுமின்றி, அவர்களின் குடும்பத்தார் யாருக்கும் போட்டியிடத் தகுதி இல்லை எனச் சட்டம் செய்ய வேண்டும்.

– ***புலவர் கருமலைத்தமிழாழன்,*** ஒசூர்.

குற்றப்பின்னணி உடைய அரசியல்வாதிகள் மீதான வழக்குகள் தாமதமின்றி முடிக்கப்பட்டுக் குற்றவாளிகள் தப்பித்துவிடாமல் தகுந்த தண்டனை பெறச் செய்வதும், நாட்டின் நலனுக்கு உகந்ததாகும். தேர்தல் ஆணையம் ஒரு சுதந்திரமான அமைப்பு என்று கூறப்பட்டாலும் ஆளுங்கட்சியின் அழுத்தத்திற்குச் சில சமயங்களில் வளைந்தும், நெளிந்தும் போவதை மக்கள் காண நேர்ந்திருக்கிறது.

தேர்தலில் போட்டியிடுவோர், குற்றப்பின்னணி உடையோராக இருப்பின் தேர்தல் ஆணையம் அது குறித்து மக்களிடம் கொண்டு சேர்ப்பதைத் தம் முக்கியக் கடமைகளில் ஒன்றாகவே கருதிச் செயல்பட வேண்டும். கடுமையான சட்டங்களும், கடுமையான தண்டனைகளுமே குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும். ஊடகங்களும், சமூக ஆர்வலர்களும் குற்றப் பின்னணி உடைய வேட்பாளர்கள் யார் யார் என்பதை மக்களிடம் அடையாளம் காட்டுகின்ற பணியை முழுமுனைப்புடன் செய்ய முன்வருதல் வேண்டும்.

– ***மேலை. தமிழ்க்குமரன்,***

மேலைச் சிவபுரி.

நான்கு தூண்களில் ஒன்றான நீதித்துறைக்கு இன்றைய அரசியல்வாதிகள் அஞ்சுவார்களா? நடக்குமா?

– ***சீத்தலைச்சாத்தன்,*** திருப்பத்தூர்.

கட்டுரை

‘கொரோனா’





உலகமே ஆச்சரியப்படக்கூடிய அளவில் வைசூரி எனப்படும் அம்மை நோய்க்கான நச்சுக்கிருமியை நாம் அழித்து ஒழித்தேவிட்டோம். வைசூரி யாருக்காவது இப்போது வருமானால், அவருக்குப் பரிசு தரக்கூடிய அளவிற்கு அறிவித்திருக்கிறோம். காரணம், அது அந்த அளவுக்கு ஒழிக்கப்பட்டு விட்டது.

இதேபோல், 100 ஆண்டுகளுக்கு முன்பு ‘பிளேக்’ எனப்படும் ஒரு கொடிய நச்சுக்கிருமி உருவானது. அது வீட்டிலுள்ள எலிகளைத்தான் முதலில் தாக்கும். பாதிக்கப்பட்ட எலி செத்துவிழும். அதைக் கண்டு, பிளேக் என்ற நோய் அந்த வீட்டிற்கு வந்துவிட்டது என்று வீட்டையே காலி செய்வார்கள்.

தெருவிற்கு பிளேக் வந்தபோது தெருவையே காலி செய்தார்கள். ஊருக்கு வந்தபோது ஊரையே காலி செய்தார்கள். அந்த நச்சுக் கிருமியை நமது விஞ்ஞானிகள் கண்டுபிடித்து அதையும் அழித்துவிட்டார்கள். பிளேக் நோய் இப்போது நமது ஆவணத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ள செய்தியாக உள்ளது. இதையும் பூமிக்கோளத்தை விட்டே அழித்துவிட்டோம்.

இதேபோல, இன்னொன்று காலரா. அந்த நச்சுக்கிருமி பாதிக்கப்பட்டவருக்கு வயிற்றுப் போக்கை உண்டாக்கும். வயிற்றுப்போக்கின் காரணமாக உடலின் நீர்ச்சத்து முழுதும் வெளியேறிவிடும். நீரில்லாத மனிதன் செத்துவிடுவான். இதுவும் ஒரு காலகட்டத்தில் மனித குலத்தையே அச்சுறுத்தியது.

காலரா, பிளேக் எனப்படுபவை மக்களின் வாயில் சொல்லாடலாக மாறி, ஒருவனைத் திட்டுகிற பொழுது, அவன் இந்த இரண்டு நோய்களால் செத்துப் போவான் என்று திட்டுகிற அளவிற்குப் பிரபலமாயிருந்தது.

எய்ட்ஸ் என்ற இன்னொரு நோய். அதனுடைய வைரஸ் நமது உடம்பின் எதிர்ப்புச் சக்தியை அழித்துவிடும். எதிரிக் கிருமிகளை அழிக்கக்கூடிய நமது இரத்தத்திலுள்ள வெள்ளை அணுக்களை இந்த எய்ட்ஸ் கிருமி அழித்துவிடும். அதனால் நமது எதிர்ப்புச் சக்தி இல்லாமல் போய் நம்மைச் சாக வைத்துவிடும். எப்படியோ அதனுடைய நதிமூலத்தையும் கண்டுபிடித்து, அந்த

நாசகாரக் கிருமியையும் ஒருவகையில் ஏறக்குறைய ஒழித்துவிட்டோம்.

இதேபோல, இன்னும் ஒரு நோய் புளூரசி எனப்படும் நுரையீரல் வீக்கம். இந்த நோயினால்தான் 150 ஆண்டு களுக்கு முன்பு காரல் மார்க்ஸ் இறந் தார். அப்போது இதற்கு மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை.

மஞ்சள் காமாலை எனப்படும் ஜாண்டிஸ் கல்லீரலையே காலை உண வாகச் சாப்பிடக்கூடிய ஒரு நோய். மனித குலத்தையே அச்சுறுத்தி வந்த நோய். மேலை நாட்டு விஞ்ஞானி களால் இதற்குரிய மருந்தைக் கண்டு பிடிக்கத் தாமதமாகிவிட்டது. ஆனால், தமிழ்நாட்டிலுள்ள நமது நாட்டு வைத் தியர்கள் இதற்கொரு பாட்டி வைத் தியம் செய்து வந்தார்கள்.

கீழாநெல்லி என்ற ஒரு செடி ஒரு முழ உயரம் இருக்கும். பொடிப்பொடி யானவை அதன் இலைகள். அந்தச் செடியை வேரோடு பிடுங்கி அரைத்து மோரில் கலந்து குறிப்பிட்ட நாட்கள் வரை சாப்பிட்டால், மஞ்சள் காமாலை சொல்லாமல் பறந்து விடும் என்பதை நிரூபித்தார்கள்.

இதைக்கண்ட அலோபதி மருத் துவர்கள் அந்தக் கீழாநெல்லி வேரையே மாத்திரை வடிவமாக்கி நோயாளி களுக்கு இப்போது தருகிறார்கள்.

சீனாவில் அக்குபங்சர் மருத்துவ முறை இப்போதும் உள்ளது. நமது தமிழ் நாட்டின் சித்த மருத்துவத்தைப் போன் றது. நமது உடல் முழுவதும் நரம்பு மண்டலத்தால் இயங்குகிறது. நரம்பு முனைகளில் ஊசியால் தீண்டி அதை வீரியப்படுத்திவிட்டால், அதன் விசை மீட்கப்பட்டு நரம்பு மண்டலம் நன்கு வேலை செய்யத் தொடங்கிவிடும். உள்ளே சாப்பிடுவதற்கான மருந்துகளோ, மாத் திரைகளோ எதுவும் இல்லை.

இதேபோல, ஆயுர்வேதம் அதி அற் புதமான மருத்துவமுறை. கேரளாவில் அது பிரபலம். அதிலுள்ள கஷாயம், லேகியம், பிழிச்சல் நல்ல பலன் தரு கிறது. இது நிரூபிக்கப்பட்ட உண்மை.

இப்படிப்பட்ட மருத்துவமுறை களை நாம் பெற்றிருந்தும்கூட, சென்ற டிசம்பர் மாதத்தில் வெளியுலகத்திற்குத் தெரியுமாறு வந்த கொரோனா என்ற தொற்றுக் கிருமி, காய்ச்சல், சளி, இருமல், தொண்டைக் கரகரப்பு ஆகிய அடையாளங்களோடு மனிதனை ஆக் கிரமித்து அவனை மரணமடையச் செய்து வருகிறது.

இது சீனாவின் ஹுபய் மாகாணத் தில் உள்ள வூஹான் நகரத்தில் இது தெரியத் தொடங்கியது. மருந்து களுக்குக் கட்டுப்படவில்லை. அதனால் பீதியடைந்த மருத்துவர்களே வெவ் வேறு விதமான மருந்துகளைப் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தரத் தொடங்கினார்கள். குணப்படுத்து வதற்குக் காலதாமதமாகியதால், கொரோனா வைரஸ் கிருமிகளால் பாதிக்கப்பட்டவர்கள் நடக்க, நடக்கச் சாய்ந்தார்கள். ஒருவர் மேல் ஒருவர் விழுந்து மாய்ந்தார்கள்.

வெளியே தெரிந்த செய்தி, அந்த நகரத்தில் மட்டும் 3000 பேர் சென்ற 3 மாதங்களில் பலியானார்கள். அந்த நகரத்திலிருந்து இத்தாலி, ஈரான், கொரியா, மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, இலங்கை இவ்வாறு 198 நாடுகளில் 132 நாடுகளில் கொரோனா தொற்றுக்கிருமி பரவிவிட்டது. பல நாடு களில் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை 2 லட்சத்திற்கும் அதிகம். பலி யானவர்களின் எண்ணிக்கை இன்றைய தேதியில் 9 ஆயிரம்.

மக்கள் மத்தியில் இப்போது ஏற்பட் டிருக்கிற பீதி என்னவென்றால், இந்த கொரோனா வைரஸ் கிருமிகள் தொற்றி விட்டால் குணப்படுத்துவதற்கு மருந்து இல்லை. அப்படியானால், மரணத்தை நோக்கிய யாத்திரைதான். ஏற்கனவே நம்மிடமுள்ள எதிர்ப்புச்சக்தி காரண மாக இந்தக் கிருமியை எதிர்ப்பதில் ஒரு வேளை ஜெயித்துவிட்டால் நாம் பிழைத் துவிடலாம். இல்லையேல் பலிதான்.

அதனால், மருந்தே இல்லாத இந்த மர்ம நோயைச் சந்திப்பதற்கு நாம் நமது

எதிர்ப்புச் சக்தியைத்தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. எதிர்ப்புச் சக்தி நமக்குப் போதுமான அளவிற்கு இருக்குமானால், நமது உணவு சத்துள்ள உணவாக இருக்க வேண்டும். சத்துள்ள உணவு என்பது காய்கறிகள், பழங்கள் அதிகமாகவும், அரிசி குறைவாகவும் இருக்க வேண்டும். அதேசமயம் தானியங்கள் அதிகமாகச் சாப்பிட வேண்டும்.

நமது முன்னோர்கள் முன்பு கம்பு, ராகி, சோளம், சாமை, தினை முதலியவற்றை அதிகமாக உபயோகப்படுத்தினார்கள். கொள்ளு ரசம் வைத்துச் சாப்பிடுவார்கள். வல்லாரை, கரிசலாங்கண்ணிக் கீரைகளை உணவில் சேர்ப்பார்கள். முருங்கைக் கீரையையும், அகத்திக் கீரையையும் தவிர்க்க மாட்டார்கள்.

இதேபோல மிளகு, இஞ்சி, சீரகம், சுக்கு, மஞ்சள் முதலியவற்றை நமது அனைத்து வகை உணவுப் பொருள்களிலும் கலந்து சாப்பிடுவார்கள்.

வீட்டிற்குள் காவல் நாய்களை வளர்ப்பதைப் போல, உடம்புக்குள் வெள்ளை அணுக்களை வளர்த்தார்கள். நாய்கள் திருடனை விடாமல் துரத்துவதைப் போல வெள்ளை அணுக்கள் நோய்க் கிருமிகளை, விஷக் கிருமிகளை, தீய கிருமிகளை எதிர்த்துப் போராடி, நமது உடம்பைக் காப்பாற்றிக் கொடுத்தன. இது பொதுவாக நமக்குக் கிடைத்த ஆரோக்கியம். விசுவாசமான வெள்ளை அணுக்கள் வழங்கிய வரம்.

ஆனால், இப்போது வந்துள்ள கொரோனா என்ற தொற்றுக்கிருமி, எல்லாவற்றையும் ஏமாற்றக்கூடிய கிருமியாக உள்ளது. இது விஷக் கிருமி மட்டுமல்ல, விஷமக் கிருமி. கொரோனா பீதியால் திருப்பதி வெங்கடாசலபதி கோவிலில் பக்தர்கள் கூட்டம் பத்தில் ஒரு பங்காகிவிட்டது. தேவாலயங்களில் ஆசீர்வதிப்பதற்குக் கிறிஸ்தவ பக்தர்கள் இல்லை. பாதிரியார்கள் மட்டுமே உள்ளனர். சபரிமலையில் ஐயப்ப பக்தர்களைத் தேடினாலும் கிடைப்பதில்லை.

பீதியடைந்த மாநில அரசுகளும், மத்திய அரசும் பள்ளி, கல்லூரிகள், திரையரங்குகள், வணிக வளாகங்கள், டாஸ்மாக் பார்கள் முதலியவற்றை மூட உத்தரவிட்டுள்ளன. போக்குவரத்துக் குறைந்துவிட்டது. விமான நிலையங்களில் பயணிகள் இல்லை. எங்கும் பீதி, எப்போதும் பீதி, எல்லோருக்கும் பீதி. எப்படி ஒரு நாளைக் கடத்துவது?

படுத்திருந்தாலும் இந்தப் பயம் வந்துவிடுகிறது. விழித்திருந்தாலும் நம்மை அது விரட்டுகிறது. நாம் எங்கே போய் ஒளிவது? எவரிடம் உதவி கேட்பது? கடவுளே காப்பாற்று என்று கோவிலுக்குப் போக முடியவில்லை. ஏனெனில், அங்குள்ள அர்ச்சகர்களுக்கும் பாதிப்பு வந்துவிட்டது. என்ன செய்வது என்று தெரியாமல் விழி பிதுங்கி நிற்கிறோம்.

எவர் செய்த புண்ணியமோ, இந்தியாவில் இது பெரிய அளவில் இன்னும் பாதிப்பை ஏற்படுத்தவில்லை.



அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இதுவரை யாருக்கும் வரவில்லை என்று சுகாதார அமைச்சர் சொல்கிறார். ஆனால், **இதுவரை** என்றுதான் சொல்லியிருக்கிறார். ஒருவேளை நாளை வரலாம். இதற்கான விடிவு எந்தத் திசையில் வருமோ? எந்த தெய்வம் தருமோ? எந்த விஞ்ஞானி கண்டுபிடிப்பாரோ? எவருக்கும் தெரியவில்லை. ஏனெனில், விஞ்ஞானியையும் இது விட்டுவைக்காது.

வள்ளற்பெருமான் 150 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னார், கொலை, புலை தவிருங்கள் என்று. மாமிசம், இறைச்சி, புலால் என்ற இந்த அசைவத்தை விட்டு மனிதன் ஒருவேளை வெளியேறுவானேயானால், நிச்சயமாக ஒரு வெளிச்சம் நமக்குக் கிடைக்கலாம்.

– ந.நி.



உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
4.4.4
FORCE GURKHA E.O.V.
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE
MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
NM நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

அருட்பா, மருட்பா என்ற இலக்கிய யுத்தம் தமிழ்நாட்டில் 1850–களில் இன்றைக்கு சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பு காட்டுத்தீ போலப் பரவியது. தமிழ்நாட்டில் கம்பராமாயணத்தையும், பெரிய புராணத்தையும் வீதியில் எரிக்க வேண்டும் என்று 1950–களில் 'தீ பரவட்டும்' என்று பற்றி எரிந்தது. பேராசான் ஜீவாதான் அந்தத் தீயை அணைத்தவர் என்று அவர் வாழ்ந்த திசை நோக்கிக் கும்பிடலாம்.

இதுபோல இலக்கியச் சர்ச்சைகள் அவ்வப்போது எழத்தான் செய்கின்றன. அதில் நியாயமும், தர்மமும் ஒருபக்கமும், அநியாயமும் அவதூறும் மறுபக்கமுமாக அமைந்து மக்களின் கவனத்திற்கு உள்ளாகின்றன. அப்படி வெளிப்பட்ட இலக்கிய யுத்தம்தான் அருட்பா, மருட்பா என்பது.

அருட்பாவை வழங்கியவர் வள்ளலார். அது அருட்பா அல்ல, மருட்பா என்று வாதிட்டவர் சைவப் பழமாகிய யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர். நீதிமன்றத்திலேயே அவர் நிலைகுலைந்து போனார் என்பதை இந்தக் கட்டுரையின் பக்கங்களில் காணலாம். இதைத் தொகுத்து அளித்த நன்றிக்குரியவர் பல்கலைச் செல்வர் குறிஞ்சி. ஞான. வைத்தியநாதன். அவருடைய 'இராமலிங்க சுவாமிகள் வாழ்க்கை வரலாறு' நூல் பிரேமா பிரசுரத்தால் வெளியிடப்பெற்றுள்ளது. தகவல் களஞ்சியம். தமிழுக்கு நந்தவனம். வண்ணத் தாள்களுடனும் வெளிவந்துள்ள கன்னல் சுவை தரும் வரலாற்று நூல்.

நூல் : திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் (வாழ்க்கை வரலாறு), ஆசிரியர் குறிஞ்சி. ஞான. வைத்தியநாதன், வெளியீடு : பிரேமா பிரசுரம், 59, ஆர்க்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை – 24. செல் : 94860 00325. பக். 416, விலை. ரூ. 250/–

– இ.ஆர்.

அருட்பாவுக்கு வெற்றி!

கூடலூர் மஞ்சக்குப்பம் நீதிமன்றத்திற்கு வெளியே, அந்த இடத்தில் இதுவரை கண்டிராத கூட்டம் கூடியிருந்தது.

ஆமாம், அன்றைக்கு நடக்கவிருக்கின்ற, யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் தொடுத்த அருட்பா, மருட்பா வழக்கில், வாதி பிரதிவாதிகளின் கருத்தாழம் மிக்க வலுவான வாதங்களையும், இறுதியில் நீதிபதி வழங்கப்போகும் தீர்ப்பையும் கேட்கவே மக்கள் அத்தனை ஆர்வமாக அங்கே பெருங்கூட்டமாகக் கூடியிருந்தார்கள்!



அவர்களில் அவசரப்பட்ட ஒவ்வொருவரும் தங்களுக்குள் வெவ்வேறு வகையான கருத்துக்களைக் கூறித் தங்களையே வழக்காளர்களாகக் காட்டிக் கொண்டார்கள்! அந்தக் காட்சி வேடிக்கையாகவும், ஒரு விதத்தில் வினோதமாகவும்கூட இருந்தது!

வெளியே இப்படியென்றால், உள்ளே நீதிமன்றம் எப்போதும் காணாத வகையில் களை கட்டியிருந்தது! என்றாலும், ஒருவிதமான இறுக்கமும் அங்கே நிலவியது!

அந்த நிலையில் நீதிபதி நீதிமன்றத்திற்கு வந்தார். எல்லோரும் மரியாதை நிமித்தமாக எழுந்து நின்று அவரை வணங்கினார்கள். நீதிபதி தமது ஆசனத்தில் அமர்ந்தார். நின்றவர்கள் உட்கார்ந்தார்கள்.

நீதிபதி, 'இன்றைய வழக்கு?' என்றபடி குமாஸ்தாவைப் பார்த்தார்.

குமாஸ்தா உடனே, ‘‘கனம் நீதிபதி

குறிஞ்சி. ஞான. வைத்தியநாதன்

அவர்களே! வடலூர் இராமலிங்கம் பிள்ளை பாடிய பாடல்கள் அருட்பா அல்ல, மருட்பா என்ற வழக்கு! தொடுத்திருப்பவர் யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர்!'' என்றார்.

''சரி! வாதி, பிரதிவாதி இருவரையும் கூப் பிடுங்கள்.''

கட்டியம் உடனே, ''வாதி யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர்!... ஆறுமுக நாவலர்!... ஆறுமுக நாவலர்!...'' என்று மும்முறை உரத்துக் கூப்பிட்டான்.

ஆறுமுக நாவலர் விரைந்து வந்து, ''இதோ வந்திருக்கிறேன், கனம் நீதிபதி அவர்களே!'' என்று அவரை வணங்கினார்.

''நாவலரே! அந்த ஆசனத்தில் அமருங்கள்'' என்று நீதிபதி அவருக்கு நாற்காலியைக் காட்டி னார். நாவலர் நாற்காலியில் அமர்ந்தார்.

குமாஸ்தா அப்போது கட்டியத்திடம், ''பிரதிவாதி இராம லிங்கம் பிள்ளையைக் கூப்பிடு'' என்றார்.

''வடலூர் இராமலிங்கம் பிள்ளை!... வடலூர் இராமலிங்கம் பிள்ளை!... வடலூர் இராமலிங்கம் பிள்ளை!...'' என்று கட்டியம் மூன்று முறை உரத்துக் கூப்பிட் டார்.

வள்ளல் பெருமான் அந்தக் கணத்தில் எங்கிருந்தோ வந்து நீதிபதி முன் தோன்றி, ''இதோ வந்திருக்கிறேன், கனம் நீதிபதி அவர்களே'' என்றார்.

பெருமானைக் கண்டதும் நீதிமன்றத்தில் இருந்த நீதிபதி, நாவலர் உட்பட எல்லோரும் எழுந்து நின்று பணிவோடு அவரை வணங்கி னார்கள்!

பெருமான் மரியாதை நிமித்தமாக அவர்களை வணங்கினார்.


நீதிபதி, ''பிள்ளை அவர்களே! இந்த ஆசனத் தில் அமருங்கள்'' என்று பெருமானுக்கு நாற்காலி யைக் காட்டினார். ''நன்றி கனம் நீதிபதி அவர் களே!'' என்று பெருமான் அதில் அமர்ந்தார்.

நீதிபதி, ''சரி, வழக்கை எடுத்துக் கொள்வோம். ஆறுமுக நாவலரே! தாங்கள் தொடுக்கும் வழக்கு என்ன?'' என்று நாவலரைக் கேட்டார்.

நாவலர் எழுந்து நின்று, ''கனம் நீதிபதி அவர்களே! இதோ பிரதிவாதியாக அமர்ந்திருக் கிறாரே வடலூர் இராமலிங்கம் பிள்ளை. இவர் பாடிய பாடல் திரட்டிற்குத் 'திருவருட்பா' எனப் பெயரிட்டதும், அதன் பகுதிகளுக்குத் 'திருமுறை' எனப் பெயரிட்டதும், பிள்ளை அவர்களைத் 'திருவருட்பிரகாச வள்ளலார்' என வழங்கி வரு வதும் தவறு என்பதே எனது வழக்கு!'' என்றார்.

''பின்னே எப்படிக் கூறுகிறீர்கள்?''

''இராமலிங்கம் பிள்ளை அவர்களின் பாடல்கள் அருட்பாக்கள் அல்ல என்பதும், அவை மருட்பாக்கள் என்பதும் ஆதலால், அவரது பாடல் தொகுதிக்குத் திருவருட்பா என்னும் பெயர் பொருந்தாது என்பதுமே எனது வாதம்!''


இராமலிங்க சுவாமி

''அப்படியாயின்?''

''பட்டினத்தார் பாடல் திரட்டு, குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு, சிவப்பிரகாச சுவாமிகளின் பிரபந்தத் திரட்டு, தாயுமானவர் பாடல் திரட்டு, மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பிரபந்தத் திரட்டு என்பன போன்று, 'இராம லிங்கம் பிள்ளை பாடல் திரட்டு' என்றோ, அல்லது 'இராமலிங்கம் பிள்ளை பிரபந்தத் திரட்டு' என்றோ வழங்கப்பட வேண்டும் என்பதே எனது கருத்து! மேலும், திருமுறை என வழங்கத் தக்கவை பன்னிரு திருமுறைகளே என்பதும், வேறு எவற்றையும் திருமுறை என்னும் பெயரால் வழங்கக்கூடாது என்பதும் சைவசமயச் சான்றோர்களின் முடிந்த முடிபு!''

''மேலும் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?''

''இராமலிங்கம் பிள்ளை அவர்கள் வகுத் துள்ள சமரச சுத்த சன்மார்க்கக் கொள்கைகள், புறச்சமயத்தார்களுக்கு இடங்கொடுப்பதாக உள்ளன என்பதும், அவற்றால் மத மாச்சர்யங் களும், சமயப் பூசல்களுமே ஏற்படும் என்பதே உண்மை என்பதையும் இந் நீதிமன்றத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்!''

''ஓ நன்று! பிரதிவாதியைப் பற்றி இத்தனை

கூறிய வாதியாகிய தாங்கள், அவரது விஷயத்தில் வழக்குத் தொடுக்கும் அளவுக்குத் தங்களுக் குள்ள தகுதியையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்!''

''அதுவும் சரிதான், கனம் நீதிபதி அவர்களே! என்னைப் பற்றிய பெருமைகளை நான் சொல்லிக் கொள்வது அத்தனைச் சிறப்பில்லை. வழக்கு என்று வந்துவிட்ட பிறகு, தாங்களும் கேட்டுக் கொண்ட நிலையில், இந்த நீதிமன்றத்திலே எனது பெருமைகளைச் சொல்வதில் தவறேதும் இல்லை என்பதாலும், அவை இவ்வழக்குக்கு ஆதாரமாக அமையும் என்பதாலும் சிறிது நாணத்தோடு சொல்கிறேன்! கேளுங்கள்.''

''நல்லது சொல்லுங்கள், நாவலரே!''

''கனம் நீதிபதி அவர்களே! யாழ்ப்பாணத்து நல்லூர் எனது ஊர். ஆறுமுகம் என்பது பெற்றோர் எனக்கிட்ட பெயர். நான் தமிழ் இலக்கிய இலக்கணத்தில் பெற்றுள்ள பெரும் புலமையாலும், எனது பேச்சாற்றலாலும் புலவர் பெரு மக்கள் எனக்கு வழங்கிய சிறப்புப் பட்டம் நாவலர் என்பது. சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் எனக்குள்ள பேரறிவைச் சைவ சமயச் சான்றோர்கள் நன்கு அறிவார்கள். தமிழ்த்தொண்டும் சைவத்தொண்டும் செய்து வருவதே நாளும் எனது பணி! தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து வந்து, திருவாவடுதுறை ஆதீனத் தின் ஆதரவுடன் சிதம்பரத்தில் 'சைவப் பிரகாச வித்தியாசாலை' என்று ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தி வருகிறேன்.''


ஆறுமுக நாவலர்

''நல்லது. தாங்கள் அமரலாம்.''

''நன்றி! கனம் நீதிபதி அவர்களே!''

நாவலர் ஆசனத்தில் அமர்ந்தார். பிறகு நீதிபதி, ''இனி, பிரதிவாதியாகிய இராமலிங்கம் பிள்ளை, தமது வாதத்தை எடுத்துரைக்கலாம்'' என்றார்.

வள்ளல் பெருமான் எழுந்து நின்று, ''நன்றி! கனம் நீதிபதி அவர்களே! நான் பாடிவரும் அருட்பாக்கள், பேசி வரும் பேச்சுக்கள் எல்லாம் இறைவன் என் உள்ளே இருந்து அருள்பவை!'' என்றவர், 'கணீர்' என்று பாடினார்.

"நான்உரைக்கும் வார்த்தைஎலாம் நாயகன்தன் வார்த்தை / நம்புமினோ நமரங்காள் நற்றருணம் இதுவே / வான்உரைத்த மணிமன்றில் நடம்புரியும் எம்பெருமான் / வரவெதிர் கொண் டவன்அருளால் வரங்கள்எலாம் பெறவே / தேன் உரைக்கும் உளம்இனிக்க எழுகின்றேன் நீவீர் / தெரிந்தடைந்தென் உடன்எழுமின் சித்திபெறல் ஆகும் / ஏன்உரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத் தேன்கண்டீர் / யானடையும் சுகத்தினைநீர் தான்அடைதல் குறித்தே."

பாடலைக் கேட்ட நீதிபதி, மிதமிஞ்சிய சந்தோஷத்துடன், ''ஆகாகா! அற்புதமான பாடல்! இனிமையான குரல்! அருமையான கருத்து!'' என்று பாராட்டினார்.

பெருமான் மேலே தொடர்ந்தார்.

''சாதி, சமய, மத மார்க்கங் களால் ஆண்டவனை ஒரு போதும் அடைய முடியாது. ஜீவகாருண்ய ஒழுக்கத்தோடு சாதி, சமய பேதமற்ற சன்மார்க்க வழி ஒன்றினால்தான் ஆண்ட வன் அருளைப் பெறமுடியும். இதைத்தானே நான் பாடினேன்? வேறென்ன குற்றம் புரிந்தேன்? வேறென்ன தவறு செய்தேன்? நான் மக்களுக்காகப் பாடிய அருட்பாக்கள்தானே இவை? அப்படியிருக்க, தங்கள் வாழ்க் கைக்கு எதிராகப் பாடியதாக எண்ணி இவர்கள் வாதிடு கிறார்களே! இறைவா! என் கடன் உன் ஆணை யேற்று மக்கள் பணி செய்து கிடப்பதன்றி வேறென்ன? இதற்கு நான் பெறும் பரிசோ இது? இறைவா!... இறைவா!...'' என்று வேதனையோடு வருந்தியவர்,

"வாது பேசிய மனிதர் காள்ஒரு
வார்த்தை கேண்மின்கள் வந்துதும்
போது போவதன் முன்ன ரேஅருட்
பொதுவி லேநடம் போற்றுவீர்
தீது பேசினீர் என்றி டாதுமைத்
திருவு ளங்கொளும் காண்மினோ
சூது பேசிலன் நன்மை சொல்கின்றேன்
சுற்றம் என்பது பற்றியே"

என்று பாடி அறைகூவினார். நீதிபதியால் சந்தோஷத்தை அடக்க முடியவில்லை!

“அருமை! அருமை! சமரச ஞானக் கருத்துக்கள் அருமை! உலக மக்களெல்லோரும் ஒன்றுபட உத்தம மனிதர் உரைத்த வார்த்தைகள் நன்று! நன்று!” என்று அவர் பெருமானின் பேரருட் கருத்துக்களைப் பெரிதும் பாராட்டினார்.

பெருமான் நீதிபதியின் பாராட்டைப் பாராட்டவில்லை! தம் பாட்டுக்கு வழக்கில் தம் வாதத்தை மேலே சொல்லத் தொடங்கினார்.

“இறைவா! உனக்கும் எனக்கும் ஏற்பட்ட திருவருட்பிணைப்பால், நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என உளம் கொண்டேன். ஜீவகாருண்ய ஒழுக்கத்தோடு வாழ்ந்தால் மரணமிலாப் பெருவாழ்வு வாழலாம் வாரீர், வாரீர்! என்று மக்களைக் கூவியழைத்தேன். அவர்களிடம் காணப்படும் மூடப் பழக்க வழக்கங்களை அகற்ற மனப்புரட்சிதானே செய்தேன்? அஃதன்றி மதவாதிகளுக்கு எதிராகப் போராடுங்கள் என்று நான் எவரையும் தூண்டவில்லையே! பொய் வேடம் புனைந்து பாடிப் பிழைக்காமல் மெய்யுணர்வோடு ஆண்டவனே உன்னை அடையப் பாடியதற்குப் பரிசாகவா என்மீது மக்களைக் கொண்டே நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வைத்துவிட்டாய்! இறைவா! இது என் விதி என்பேனா? இல்லை, உன் சதி என்பேனா? ஐயோ, இப்படியெல்லாம் என் மனம் அலைபாய்ந்து படும் வேதனையை உன்னையன்றி வேறு யாரிடம் போய் முறையிடுவேன்! குறை தீர்த்தருளும் குணப் பெருமானே! மன்றிலாடும் நடத்தரசே!...” என்று வேதனை மிகுந்து இறைவனிடம் முறையிட்ட பெருமான், அதை அப்படியே பாடவும் செய்தார்.

“அடிபிடித்துத் திரிகின்ற மறைகள்எலாம் காணா
அருள்வடிவைக் காட்டிநம்மை
ஆண்டுகொண்ட கருணைக்
கொடிபிடித்த குருமணியைக் கூடுமட்டும் வேறோர்
குறிப்பின்றி இருப்பம்எனக் கொண்டகத்தே
இருந்தேன்
படிபிடித்த பலர்பலவும் பகிர்ந்திடஇங் கெனைத்தான்
படுவழக்கிட் டுலகியலாம் வெளியில்
இழுத் தலைத்தே
மடிபிடித்துப் பறிக்கவந்த விதியைநினைந் தையோ
மனம்அலை பாய்வதுகாண் மன்றில்நடத் தரசே.”

பெருமானின் கருத்துக்களைக் கேட்ட நீதிபதி, “கடவுள் தந்த கருணை மனிதர்! காலத்திற்கேற்பச் சொன்ன கருத்துக்கள்! குணமாகக் கொள்வதேயன்றி, குற்றமாகக் கருதுவதற்குக் கிஞ்சித்தும் இதில் இடமில்லை!” என்று பெருமானைப் பாராட்டியவர், “பிள்ளை அவர்களே! இனித் தாங்கள் அமரலாம்” என்றார்.

“நன்றி, கனம் நீதிபதி அவர்களே!” பெருமான் ஆசனத்தில் அமர்ந்தார்.

பிறகு, நீதிபதி நாவலரைப் பார்த்து, “நாவலரே!” என்றழைத்தார்.

நாவலர் எழுந்து நின்று, “சொல்லுங்கள் கனம் நீதிபதி அவர்களே!” என்றார்.

“நான் கேட்கும் சில கேள்விகளுக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.”

“சரி, கனம் நீதிபதி அவர்களே!”

“கடவுளுக்குப் பரத்துவம் சொல்லும்போது, அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது; இறைவன் திருவருள் அன்றி எந்த ஓர் உயிரும் எந்த ஒரு செயலையும் செய்ய முடியாது; இயங்க முடியாது என்று எல்லாச் சமயச் சாஸ்திரங்களுமே சொல்கின்றன அல்லவா?”

“ஆமாம்!”

“இந்தப் பேருண்மையைத் தாங்கள் ஒப்புக் கொள்கிறீர்களா?”

“ஒப்புக் கொள்கிறேன். எங்கள் சமய ஞானிகள் இந்த உண்மையை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.”

சிறந்தது எது?

“**ந**திகளில் சிறந்தது கங்கை. விண்மீன்களில் சிறந்தது கதிர். மரங்களில் சிறந்தது கற்பகம். தேவர்களில் சிறந்தவர் திருமால். பசுக்களில் சிறந்தது காமதேனு. யானைகளில் சிறந்தது ஐராவதம். மலர்களில் சிறந்தது தாமரை. புதல்வர்களில் சிறந்தவர் குமாரக் கடவுள். மலைகளில் சிறந்தது இமயம். விரதங்களில் சிறந்தது சிவராத்திரி.”

– **வாரியார் சுவாமிகள்**

தகவல் : த.சீ. பாலு

"நல்லது. இந்த உண்மையின்படி பார்க்கின்ற போது, தாங்கள் குறிப்பிடுகின்ற சைவ சமயாச் சாரியார்கள் நால்வரைப் போலவே பிரதிவாதியும் இறைவன் அருளால்தான் அருட்பாக்களைப் பாடியிருக்கிறார்! இல்லையென்றால் அவரால் இதுபோல் ஒரு பாட்டும் பாட முடிந்திருக்காது! இதற்கு ஏதேனும் தாங்கள் மறுப்புச் சொல் கிறீர்களா?" – நீதிபதி கேட்டார்.

நாவலரால் அந்தக் கேள்விக்குப் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை! அவர் மௌன மாக நின்றார்!

நீதிபதி மீண்டும், "வாதியாகிய தாங்கள் இப்படி மௌனமாக நிற்பதிலிருந்தே பிரதிவாதி மீது பிழையான வழக்கைத் தொடுத்திருக்கிறீர்கள் என்ற உண்மையை உணர்கிறேன். இருப்பினும், சந்தேகத்திற்கிடமின்றித் தீர்ப்பு வழங்க, தங்க ளிடம் மேலும் சில கேள்விகள் கேட்க வேண்டியது அவசியமாகிறது! அவற்றுக்கு மட்டும் சரியான பதிலைச் சொல்லுங்கள்" என்றார்.

"சரி, கனம் நீதிபதி அவர்களே!"

"வாதியாகிய தாங்கள் பிரதிவாதியைக் கண்டு எழுந்து நின்றதோடு வணங்கவும் செய்தீர் கள்! அது ஏன்?"

"எல்லோரும் எழுந்து நின்று வணங்கினார் கள், நானும் எழுந்து நின்று வணங்கினேன்!"

"என்னையும் அதில் சேர்த்துக் கொள்ளுங் கள். அது சரி, எல்லோரும் எதற்காக எழுந்து நின்று அவரை வணங்கினார்கள்?"

"அவர் ஒரு மகான்; மெய்ஞ்ஞானி! அப்படிப் பட்ட பெரியவரைக் கண்டதும் எழுந்து நின்று வணங்கினார்கள்!"


"தாங்கள் எதற்காக எழுந்து நின்று அவரை வணங்கினீர்கள்?"

"நானும் அதற்காகத்தான் எழுந்து நின்று அவரை வணங்கினேன்!"

"பெரியவர் என்பதற்காகத்தானே?"

"ஆமாம்!"

"பிரதிவாதியைப் பெரியவர் என்று தாங்களே ஒப்புக் கொள்கிறீர்கள்! அமர்ந்திருந்த தாங்கள் பிரதிவாதியைக் கண்டு எழுந்து நின்றீர்கள். அதுமட்டுமின்றி வணங்கவும் செய்தீர்கள். பிரதி வாதியைப் பெரியவர் என்று ஒப்புக்கொள்ளும் தாங்கள், வீணாக வழக்குத் தொடுத்து, அவரை அலைக்கழித்திருக்க வேண்டாம். தங்கள் கட்சி



உண்மையாயிருக்கும் பட்சத்தில், வழக்குத் தொடுத்த தாங்கள் பிரதிவாதியைக் கண்டு எழுந்து நின்றிருக்க வேண்டாம்; வணங்கியிருக் கவும் வேண்டாம். தங்கள் கட்சியில் உண்மை யில்லை என்பது, இங்கு நிகழ்ந்த தங்கள் செய்கை யாலேயே தெளிவாகிவிட்டது! ஆகவே, இராம லிங்கம் பிள்ளை அவர்கள் பாடியவை மருட்பா அல்ல, அருட்பா என்றே தீர்ப்பளித்து, வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன்! நீதிமன்றம் கலைகிறது!"

நீதிபதி உறுதியான தீர்ப்பை வழங்கிவிட்டு, ஆசனத்தைவிட்டு எழுந்து தமது அறைக்குச் சென்றார். நீதிமன்றம் கலைந்தது! தீர்ப்பைக் கேட்டு மக்கள் மகிழ்ச்சியடைந்தார்கள். உற்சாகத் தோடு அவர்கள் "பொய்மை தோற்றது, வாய்மை வென்றது! திருவருட்பிரகாச வள்ளல் பெருமான், வாழ்க! வாழ்க!" திருவருட்பாவைப் பொன்னே போல் போற்றுவோம்! சன்மார்க்கக் கொள்கை களை நாளும் கடைப்பிடிப்போம்!" என வாழ்த் தினர்.

அந்த வாழ்த்தொலிகள், வங்கக் கடல் காற் றோடு போய்க் கீழ்த்திசை நாடுகளில் எதி ரொலித்தன!

●



தாய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
Pasteurised, Homogenised, Standardised Milk
SPECIAL
250
MILK
Standardised Milk
SUPREME
Sakthi
MILK
SELECT
Pasteurised
Toned Milk
500ml
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 38 ஏப்ரல் 2020 இதழ் : 3

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர்: **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.

'ஓம் சக்தி'யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள் அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர, பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை "SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI" என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423
வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

தினை அல்வா

தேவையானவை : *தினை மாவு : 1/4 கிலோ, வெல்லம் : 400 கிராம், ஏலக்காய்த் தூள் : 1/4 தேக்கரண்டி, நெய் : 50 கிராம், முந்திரிப் பருப்பு : 10, உலர் திராட்சை : 3 தேக்கரண்டி, பாதாம் பருப்பு : 6.*

செய்முறை :

1. அடிக் கனமுள்ள பாத்திரத்தில் வெல்லத்தைப் பொடித்திட்டுப் போதிய அளவு தண்ணீர் சேர்த்துப் பாகு காய்ச்சவும்.

2. பாகு பாதிப் பதம் வரும்போது, தினை மாவை இட்டு, நன்குக் கலந்து தொடர்ந்து வேக விடவும்.

3. முந்திரிப் பருப்பு, பாதாம் பருப்பு, உலர் திராட்சை இவற்றைச் சிறிது நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.

4. வேகும் அல்வா கலவையில், இடை இடையே சிறிது நெய் ஊற்றி நன்குக் கிளறிக் கொடுக்கவும்.

5. தீயை நிதானமாக எரிய விடவும்.

6. கலவை நன்கு சுருண்டு பாத்திரத்தில் ஒட்டாமல் அல்வா பதத்தில் வரும் போது ஏலக்காய்த் தூள், நெய்யில் வறுத்த பாதாம், முந்திரிப் பருப்புகள், உலர் திராட்சை இவற்றை இட்டு, நன்குக் கிளறி இறக்கவும்.

7. சிறிது ஆறினதும் பரவலாக ஒரு தட்டில் பரப்பி, விரும்பும் அளவில் துண்டுகள் போடவும்.

தித்திக்கும் 'தினை அல்வா' தயார். தினையில் புரதம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து, வைட்டமின்கள் உள்ளதால், உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது.

– ராதிகா அழகப்பன், விக்கிரமசிங்கபுரம்.






‘தா’ வரம்

அவினாசி. மு. நடராஜன்



‘மா’ ‘தென்னையும்’
‘அவரையும்’
‘கல்யாண முருங்கை’ சேர்க்காமல்
‘கடுக்காய்’ கொடுத்தது காலம்
காரணம்
ஒரு ‘ஜாதிக்காய்!’



ஆனால்
எதிர் வீட்டுத் ‘துளசியோ’
‘கள்ளி’
‘கற்பூர வல்லி’
‘தொட்டால் சிணுங்கி’
‘தூது வளை’யின்றி
‘வாத நாராயண’னைத்
தன் ‘வசம்பாக்கினாள்’
‘ஊரவரை’ என்ன செய்யும்?



அப்’பனை’ ஏசும்
உறவுகள் ‘எட்டி’ நிற்கும்
‘முடக்கத்தான்’ முயற்சி நடக்கும்.



இடையில் சில
‘சப்போட்டா’ பேசும்
‘வல்லாரை’ வாழ்த்தும்
அதில்
‘வெட்டி வேராய்’ மணம் வீசி
‘ஆலமரமாய்’ ஆகும் சிலர் வாழ்க்கை!

கட்டுரை

1944 ஆம் ஆண்டு ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத்தில் ஈடுபட்டதற்காகச் சிறைத் தண்டனையை அனுபவித்துவிட்டுச் சொந்த ஊரான கோபிச்செட்டி பாளையத்துக்குத் திரும்பி வந்திருந்தார் இருபத்தேழு வயதான இளைஞரொருவர். ஒருநாள் தன் வயதையொத்த நண்பர்களுடன் சிறையனுபவங்களைப் பகிர்ந்தபடி உரையாடிக் கொண்டிருந்தபோது, நண்பர் ஒருவர் பேச்சோடு பேச்சாக “காந்தியடிகளைச் சந்திக்கச் செல்லலாமா?” என்று கேட்டார்.

சென்னையில் உடல்நலம் குன்றியிருக்கும் நண்பரொருவரைப் பார்த்துவிட்டு வருவதாக வீட்டினரிடம் தெரிவித்துவிட்டு இருவரும் வார்தாவுக்குப் புறப்பட்டுப் போனார்கள்.


ஜி.எஸ். லட்சுமண ஐயர்

லட்சியத் தலைவர் ஜி.எஸ். லட்சுமண ஐயர்

அவர்கள் அங்குச் சென்று சேர்ந்த நேரத்தில் இரவு உணவை முடித்துவிட்டு அனைவரும் உறங்கச் சென்றுவிட்டிருந்தனர். மறுநாள் காலையில்தான் காந்தியடிகளைச் சந்திக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. மறுநாள் அவர்கள் மீண்டும் ஆசிரமத்துக்குச் சென்று காந்தியடிகளைச் சந்தித்துச் சத்தியாக் கிரகியாகத் தொண்டாற்றும் விருப்பத்தைத் தெரி யப்படுத்தினர்.

காந்தியடிகள், அவரைப் பற்றியும் அவருடைய ஊரைப் பற்றியுமான விவரங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, தேசத்துக்குத் தேவையான அளவில் சத்தியாகிரகிகள் தயாராக இருப்பதாகவும் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றத்துக்கு உழைப்பவர்களுக்கான தேவையே தற்சமயம் மிகுதியாக உள்ளதென்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து “ஊருக்குத் திரும்பிச் செல். அங்கு வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் சேவை செய். அவர்களுடைய பிள்ளைகள் படிப்பதற்குப் பள்ளிக்கூடம் நடத்து. இச்செயல்களே இந்தக் காலத்துக்கு மிகமிக முக்கியம்” என்று தெரிவித்தார். காந்தியடிகளின் சொல்லைத் தனக்கு விதிக்கப்பட்ட கட்டளையாக எடுத்துக் கொண்டு உத்வேகத்துடன் ஊருக்குத் திரும்பினார் அந்த இளைஞர். அந்த இளைஞரின் பெயர் ஜி.எஸ். லட்சுமண ஐயர்.

காந்தியடிகளைச் சந்தித்துவிட்டுத் திரும்பிய லட்சுமண ஐயர், தண்ணீர்த் தேவைக்காக அங்கு மிங்கும் அலைந்து திரியும் தாழ்த்தப்பட்டோரின் நிலையைப் பார்த்துப் பெரிதும் மனம் வருந்தினார். அந்த ஊரில் மொத்தம் இருபத்தாறு பொதுக் கிணறுகள் இருந்தன. ஆனால், அவ்விடங்களில் வசித்து வந்த உயர்வகுப்பைச் சேர்ந்தவர்கள், அக் கிணறுகளில் தண்ணீர் எடுக்கவரும் தாழ்த்தப்பட்டவர்களைத் தடுத்துத் திருப்பியனுப்பினார்கள். இதைக் கண்டு அவர்களை அழைத்த லட்சுமண ஐயர், தமக்குச் சொந்தமான கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துச் செல்லுமாறு சொன்னார்.

லட்சுமண ஐயரின் செய்கை ஊராரைக் கொதிக்கவைத்தது. ஐயரைத் தடுக்க முடியாத ஊரார், அவரையும் அவருடைய குடும்பத்தாரையும் அக்கணமே சாதிவிலக்கம் செய்வதாகத் தெரிவித்தனர். அதைக் கேட்டு லட்சுமண ஐயர் மனம் சிறிதும் தளர்ந்துவிடவில்லை. இருபத்தாறு பொதுக்கிணறுகளிலும் தண்ணீர் எடுத்துக் கொள்ளும் உரிமை தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, அதில் வெற்றி பெற்றார். அந்தத் தீர்ப்பின் வழியாக எல்லாக் கிணறுகளிலிருந்தும் தண்ணீர் எடுத்துக்கொள்ளும் உரிமையைச் சட்டப்படி பெற்றனர் தாழ்த்தப்பட்டோர்.

1932 ஆம் ஆண்டில் காந்தியடிகள் ஹரிஜன

பாவண்ணன்

சேவா சங்கத்தைத் தொடங்கினார். நாடெங்கும் அதற்குக் கிளைகள் உருவாகின. அக்கிளைகளில் பணியாற்றியவர்கள் தாழ்த்தப்பட்டோர்கள் படிப்பதற்குப் பள்ளிகளையும், தங்குவதற்கு விடுதிகளையும் தொடங்கி நடத்தினார்கள். லட்சுமண ஐயரின் தந்தையாரான சீனிவாச ஐயர் கோபிசெட்டிப் பாளையத்திலேயே டி.எஸ். ராமன் மாணவர் விடுதியையும், சரோஜினிதேவி விடுதியையும் தொடங்கித் தாழ்த்தப்பட்டோர் பிரிவைச் சேர்ந்த சிறுவர்களும் சிறுமியர்களும் தங்குவதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தனர்.

லட்சுமண ஐயருக்குத் தம் குடும்பத்தினர் நடத்திவரும் பள்ளிகளின் எண்ணிக்கையும், விடுதிகளின் எண்ணிக்கையும் போதாது என்று தோன்றியது. எனவே, முதற்கட்டமாக அவற்றை விரிவாக்கும் வேலைகளில் மூழ்கினார். கிராமத்தில் தம் குடும்பத்துக்குச் சொந்தமாக உள்ள இடங்களைப் பள்ளிக்காக இலவசமாக ஒதுக்கினார். அடுத்து, அந்த இடத்தில் கட்டடங்களை எழுப்பி, புதிய பள்ளிகளும், விடுதிகளும் தடையின்றி இயங்க வழிவகுத்தார்.

சிறுவர், சிறுமியருக்கு விடுதிகளை உருவாக்கிக் கொடுத்ததை அடுத்துத் தாழ்த்தப்பட்டோர் குடும்பங்களில் வயல் வேலைகளுக்குச் செல்லும் பெண்கள் தம் குழந்தைகளை விட்டுவிட்டு வரப் பாதுகாப்பான இடமென எதுவும் இல்லாமையால், தொடர்ச்சியாக வேலைக்குச் செல்வதில் அவர்களுக்குச் சில இடர்கள் இருந்தன. குழந்தைகளுக்கெனத் தனியாக ஒரு காப்பகத்தைத் தொடங்க வேண்டுமென எண்ணிய லட்சுமண ஐயர் பெரிய மொடச்சூர், சிவசண்முகம் பிள்ளை வீதி ஆகிய இடங்களில் இரு காப்பகங்களை உருவாக்கினார்.

ஒவ்வொரு காப்பகத்துக்கும் இரு ஆசிரியர்களையும், மூன்று உதவியாளர்களையும் நியமித்து, அவை சிறப்பான முறையில் செயல்படும்படி பார்த்துக் கொண்டார். வேறொரு பகுதியில் தமக்குச் சொந்தமாக இருந்த நிலங்களை விற்பனை செய்ததன் வழியாகக் கிடைத்த பணத்தை வைத்துக்கொண்டு கட்டடங்களின் கட்டுமானச் செலவுகளைச் சமாளித்தார்.

லட்சுமண ஐயரைப் போலவே அவருடைய மனைவி இலட்சுமி அம்மையாரும் சமூக சேவைகளில் ஆர்வம் கொண்டவராக இருந்தார்.

ஹரிஜன நலநிதி திரட்டும்பொருட்டுத் தமிழகத்துக்கு வந்த காந்தியடிகள் பழனி நகருக்கு வந்தபோது, லட்சுமண ஐயரின் மாமனார் சுந்தரராஜ ஐயரின் வீட்டில்தான் தங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காந்தியடிகளைக் காணும்பொருட்டு சுந்தரராஜ ஐயரின் வீட்டுக்கு முன்னால் ஏராளமானோர் கூடியிருந்தார்கள்.


அங்குக் கூடியிருந்தவர்கள் பழனி முருகனின் பெருமையைச் சொல்லி, அத்தெய்வத்தைத் தரிசிக்க வருமாறு காந்திஜியை அழைத்தார்கள். "நீங்கள் சொல்லும் இந்தப் புகழ்பெற்ற ஆலயத்தில் ஹரிஜன மக்கள் அனுமதிக்கப்படுகிறார்களா?" என்று கேட்டார். இல்லை என்பது போலத் தலையசைத்தனர். உடனே காந்தியடிகள் "முதலில் அவர்கள் அனுமதிக்கப்படட்டும். அதற்குப் பிறகு நான் வருகிறேன்" என்று சொல்லி விட்டார்.

1946–இல் காந்தியடிகள் மீண்டும் பழனிக்கு வருகை தந்தபோது, அன்று நடந்ததை அவருக்கு நினைவூட்டி "இப்போது ஆலயத்துக்குள் ஹரிஜனர்கள் தாராளமாகச் சென்று வரும் அளவுக்குக் காலம் மாறிவிட்டது. இப்போதாவது நீங்கள் அவசியமாக வந்து முருகனைத் தரிசிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர். அதைக் கேட்டு மகிழ்ந்த காந்தியடிகள் அனைவரோடும் ஆலயத்துக்குள் சென்று வணங்கிவிட்டுத் திரும்பினார்.

இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு கோபிச்செட்டிபாளையத்தின் நீர்த்தேவைக்காக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைக் கட்டியெழுப்ப வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. அதற்குப் பொருத்தமான இடத்துக்காக அரசு அலைந்தபோது, பவானி ஆற்றின் கரையோரத்திலிருந்த தனக்குச் சொந்தமான நிலத்தை மனமுவந்து இலவசமாக அரசுக்கு வழங்கினார் லட்சுமண ஐயர். அதன் பணிகள் முடிந்த பிறகு, அந்த நீர்த்தேக்கத்திலிருந்து வெளியேற்றப்படும் நீர் கோபிசெட்டிப் பாளையத்துக்கு மட்டுமின்றி, நகரையொட்டிய லக்கம்பட்டி, கள்ளிப்பட்டி, கரட்டடிபாளையம் முதலிய இடங்களுக்கும் சென்றது.

ஒருமுறை அவருடைய சொந்த மகன் சுந்தரவடிவேல் புகுமுக வகுப்பில் தேர்ச்சி பெற்றதும் பொறியியல் படிப்பைப் படிக்க விரும்பினார். கோவை பி.எஸ்.ஜி. குழுமத்தின் கல்லூரியில் படிக்க வேண்டும் என்பது அவர் விருப்பம். பொறியியல் படிப்புக்குத் தேவையான அளவுக்குத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தார். அவருக்குத் தானாகவே கூட அந்த இடம் கிடைக்கக் கூடும். ஆயினும் நிர்வாகத் தலைமையைச் சந்தித்து லட்சுமண ஐயர் ஒரு சொல் சொல்ல வேண்டும் என்று சுந்தரவடிவேல் எதிர்பார்த்தார்.

லட்சுமண ஐயருக்கு அப்படிப் பரிந்துரைப்பதில் உடன்பாடில்லை. ஆனால், மகன் கேட்டுக் கொண்டே இருந்ததால், வேறு வழியின்றி ஒருமுறை சென்று நிர்வாகத் தலைமையைச் சந்தித்துவிட்டுத் திரும்பி வந்து, பொறியியல் படிப்புக்கான சேர்க்கை முடிந்துவிட்டதெனச் சொன்னதாகத் தெரிவித்துவிட்டு, அறிவியல் பிரிவில் பட்டப் படிப்பைப் படிக்கும்படி மகனுக்கு ஆலோசனை



ஜி.எஸ். லட்சுமண ஐயர் தொடங்கிய பள்ளி.

வழங்கினார். வேறு வழியின்றி அடுத்த நாளே கல்லூரிக்குச் சென்று அறிவியல் பிரிவில் பட்டப் படிப்பில் சேர்ந்துவிட்டார்.

ஓராண்டுக்குப் பிறகு அதே கல்லூரியில் ஆண்டுவிழா நடைபெற்றது. அவ்விழாவுக்கு லட்சுமண ஐயர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளச் சென்றிருந்தார். பார்வையாளர் அரங்கில் மாணவர்களுக்கிடையில் அவர் மகன் சுந்தரவடிவேலும் அமர்ந்திருந்தார். அப்போது அவருக்கு அருகில் அமர்ந்திருந்த வேறொரு மாணவர் எழுந்து லட்சுமண ஐயரைப் பார்த்துப் புன்னகையுடன் வணங்கிவிட்டு அமர்ந்தார்.

எதற்காக இந்தச் சிறப்பு வணக்கம் என்று புரியாத சுந்தரவடிவேல் அவரிடமே வணங்கியதற்கான காரணத்தைக் கேட்டார். "அவர் இல்லாவிட்டால் நான் இந்தக் கல்லூரியில் பொறியியல் படிப்பில் சேர்ந்திருக்கவே முடியாது. அவர் சொன்னதால்தான் எனக்கு இங்கு இடம் கிடைத்தது" என்று தெரிவித்தார்.

அந்த மாணவர் தொடர்ந்து "ஒருநாள் இங்கே வந்து இடம் கிடைக்குமோ, கிடைக்காதோ என்ற குழப்பத்துடன் நின்றிருந்தேன். அப்போதுதான் ஐயா என்னை நெருங்கி வந்து அவராகவே விவரம் கேட்டார்.

பிறகு நிர்வாக அறைக்குள் சென்றுவிட்டார். சிறிது நேரத்துக்குப் பிறகு அவர் வெளியே வந்து "உனக்கு இடம் கொடுக்கும்படி சொல்லிவிட்டேன். நீ போய் சேர்ந்து படி. அக்கறையாகப் படித்துப் பட்டம் வாங்கு" என்று சொல்லிச் சென்றுவிட்டார்.

உடனேயே கல்லூரியில் சேர்ந்துவிட்டேன். பிறகு ஓராண்டு கழித்து இன்றுதான் அவரைப் பார்க்கிறேன். பார்த்ததுமே வணக்கம் சொல்லத் தோன்றியது. எனக்கு வழிகாட்டிய தெய்வம் அவர்" என்று சொன்னார். தனக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்பைத் தன் தந்தை இன்னொரு மாணவருக்கு ஏற்படுத்திக் கொடுத்த காரணம் புரியாமல் சுந்தரவடிவேல் குழம்பினார்.

அன்று இரவு வீட்டுக்குத் திரும்பியதும் அப்பாவும் மகனும் இதைப் பற்றித்தான் பேசிக் கொண்டார்கள். லட்சுமண ஐயர் கனிவுடன், "அந்த மாணவன் தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவன். ஒரு பொறியியல் பட்டம் என்பது அவன் வாழ்க்கையை மட்டுமல்ல, அவனோடு தொடர்புள்ள பலருடைய வாழ்க்கையைக் கௌரவமுள்ளதாக மாற்றும்" என்று மகனிடம் சொன்னார்.

1952 முதல் 1955 வரை நகராட்சித் தலைவராகப் பணியாற்றிய போது, துப்புரவுப் பணியாளர்கள் குடியிருப்பதற்காக இலவசமாக ஒரு குடியிருப்பை உருவாக்கி அளித்தார். அந்தப் பெருமை லட்சுமண ஐயருக்கே உரியது. 1986–இல் நகரத்தில் உள்ள அனைத்து உலர் கழிப்பறைகளையும் ஒழித்துக் கட்டினார். இதன் வழியாக மனித மலத்தை மனிதரே கையால் அள்ளும் அவலநிலை முடிவுக்கு வந்தது. நாட்டிலேயே அப்பழக்கத்தை ஒழித்த முதல் நகராட்சி கோபி செட்டிப்பாளையம்தான்.

கோபிசெட்டிப் பாளையத்திலும் அதைச் சுற்றியிருந்த கிராமங்களிலும் லட்சுமண ஐயர் குடும்பத்துக்குச் சொந்தமாக ஏறத்தாழ 650 ஏக்கர் நிலம் இருந்தது. விளையாட்டு மைதானங்கள் அமைக்கவும், அரசு அலுவலகங்கள் கட்டவும், கரட்டடிபாளையத்திலும் ஸ்ரீராமபுரத்திலும் தாழ்த்தப்பட்டோர் குடியிருப்புகளை உருவாக்கவும் பல ஏக்கர் நிலங்களை இலவசமாக வழங்கினர்.

அருட்செல்வர் அவர்களோடு கோபி ஜி.எஸ். லட்சுமண ஐயர் மிகுந்த ஈடுபாடோடு இருந்தவர். ஜி.எஸ். லட்சுமண ஐயரைப் பார்ப்பதற்காகவே அருட்செல்வர் அவருடைய வீட்டிற்குச் சென்று அவரோடு உரையாடி, உணவருந்தித் திரும்புவார். இவரைப் பற்றி எப்போதும் பெருமிதமாகப் பேசுவார். சக்தி சர்க்கரை ஆலை வட்டாரத்தில் அங்கு விளைந்த கரும்பைவிட இனியவராக இவரைத்தான் அருட்செல்வர் சுவைத்தார்.

காந்தியடிகளின் கட்டளைப்படி, தான் உருவாக்கிய கல்வி நிலையங்களையும், விடுதிகளையும் பார்த்தபடி 93 வயது வரை வாழ்ந்து மறைந்தார் ஜி.எஸ். லட்சுமண ஐயர். – 'சர்வோதயம் மலர்கிறது', பிப்ரவரி, 2020 இதழிலிருந்து.

கட்டுரை



விருப்பாட்சர் ஆலயத்தின் உள்தோற்றம்

ஹம்பியின் கண்ணீர்க் கதை

விஜயநகரத் தலைநகர் ஹம்பியின் வரலாற்றைப் படிக்கும்போதே மனதில் அன்றைய எழிலார்ந்த மாட மாளிகைகளும், கூடகோபுரங்களும், சிற்பக்கலையும், கட்டடக்கலையும் இணைந்து உன்னதக் கலைப் பெட்டகமாக விளங்கும் கோயில்கள், மண்டபங்கள், கல்தூண்கள், சிலைகள் முதலியவை நம் கண்முன் தோன்றி மனதிற்குள் ஒரு மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றன. இவற்றையே நேரில் கண்டால் எவ்வளவு மகிழ்ச்சி பொங்கும்!

உலகில் பார்க்க வேண்டிய சிறப்பு மிக்க 52 முக்கிய இடங்களில் இரண்டாவது இடத்தில் நின்று தனது தனிச் சிறப்பால் உயர்ந்து உலகம் போற்றும் கலைச் செல்வங்களைக் கொண்ட இடமே ஹம்பி. காண்போரைத் திகைக்க வைக்கும் இந்த இடங்களைப் பார்க்காமல் எந்த ஒரு வரலாற்றுப் பயணமும் நிறைவடையாது.



க. சண்முகம்

ஒரு சரிந்த சாம்ராஜ்ஜியத்தின் எச்சங்கள், அந்நியர்களால் இடித்து இடித்துச் சோர்ந்து போய் விட்டுச் சென்ற மிச்சங்களே காண்போரை உச்ச வியப்பில் ஆழ்த்துகின்றன.

கர்நாடக மாநிலம் பெங்களூரிலிருந்து 325 கி.மீ. தூரத்தில் உள்ள ஹம்பியின் ஒவ்வோர் இடத்திற்குப் பின்னாலும் நிச்சயம் ஒரு வரலாறு இருக்கிறது. கலைகளின் உச்சம் தெரிகின்ற வேளையில் சில கண்ணீர்க் கதைகளும் சோக வரலாறுகளும் இல்லாமலில்லை.

இஸ்லாமியத் தொடர் படையெடுப்புகளால் நாடே சிதறுண்டு கிடந்த அவலநிலையில் துங்கபத்திரா நதிக்கரையில் மலைக் குன்றுகளினிடையே ஹரிஹரர் மற்றும் புக்கர் என்ற இரண்டு சகோதரர்களால் வெற்றி நகரம் எனும் விஜய நகரம் உருவாக்கப்பட்டது.

இஸ்லாமிய ஆதிக்கம் விலகி இந்து சாம்ராஜ்ஜியம் நிலைநிறுத்தப்பட்டது. எங்கு நோக்கினும் கலையழகு மிளிரும் கோயில்கள், கட்டடங்கள், மாட மாளிகைகள் என்று


சிதைக்கப்பட்ட
லட்சுமி இல்லாத
லட்சுமி நரசிம்மர்


தாமரை மாளிகை

உலகின் மாபெரும் கலைப்பெட்டகமாய் விஜயநகரம் எழுந்தது. தென்னிந்தியாவின் அதிகாரப் பீடமாய் அமைந்தது.

வரலாறு எத்தனையோ விதமான மன்னர்களையும் கொடூரச் சம்பவங்களையும் போர்களையும் கடந்துதான் வந்துள்ளது. ஒரு சாம்ராஜ்ஜியத்தின் தோற்றம் அத்தனை எளிதல்ல. பல வருடங்கள் பல்லாயிரம் மக்களின் பங்களிப்பு, தியாகம், அர்ப்பணிப்பு, மேலும் பல காரணங்களால் உருவாக்கப்படுகிறது. ஆனால், அழிவு ஒரே நாளில் தீர்மானிக்கப்படுகிறது.

இரண்டாம் தேவராயர் காலத்தில் தென்னிந்தியா முழுவதும் அசுர வளர்ச்சி பெற்றது. துளுவ வம்ச கிருஷ்ண தேவராயர் காலம் விஜயநகரத்தின் பொற்காலமாகப் போற்றப் பட்டது.

கிருஷ்ண தேவராயரின் மறைவு ஒரு கனவு தேசத்தின் அழிவுக்குக் காரணமாக அமைந்தது. வாரிசு மோதல்கள், சுல்தான்களின் தலையீடுகள் ஆகியவற்றின் இடையில் பாமினி சுல்தான்களின் கூட்டுப் படைகளாலும் சில அந்நியர்களின் சதித் திட்டங்களாலும் விஜயநகர சாம்ராஜ்ஜியம் வீழ்த்தப்பட்டது. துரோகம் வென்றது.

வெறிபிடித்த அந்தக் கூட்டம் ஹம்பியில் நுழைந்து கொலை, கொள்ளையுடன் இடிப்பு முதலிய வெறிச் செயலிலும் ஈடுபட்டது. அரண்மனைகள், மாளிகைகள், பேரழகுச் சிற்பங்கள் ஆகிய அனைத்தை யும் இடித்து மண்ணோடு மண்ணாக்கினர். இடித்து இடித்து இறுதியில் சோர்ந்து போய், விட்டுச் சென்ற மிச்சம்தான் ஹம்பியின் பொக்கிஷங்கள்.

ஹம்பியில் எங்குப் பார்த்தாலும் கோட்டை கொத்தளங்கள், அற்புத மாளிகைகள், அரண்மனைகள், கோயில்கள். ஆனால் எந்த ஒன்றும் முழுமையாக இல்லை. கடுமையான பாதிப்புக்குள்ளாகி வெறும் கல்சுவர்கள், தூண்கள் மட்டுமே உள்ளன.

பாதிப்படையாத எந்தக் கோபுரமும் இல்லை. சிதைக்கப்பட்டு ஊனமான எழில்மிகு சிலைகள். அனைத்துப் பகுதிகளிலும் ஏதேனும் ஓர் எச்சத்தைக் காண முடிகிறது. கோட்டையோ, கோயிலோ, மாளிகையோ ஏதேனும் ஒன்றின் பலமான இடிப்பின் மிச்சங்கள் நகர் முழுவதும் காணப்படுகின்றன.

பேரழகுப் பெட்டகமாய்த் திகழ்ந்த அனைத்தும் இன்று கல்லோடும், மண்ணோடும் கரைந்த உணர்வுகளைச் சுமந்து கொண்டு காண்போரைக் கண்ணீர் ததும்ப வைக்கின்றன.

ஹம்பியில் காண வேண்டிய

இடங்கள் பல இருந்தாலும், அவசியம் காண வேண்டியவை மிக முக்கிய மானவை :

விருப்பாட்சர் ஆலயம் : ஹம்பி பஜார், நந்தி மண்டபம், ஹேமகூடா மலைக்குன்றுகள், சசிவேளு, கடலே களு கணேசா, படாவி லிங்கம், கிருஷ்ணர் கோயில் லட்சுமி நரசிம்மர் கோயில்.

விட்டலநாதர் ஆலயம் : கல்யாண மண்டபம், இசைத் தூண்கள், கல்தேர், துலாபாரம்.

தாமரை மாளிகை : யானைத் தொழுவம், ராமர் கோயில், காவல் மண்டபங்கள், பாதாள சிவன், படிக்கிணறு, மகாநவமி டிப்பா பீமாகேட்.

ஹம்பியின் முதல் நுழைவு : விருப்பாட்சர் (சிவன்) ஆலயம். பல்வேறு இடங்கள் பலத்த சேத முற்றிருந்தாலும் இக்கோயில் நல்ல நிலையில் உள்ளது. மூன்று பக்கக் கற்குவியல்களுக்கிடையிலும் ஹேம கூடா மலையடிவாரத்திலும் துங்க பத்திரா நதிக்கரையிலும் அமைந் துள்ளது. இன்றுவரை வழிபாட்டி லும் உள்ளது. உட்கோபுரம், திருச் சுற்று மண்டபம் ஆகியவை கிருஷ்ணதேவராயரால் அமைக்கப் பட்டவை. கோயில் மண்டபத்தில் எழிலார்ந்த தூண்களும் யாழி சிற்பமும் சிம்மங்கள் சிற்பமும் அற் புத வேலைப்பாடுகளுடன் அமைந் துள்ளன.

மண்டபக்கூரையில் விஜயநகர ஓவியங்களை வண்ணத்தில் காண லாம். கோபுரத்தின் நிழல் ஒரு சிறு துளையின் வழியாக உள்நுழைந்து எதிர்ப்பக்கச் சுவரில் தலைகீழாய் விழும் அறிவியல் அதிசயம். கோயிலை ஒட்டி அமைந்துள்ள குளம் மன்மதக்குளம் எனப்படுகிறது.

கோயிலின் முன்புறம் தேரோடும் வீதியும் அதனையெட்டி இருபுறமும் ஹம்பி பஜார் எனும் கடைவீதிகளும் அமைந்துள்ளன. இந்தப் பஜார் தற்போது கல்தூண்களாக மட்டுமே காட்சிக்கு நிற்கின்றது.

உலகத்திலுள்ள எல்லாப் பொருள் களும் கிடைக்கும் முக்கிய வாணிபத் தலமாக விளங்கியது. வெளிநாட்டவர் களும் இங்கு வந்து பொன்னையும், விலையுயர்ந்த அரிய வகைக் கற்களை யும் வாங்கிச் செல்வர். பஜாரின் முடிவில் ஒரு பெரிய நந்தி, கோயிலை நோக்கி அமைந்துள்ளது.

கோயிலின் அருகில் இருப்பது



யானைத் தொழுவம்



அரசியார் நீராடும் குளம்

ஹேமகூடா குன்றுகள். இதன்மேல் ரங்கேஸ்வரர், சமணர்கள் கோயில் ஆகியவை அமைந்துள்ளன. இதைத் தொடர்ந்து இரு கணேசர் கோயில் களும் நீரில் அமைந்திருக்கும் படாலி லிங்கமும் உள்ளன. இங்குதான் லட்சுமி நரசிம்மர் கோயிலும் உள்ளது. இங்குள்ள சிலை லட்சுமி இல்லாத

லட்சுமி நரசிம்மர் சிலை. இது ஒரே கல்லில் செதுக்கப்பட்ட சிற்பம். நரசிம்மர் மடியில் லட்சுமி சிலை உடனிருந்தது. ஆனால், அது உடைக்கப்பட்டு விட்டது.



படிக்குளம்

அவற்றை வெளியில் ஒரு குழாயில் இணைக்கப்பட்டுள்ளது. பணியாளர்கள் தண்ணீரை மேல்தளத்தில் ஊற்றினால், மாளிகை முழுவதும் குளிர்ந்துவிடும். 500 ஆண்டுகளுக்கு முன் அரசகுலப் பெண்கள் உலாவிய மாளிகையில் நாமும் நடப்பது பெருமிதம்.

விட்டலநாதர் ஆலயம் : இந்த ஆலயத்தின் நுழைவுவாயில் கோபுரம் சிதைந்து காணப்படுகிறது. இங்குதான் புகழ்பெற்ற கல்தேர் உள்ளது. இது ஒரே கல்லில் மரத்தேர் போல் செதுக்கப்பட்டுள்ளது. வேலைப்பாடுகளுடன் கூடிய தேரின் சக்கரங்கள் சுழலும். ஆனால், சுழற்ற முடியாது. தேர்மேல் இருந்த கோபுரம் சிதைக்கப்பட்டுவிட்டது.

கோயிலுக்கு அருகில் இசைத் தூண்கள் கூடிய மண்டபம் உள்ளது. கோயிலுக்குப் பின்னால் கல்லால் செய்யப்பட்ட துலாபாரம் உள்ளது. அரசர்கள் தங்கள் எடைக்கு எடை சமமான தானியங்கள், பொன் பொருள்களை நிறுத்துக் கோயிலுக்கோ, மக்களுக்கோ தானமாக வழங்குவர். இங்கும் ஒரு நீண்ட அங்காடித் தெரு இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன.

தாமரை மாளிகை : கட்டட அமைப்பின் மிக உயர்ந்த படைப்பு. இந்தோ – இஸ்லாம் கலைநயத்தில் கட்டப்பட்ட எழிலார்ந்த இரண்டடுக்கு மாளிகை. ஐந்து வாயில்கள் கொண்டு தாமரை மலர் போல் உள்ளதால், இது தாமரை மாளிகை என்று அழைக்கப்படுகிறது.

இங்குள்ள தூண்கள் சிறந்த வேலைப்பாடுகள் அமைந்தவை. இம்மாளிகை குளுகுளு ஏசி வசதி செய்யப்பட்டுள்ளது. மேற்கூரையில் சிறு சிறு மெல்லிய துளைகளிட்டு

யானைத் தொழுவம் : இது பதினோரு அறைகளைக் கொண்டது. பட்டத்து யானைகள் மற்றும் கோயில் யானைகள் இங்குத் தங்கவைத்துப் பராமரிக்கப்பட்டன. வெப்பம் இறங்காதவாறு கூரையின் குமிழ்ப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு அருகில் நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு வீரர்கள் தங்கும் மாளிகை அமைந்துள்ளது.

அரசியர் நீராடும் குளம் : இக்குளத்திற்கு நீர் வரவும் வெளியேற்றவும் குழாய்கள் மூலம் சிறப்பான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நான்கு சுற்று மாளிகையின் நடுவில் இந்தக் குளம் அமைந்துள்ளது.

படிக்குளம் : சிறந்த பொறியியல் கட்டுமானத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இக்குளத்திற்கு நீர் வரத்து, கால்வாய்கள் மூலம் துங்கபத்திரா நதியிலிருந்து அமைக்கப்பட்டுள்ளது.

கோட்டை நுழைவுவாயில் பீமாகேட் : இதில் எதிரிப்படைகள் திமுதிமுவென்று உள்ளே நுழையாமல் தடுக்கப் பல தடைகளை ஏற்படுத்தியுள்ளனர்.

ஹம்பியின் அழித்துச் சிதைக்கப்பட்ட கலைப்பெட்டகங்களைக் கண்டு ரசித்துவிட்டுக் கனத்த மனதுடன் கோட்டை நுழைவுவாயிலின் வழியே வெளியில் வர நேர்ந்தது. ●

இம்மாத ராசி பலன்

"என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!"

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

1.04.2020 அன்று கோள்கள் நிலை

சூரியன்		சுக்கிரன்	ராகு சந்திரன்
புதன்	06.4.2020 புதன் – மீனம் 12.4.2020 சூரியன்– மேஷம் 25.4.2020 புதன் – மேஷம்		
குரு சனி செவ்வாய்			
கேது			



மேஷ ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் சூரியன் விரயஸ்தானத்தில் சஞ்சரிப்ப தால், நற்பலன்களை எதிர் பார்க்க இயலாது. விரயம், அலைச்சல்தான் மிஞ்சும். மாதத் தின் பிற்பாதியில் ஆன்ம பலம் கூடும். உஷ்ண பீடிதம் ஏற்படும். செவ்வாய் 10–ஆம் வீட்டில் சனி, குரு சேர்க்கை பெற்றுச் சஞ்சரிப்பதால், தொழில் துறையில் அச்ச மும், கலக்கமும், வீண் பயமும் ஏற்படும். மாற்றங் கள் ஏற்படும் வாய்ப்புண்டு. சிலருக்கு இடப் பெயர்ச்சியாவது கட்டாயமாகலாம். சந்திரன், ராகு மாதத்தின் தொடக்க நாளில் சேர்வதால், இள வயதினர் தவறான இச்சைகளுக்கு ஆட்பட்டு வீட்டைவிட்டு ஓடிவிட வாய்ப்புண்டு. இள வயதினர் உங்கள் வீட்டிலிருந்தால் 24 மணி நேரக் கண்காணிப்பு அவசியம்.

9–இல் கேது சஞ்சரிப்பதால், புண்ணியக் காரியங்களில் ஈடுபடலாம். ஆலயங்களுக்குச் சென்று வரலாம். சுக்கிரன் வாக்குஸ்தானத்தில் சஞ்சரிப்பது நன்மையாகும். இனிமையாகப் பேசித் தங்களின் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள லாம். ஆடம்பரப் பொருள்கள் வாங்கலாம். திரு மணம் முதலிய சுப காரியங்களில் தற்காலிகத் தடை ஏற்படும். அரசாங்கக் காரியங்களில் மாதத் தின் முற்பாதியில் கவனமுடன் இருக்க வேண்டும்.



ரிஷப ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் முற்பாதியில் தொழில் துறையில் அனுகூல மான பலன்களை ஏற்படுத்தக் கூடும். பொருள் வரவும் ஏற் படும். மாதத்தின் பிற்பாதியில் செலவும், விரயமும் தவிர்க்க இயலாது. செவ்வாய், சனி, குரு 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஒரு சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு களால் ஐஸ்வர்யம் கிட்டலாம். சொத்து சுகம் கிட்டலாம். சகோதர வர்க்கத்தாரால் அல்லது தொலைதூரத் தொடர்புகளால் நன்மை ஏற்பட லாம். சிலருக்குத் தொலைதூரப் பயணம் ஏற்பட லாம்.

ராகு 2–இல் இருப்பதால், தனச்சேர்க்கை ஏற்படும். எதிர்பாராத வருவாய் கிட்டவும் வாய்ப் புண்டு. 8–இல் கேது சஞ்சரிப்பதால் மறைவிடங் களில் கட்டி, உஷ்ண ரோகம் சிலருக்கு ஏற்பட லாம். மாதத் தொடக்கத்தில் மன உளைச்சல் ஏற்படும். கூடிய மட்டிலும் தனிமையாக இருப் பதைத் தவிர்ப்பது நல்லது. சுப காரியங்கள் எதிர் பாராத விதமாகக் கைகூட வாய்ப்புள்ளது. தந்தை மற்றும் குருமார்கள், ஆசிரியர்கள் முதலி

யோர்க்குப் பாதிப்பு நேர வாய்ப்புண்டு. 6–ஆம் தேதி முதல் தொழில் வழி நண்பர்கள் சந்திப்பு ஏற்படலாம்.



மிதுன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் சூரியன் 10, 11ஆம் இடங்களில் சஞ்சரிப்பதால் தொழில் உத்தியோகத் துறைகளில் அனுகூலம் உண்டு. பொருளாதார விருத்தி ஏற்படும். பிறரது உதவிகள் கிட்டும். பொருள் வாங்கும் யோகம் உண்டு. சுக்கிரன் விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், சுக போகம் உண்டு. இருப்பினும் சுபச் செலவுகள், குழந்தைகள் வழிச் செலவுகள் தவிர்க்க இயலாது. செவ்வாய் – குரு – சனி 8–ஆம் வீட்டில் சேர்க்கை பெறுவதால், தேவையற்ற கோப தாபங்கள் தொழில் துறையில் ஏற்படும். வம்பு தேடி வரும். அவசரப்பட்டுச் சிலர் விட்டுவிட எண்ணம் கொள்வர். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். பிறர்மீது போர் தொடுப்பீர்கள்.

புதன் 6–ஆம் தேதி முதல் 10–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் கலை, இலக்கியம், சுய தொழில் செய்வோர் நன்மை அடைவர். சிலரது உடல் நிலை பாதிப்பு அடையக்கூடும். ராசி மீது ராகு சஞ்சரிப்பதால் வயிற்றில் அஜீரணம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. 7–இல் கேது சஞ்சரிப்பதால் திருமணக் காரியம் தற்சமயம் தடைப்படும். ஒன்றிரண்டு மாதங்கள் கழித்து முயற்சிக்கலாம். புதிய தொழில் முயற்சிகளில் இறங்க வெற்றி கிட்டும். நீர்வழிப் பயணத்தைத் தவிர்க்க வேண்டும்.



கடக ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதி திருப்திகரமாக அமையாது. மாதத்தின் பிற்பாதியில் யோகம் உண்டு. நினைத்த காரியம் ஈடேறும். புகழ், செல்வாக்கு உயரும். தொழில், உத்தியோகத் துறைகளில் நன்மை ஏற்படும். தன லாபம் ஏற்படும். தொழில் சம்பந்தமாகச் சிறு பயணங்கள் சிலருக்கு ஏற்படலாம். புதன் 9–ஆம் வீட்டில் சஞ்சரிக்க இருப்பதால் கல்வி, கேள்வி தொடர்பான விஷயங்களில் 6–ஆம் தேதிக்குப் பின்னர் அனுகூலம் ஏற்படும். யோசனை, போதனை செய்வோருக்கு நற்காலம். சுக்கிரன் லாபஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பெண்கள் மூலம் சிலர் நன்மை அடைவர்.

செவ்வாய், குரு, சனி 7–இல் சஞ்சரிப்பதால் திடீர் மாற்றங்கள் சிலருக்கு ஏற்படும். ஒரு சிலர் எதிர்ப்புகளைச் சந்திக்க நேரிடும். ரத்த சம்பந்தம் உடையவர்கள் மூலமோ, அரசு அதிகாரிகள், கூட்டாளிகள் மூலமோ நன்மை, தீமை ஏற்பட வாய்ப்புண்டு. கேது 6–இல் சஞ்சரிப்பதால் ரகசிய எதிர்ப்புகள் இருந்து வரும். திருமணம் ஒரு சிலருக்கு எதிர்பாராத சூழலில் ஏற்படக்கூடும். ஒரு சிலர் மதம் மாறித் திருமண பந்தங்களை ஏற்படுத்திக் கொள்வர். புது முயற்சிகளை மாதத்தின் பிற்பாதியில் தொடங்க நன்மை ஏற்படும்.



சிம்ம ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற்பாதியில் எதிர்பாராத செலவினங்களை ஏற்படுத்தக்கூடும். உங்களது நல்ல செயல்கள்கூட மற்றவர்களுக்குப் பிரச்சனைகளைத் தோற்றுவிக்கலாம். மாதத்தின் பிற்பாதியில் காரியத் தடைகள் ஏற்படும். ஒன்றுக்கு மேற்பட்ட முயற்சிகளால் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். ராசி அதிபதி 9–இல் உச்சம் பெற்று மாதத்தின் பிற்பாதியில் சஞ்சரிப்பதால் ஆன்மிகக் காரியங்களில் ஈடுபடலாம். 10–இல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் பெண்கள் மூலமாகத் தொழில் தலத்தில் பிரச்சனைகள் வரக் கூடும், கவனம் தேவை.

8–இல் புதன் 6–ஆம் தேதி முதல் சஞ்சரிப்பதால், நீர் நிலைகளில் ஆபத்து வரலாம். படகு சவாரி முதலியவற்றைத் தவிர்ப்பது நலம். ஒரு சிலர் பெண்களின் வஞ்சகச் செயலால் பரிதவிக்க நேரிடும். சனி – குரு – செவ்வாய் 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், காவல்துறையில் பணி செய்வோர், நீதிமன்றத்தில் பணி செய்வோர், அரசியல் தொழில் செய்வோர் நன்மைகளை அடைவர். பதிவுத்துறை, போக்குவரத்துக் காவல் துறை, லஞ்ச ஒழிப்புத் துறையில் பணி செய்வோர் பதவி உயர்வு அடைவர். திருமணம் முதலிய சுப காரியங்கள் நடைபெற வாய்ப்பில்லை. இரண்டு, மூன்று மாதம் போக வேண்டும்.

கன்னி ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் குடும்பச் செலவுகள், எதிர்பாராத சம்பவங்கள் தவிர்க்க இயலாது. வாழ்க்கைத் துணைவருடன் அனுசரித்துச் செல்ல வேண்டும். செவ்வாய் – சனி – குரு 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால், புத்திர வர்க்கத்தாரால் கவலையும், செலவும், பலதரப்பட்ட பிரச்சனைகளும் ஏற்பட வாய்ப்புண்டு. ஸ்திரமான முடிவெடுத்து எச்செயலிலும் இறங்க வேண்டும்.

கன்னி



குழப்பங்கள் ஏற்படும். 7–இல் புதன் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால், உறவி னர்கள் மூலம் நன்மை, தீமை ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணைவரது பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

சுக்கிரன் 9–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சுகம், சந்தோஷம் உண்டு. புண்ணியத் தலங்கள் சென்று வரலாம். சில எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும், சுப கிரக திசாபுத்தி நடைபெறுபவர்களுக்குக் கிட்ட வாய்ப்புண்டு. ராகு 10–இல் சஞ்சரிப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் இருள் சூழ்ந்தது போன்ற உணர்வு ஏற்படும். மாற்றங்கள் குறித்துச் சிந்தனை செய்யலாம், செயல் வடிவம் பெறாது. திருமணக் காரியங்கள் ஒரு சிலருக்கு எதிர்பாராத வகையில் கைகூடும் வாய்ப்புண்டு. வைகாசிக்குள் நடக்காவிட்டால் தாமதமாகும்.


துலாம்



துலாம் ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் தொழில் துறையில் நன்மைகள் ஏற்படும். பொருளாதார விஷயங்களில் வெற்றி கிட்டும். புது முயற்சிகளை மாதத்தின் முற்பாதியில் தொடங்க நன்மை உண்டாகும். சுக்கிரன் 8–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் ஆடம்பரப் பொருள்களை விற்கவோ, அடமானம் வைக்கவோ சிலர் முயற்சிப்பர். வாகனக் கெடுதி ஏற்படும். புதன் 6–ஆம் தேதி முதல் 6–ஆம் வீட்டில் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால், தகப்பன் வர்க்கத்தாருக்குச் சிறிய பாதிப்பு வரலாம். தாய் மாமன் வழியில் விரயம் ஏற்படக்கூடும்.

செவ்வாய் – சனி – குரு 4–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் குழப்பம், பிரச்சனைகள் ஏற்படும் வாய்ப்புண்டு. தொழில், உத்தியோகம் தொடர்பாக மாற்றங்கள் ஏற்படலாம். சிலர் தொழில் அபிவிருத்தி காரணமாகச் செலவுகளை அடைய நேரிடும். திருமண வாய்ப்பு, வரும் அக்டோபர் வரை ஏற்பட வாய்ப்பில்லை. ராகு, கேதுக்கள் நன்மையளிக்கும் விதமாகச் செயல்படுவதால், இதர கிரகங்களின் பாதிப்புகளிலிருந்து தப்பித்து விடுவீர்கள். நீண்ட பயணங்கள் செல்லும் வாய்ப்புச் சிலருக்கு ஏற்படும். தூர தேசங்களிலிருந்து நல்ல செய்திகள் சிலருக்கு வந்தடையும்.

விருச்சிகம்



விருச்சிக ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதம் முற்பாதியில் காரியத் தடைகளையும், புத்திக் குழப்பத்தையும் ஏற்படுத்தலாம். மாதத்தின் பிற்பாதியில் தொழில், உத்தியோகத் துறைகளில் ஆதாயத்தை ஏற்படுத்தக்கூடும். பொருளாதாரம் மேம்படும். சத்ரு ஜெயம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தொடங்க நல்ல கால கட்டங்கள். சுக்கிரன் 7–இல் சஞ்சரிப்பதால் பெண்கள் மூலம் நன்மை ஏற்படும். சிலர் எதிர்ப்புகளையும் அடையும் வாய்ப்புண்டு. 8–இல் ராகு சஞ்சரிப்பதால் தேவையற்ற அச்சம், ஆசனவாய்ப் பாதிப்பு, கட்டி முதலியவற்றால் பாதிப்புக்குள்ளாவார்கள்.

2–இல் கேது சஞ்சரிப்பதால் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டும். புராண, இதிகாச நூல்களை வாசிப்பதில் சிலருக்கு ஆர்வம் ஏற்படும். புதன் 5–இல் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால் 6–ஆம் தேதி முதல் கல்வி, கேள்விகளில் எதிர்பார்க்கும் வெற்றி கிட்டாது. சாஸ்திரம், எழுத்து, இலக்கியம், கலைத் தொடர்புடைய தொழில் செய்வோர்க்குச் சற்றுப் பின்னடைவு ஏற்படும். திருமணம் முதலிய சுப காரியங்கள் அடுத்த ஒன்றிரண்டு மாதங்களுக்கு நிறைவேற வாய்ப்பில்லை. குரு – செவ்வாய் – சனி 3–இல் சஞ்சரிப்பதால் அபகீர்த்தி ஏற்படும்.

தனுசு



தனுசு ராசி அன்பர்களுக்கு இம்மாதம் பொறுப்புகள் அதிகப்படும். அலைச்சலும் அதிகமாகும். முடிவெடுப்பதில் மனதில் தடுமாற்றங்கள் ஏற்படும். புத்திரக் கவலை அதிகமாகும். செவ்வாய் – சனி – குரு இம்மாதம் 2–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் தனம், பொருள் சேர்க்கை ஏற்படக்கூடும். சுப காரியங்களில் சிலர் ஈடுபாடு கொள்வர். செலவினங்கள் ஏற்பட்டாலும், வரவுகள் கூடும். ஒரு சிலர் விற்கிரயம் செய்வதில் ஆதாயம் ஏற்படும். குடும்பத்தில் உறுப்பினர்கள் எண்ணிக்கை தற்காலிகமாக அதிகப்படலாம்.

சுக்கிரன் 6–இல் சஞ்சரிப்பதால் உடலில் சர்க்கரை பாதிப்பு உடையவர்கள் உரிய கவனத்துடன் இருக்க வேண்டும். எதிர்ப்புகளை வெற்றி கொள்ளலாம். கோர்ட்டு வில்லங்க விவகாரங்களில் நன்மை ஏற்படும். சாதகமான போக்குத் தென்படும். ராசி மீது கேது சஞ்சரிப்பதால், உள்ளு

ணர்வு ஆற்றல் அதிகப்படும். 7–இல் இராகு சஞ் சரிப்பதால் வேற்று மதக்காரர்களுடன் தொடர்பு கள் ஏற்படின் முன்னெச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். சுப காரிய முயற்சிகளில் இறங்கலாம், வைகாசி மாதம் ஈடேறலாம். இல்லையெனில் கால தாமதம் ஏற்படும்.



மகர ராசி அன்பர்களுக்கு, சூரியன் இம்மாதத்தின் முற் பாதியில் தொழில் துறையிலும், பொருளாதார விஷயங்களிலும் நன்மையை ஏற்படுத்தும் வாய்ப்புண்டு. புது முயற்சிகளில் இறங்கலாம். மாதத்தின் பிற் பாதியில் வீண் அலைச்சல், குடும்பத்தில் பிரச்சனை, உடல் நலிவு முதலிய பலன்களை ஏற்படுத்தக்கூடும். சுக்கிரன் 5–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் இள வயதினர் மகிழ்ச்சிகரமான சம்பவங்களை அனு பவிக்கும் வாய்ப்புண்டு. இராகு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் பிறரது தனம், சொத்து முதலிய வற்றைப் பராமரிக்கும் பொறுப்பு சிலருக்கு ஏற்படலாம்.

12–இல் கேது சஞ்சரிப்பதால், தூக்கத்தில் கனவுகள் பலவாறாகத் தோன்றும். ராசி மீது சனி, குரு, செவ்வாய் சஞ்சரிப்பதால் காரியங்களில் அவ்வப்போது தடைகள் ஏற்படலாம். உடல் சோர்வு, மனச்சோர்வு ஏற்படக்கூடும். உங்களின் உடல் நலம் குறித்து அக்கறை செலுத்த வேண்டும். மருத்துவச் செலவு ஏற்படலாம். ஜன்மச்சனி ஆரம்பித்திருப்பதால் தொழில், உத்தியோகத் துறைகளில் பெரிய அளவில் ஆதாயம் அடைய இயலாது. செவ்வாய் ராசி மீது சஞ்சரிப்பதால் கோப தாபங்களைத் தவிர்ப்பது நல்லது. திரு மணம் முதலிய சுப காரியங்கள் கால தாமதமாக லாம். புதன் 3–இல் சஞ்சரிப்பதால் ஏற்கனவே செய்த தவறுக்கு வருந்துவீர்கள்.

கும்ப ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் பிற்பாதி உங்களுக்கு மேன்மையான பலன்களை ஏற்படுத்தும். தொழில், உத்தியோகத் துறைகளில் எதிர்பார்ப்புகள் ஈடேறும். பொருளாதார விருத்தி ஏற்படும். முயற்சி பலிதம் உண்டு. நல்ல தோற்றம், நல்ல செய்கையால் நன்மை அடைவீர்கள். மாதத் தின் முற்பாதியில் பணத்தேவை ஏற்படும். ஒரு சிலர் தங்கள் வாழ்க்கைத் துணைவரால் நன்மை, தீமை இரண்டையும் அடைவர். செவ்வாய் – கேது முதலிய கிரகங்கள் சாதகமற்றுக் காணப்படு கின்றன. செவ்வாய் 12–இல் குரு – சனி சேர்க்கை



பெற்றுச் சஞ்சரிப்பதால், அமைதிக் குறைவு ஏற்படும். ஞாபக மறதியால் சில காரியங் களை நிறைவேற்றுவதில் பிரச்சனைகளை அடைவீர்கள். ஒரு சிலர் தெரிந்தே சில ஏமாற் றங்களை அடைவர்.

4–இல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் வாகன சுகம் உண்டாகும். இரண்டில் புதன் 6–ஆம் தேதி முதல் நீசம் பெற்றுச் சஞ்சரிப்பதால் புத்திர வர்க்கத்தாரால் செலவினங்களை அடை வீர்கள். புத்தி, யுக்தியால் சில காரியங்களில் நன்மை அடைவீர்கள். திருமணம் முதலிய சுபகாரியங்கள் தற்சமயம் ஈடேற வாய்ப்பில்லை. 2, 12–ஆம் வீடுகளில் நீசக் கிரகங்கள் சஞ்சரிப்ப தாலும், பாவக்கிரகங்கள் சேர்க்கை பெறுவதாலும் வாழ்க்கைத் துணைவருக்குப் பாதிப்பு நேரலாம்.




மீன ராசி அன்பர்களுக்கு, இம்மாதம் முற்பாதியில் உடல் உபத்திரவங்கள், வீண் விவ காரங்கள், எதிர்ப்புகள் ஏற்படும் வாய்ப்புண்டு. நீங்களும் பிறர் மீது வெறுப்பை வெளிப்படுத்த லாம். மாதத்தின் பிற்பாதியில் இரண்டில் சூரியன் சஞ்சரிப்பதால் கண்களில் உபாதை ஏற்படக்கூடும். பணத்தேவை அதிகரிக்க லாம். ரத்த சம்பந்த உறவுகளால் பணம் கிடைக்க லாம். வில்லங்க விவகாரங்கள், வியாஜ்ஜியங்கள் மூலம் சிலருக்கு நன்மை ஏற்பட வாய்ப்புண்டு. ராசி மீது புதன் சஞ்சரிப்பதால் எதையும் விரை வாகப் புரிந்து விரைவாகச் செயல்பட வேண்டிய சூழ்நிலைகள் உண்டாகும்.

செவ்வாய் – குரு – கேது 11–இல் சஞ்சரிப்ப தால் உத்தியோக உயர்வு, சுப காரிய ஈடுபாடு, அரசு அதிகாரிகள் மூலம் நன்மை, பூமி, நிலம் சேர்க்கை முதலிய நன்மைகள் உண்டாகும். பெரிய மனிதர் உதவியும் கிட்டலாம். 10–இல் கேது சஞ்சரிப்பதால் அதிகாரம் ஓங்கும். தொழில், உத்தியோகத் துறைகளில் இருள் நீங்கி ஒளி பிறக்கும். புது முயற்சிகளை வரும் வைகாசி மாதம் தொடங்கலாம். இம்மாதம் அனுகூலப் படாது. சுக்கிரன் 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உடன் பிறந்தவர்கள் சுகபோகம் அனுபவிப்பர். ராகு 4–இல் சஞ்சரிப்பதால் போக்குவரத்துகளில் தொடர்ந்து கவனம் வேண்டும்.


கட்டுரை

'பார்சி' எனும் மேன்மைமிகு சமூகம்

டி.எஸ்.தியாகராசன்



எந்த ஒரு நாட்டிலும் வாழும் அந்தந்தக் குடிமக்களின் குணநலன்களைப் பொறுத்தே அந்தந்த நாட்டின் அருமை பெருமைகளை அளவிட இயலும். இவ்வழியின் கண் இந்தியாவில் வாழும் 0.6 சதவீத மக்களாகிய பார்சி இன மக்களின் மேன்மைகளை எந்த ஒரு நடுநிலையாளரும் வியந்தே பாராட்டி மகிழ்வர் என்பது திண்ணம். ஆனால் இவர்களின் கடந்த கால வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், யாரும் கண்ணீர் சிந்தாமல் இருக்க முடியாது. அவ்வளவு துன்பங்களும், துயர்களும் நிரம்பியது.







உலகின் தொல் சமயமான இந்து சமயத்தின் சாயலைக் கொண்டதொரு சமயம்தான் பார்சியம் எனப்படுகின்ற ஜொராஷ்டிஸம். இன்றைய ஈரானின் கிழக்குப் பகுதியையும், காஸ்பியன் கடலின் தென்மேற்குப் பகுதியையும் தனது பிறப்பிடமாகக் கொண்டது பெர்ஷியா – பாரசீகம் என்ற நாடு.

இந்நாட்டில் பிறந்த, வாழ்ந்த ஜொராஷ்டிஸம் என்ற சமயம் எகிப்து முதல் ஆப்கானிஸ்தானம் சிந்து வரை செழிப்பாக வளர்ந்து இருந்தது. இந்தச் சமயத்தை அறநெறிக் கோட்பாடுகளோடு தோற்றுவித்தவர் மாபெரும் ஞானியான ஜராதுஸ்டிரர்.



சனாதன தர்மங்களைத் தன்னகத்தே கொண்டதொரு புனித சமயமே பார்சி சமயம். இச்சமய மக்கள், அல்லன தவிர்த்து நல்லன ஆற்றுதல் இறைவனை அடையும் மார்க்கமாகக் கருதுகிறார்கள்.

பார்சி இன மக்களின் புனிதத் திருநூல் 'அவெஸ்தா'. நமது நாட்டின் நான்கு வேதங்களைப் போன்றே மந்திரங்களாகவும் பிரார்த்தனை இசைப் பாடல்களாகவும் 'அவெஸ்தா' காணப்படுகிறது.

சமண, பௌத்த, இந்து சமய அறநூல்களைப் போன்றே பல்வகை அறங்களை வழிப்படுத்துகிறது.

சத்தியத்தையே நினை. அதையே பேசு. வாழ்க்கை முழுவதுமாக இதன் வழியிலேயே பின்பற்று. பாவங்கள் குறித்தான செயல்களில் இருந்து விலகியே வாழ். மனிதனின் உடல் பருமனையும், பெருத்த வயிற்றினையும் தவிர்த்து விடு. மயக்கம் தரவல்ல பானங்களைக் குடிக்காதே. அசைவ உணவை முற்றிலுமாக நீக்கிவிடு. இவ்வுலகத்திற்காக உனது தொண்டினைச் செய். நீ யார் என்பதை உன்னை உணர்ந்து தெரிந்துகொள்.

மனிதனுக்கு என்று நான்கு கடமைகள் உள்ளன. 1. தக்கவர்கட்கு உதவ வேண்டும். 2. நடு நிலைமை தவறுதல் கூடாது. 3. எல்லோரிடத்தும் நட்புப் பாராட்டு. 4. பொய் நீக்கி வாய்மை தவறாது வாழ்.

பார்சி இனத்தவர் நம்மைப் போன்றே நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் எனும் ஐம்பெரும் சக்திகளை வணங்

குவர். நீராடும்போது இறைவனை வணங்குதல், தீ வளர்த்து அதில் ஆகுதி செய்தல், உண்ணும் போது மௌனம் காத்தல் முதலிய விஞ் ஞானம் கலந்த மெய்ஞ்ஞான வழி களைக் கடைப்பிடிப்பவர்கள். நாம் வணங்குவது போலப் பசு மாதாவிற்குக் கோ பூஜை செய்வார்கள்.


பீல்டு மார்ஷல் சாம் மானக்ஷா

பேறு காலத்தில் கருவுற்ற மகளிரை மிகுந்த கவனத்தோடும் புலனடக்கத் தோடும் இருக்க வழி காண்பர். தினம் ஐந்து முறை இறை வழிபாடு செய்வர். தக்கவர்களுக்கும், வறியோர்களுக்கும் பொன், பொருள் வழங்குவதைத் தங்களது சமயப் பணியாகக் கருதுவர்.


ரத்தன் டாடா

நீர் நிலைகளை உண்டாக்கி மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து தருதல் இவர்களின் வாழ்க்கையில் முக்கிய அறப்பணி. எல்லோரிடத்தும் நட்புடன் இணக்கமாக வாழ்வதை இவர்களது சமயம் வலியுறுத்துகிறது.

இப்படிப் பல உன்னதமான ஒழுகலாறுகளைத் தங்களின் வாழ்க்கைப் பாதையாகக் கொண்ட தொரு சமூகம், பண்டை நாளில் அனுபவித்த கொடுமைகளை வரலாறு காட்டும் காட்சிகள் நம் கண்களில் கண்ணீரை மட்டுமல்லாது, விழியோரங்களில் ரத்தக் கசிவையும் ஏற்படுத்தும்.

கி.மு. 600 முதல் 650 ஆண்டுகளில் எகிப்து முதல் காந்தாரா தேசம் (ஆப்கானிஸ்தான்) சிந்து வரை பரவி இருந்தது பெர்ஷிய அரசு. அன்றைய பெர்ஷியாதான் இன்றைய ஈரான். கி.பி. 10–ஆம் நூற்றாண்டு வரை மிகவும் சிறப்பாகவும் செழிப்பாகவும் வாழ்ந்த பெர்ஷிய மக்களுக்கு அரேபியர்கள் மூலம் கொடுமையான சோதனைக் காலம் வந்தது.

இவர்கள், முரட்டு அரேபியர்களை எதிர்த்துப் போராட முடியாமல் பின்வாங்கினார்கள். நாட்டைக் கைப்பற்றிய அரேபியர்கள் பெர்ஷிய மக்களுக்கு மூன்று நிபந்தனைகளை அறிவித்தார்கள். 1. இந் நாட்டில் உள்ள அனைவரும் இஸ்லாம் மார்க்கத் திற்கு மாறிவிட வேண்டும். 2. அல்லது அனை வரும் உயிர்துறக்க வேண்டும். 3. அல்லது அனைவரும் இந்நாட்டை விட்டு உடனே வெளி யேற வேண்டும். ஈவு இரக்கமற்ற வன வேடனின் வலைக்குள் சிக்கிய மான் போல் பெர்ஷிய மக்கள் துடிதுடித்தனர். அழுது புரண்டனர்.

இது நாள்வரை அனுசரித்து வந்த தெய்வீகம் பொருந்திய சமயத்தில் இருந்து விலகி, வந்தேறிய கூட்டத்தின் மதத்திற்கு மாறுவதா? அல்லது ஓடித் தப்பிப் பிழைப்பதா? அல்லது அனை வரும் மடியத்தான் வேண்டுமா? என் பதை எண்ணிப் பெரியவர்கள் மனம் பேதலித்தார்கள்.

இறுதியாக, முடிந்தவரை தப்பி உயிர் பிழைப்பது என்ற சோகமான தொரு முடிவுக்கு வந்தனர். ஆண்டுகள் பலவாக தலைமுறை தலைமுறையாக ஆண்டு அனுபவித்து வந்த அவரவர் களின் அசையாச் சொத்துகளான வீடு களையும் இன்னபிற விலைமதிப்பற்ற அளவற்ற அரிய பொருள்களையும் ஒரு நொடியில் இழந்து வீடு அற்றவர்களாக, ஆதரவு அற்றவர் களாக மாறிப் போனார்கள்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள், கர்ப் பிணிகள், முதியவர்கள், நோயுற்றவர்கள் என மக்கள் பல்லாயிரவர் கண்ணீரோடும் தாங்க இயலாத கனத்த மனத்தோடும் கப்பல்களில் புறப்பட்டார்கள். மரக் கலங்களில் ஏறித் தப்பிக்க இயலாத வறியவர்கள் எஞ்சிய மக்கள் அனை வரும் இஸ்லாம் மதத்திற்குக் கட்டாய மத மாற்றம் செய்யப்பட்டார்கள். பெர்ஷியா, ஈரான் என்ற புதுப் பெயர் பெற்றது.

கப்பல்களில் தஞ்சம் அடைந்த மக்கள் கடலின் கிழக்குத் திசை நோக்கிப் பல தினங்கள் உறக்கம் இன்றிச் சொற்ப உணவினைப் பகிர்ந்து கொண்டு பயணித்து, இந்தியாவின் மேலைக் கடற்கரையில் குஜராத்தில் உள்ள 'சன்ஜன்' என்ற துறைமுகத்தை வந்தடைந்தனர். நடுக்கடலில் கப்பல்களை நங்கூரம் பாய்ச்சி நிறுத்திவிட்டுத் துறைமுகத் தலைவரிடம் உரிய அனுமதி பெற்று, அந்நாட்டு மன்னனைக் காணச் சில பெரியவர்கள் சென்றார்கள்.

அந்தப் பகுதியை ஆண்டு வந்த மன்னன் ஜாடி ராணா. அம்மன்னனிடம் பெர்ஷியா நாட்டில் நடந்தவற்றை விவரித்துவிட்டுப் புகலிடம் வேண்டி நின்றார்கள். மன்னன் முதலில் மறுத்துவிட்டான்.

பின்னர் பெர்ஷிய மக்களின் தலைவனான ஒருவன் மன்னனிடம் மனம் உருக "எங்களை

உங்கள் நாட்டில் வாழ அனுமதித்தால் எங்களது கடின உழைப்பால், வணிக சாதுர்யத்தால் உங்கள் நாட்டை வளப்படுத்துவோம். யார்க்கும் நாங்கள் மனதளவில் கூடத் தீங்கு எண்ண மாட்டோம்'' என்று சொல்லி விட்டு, மன்னனிடம் ஒரு கண்ணாடிக் குவளையில் பாலைக் கொண்டு வர வேண்டினார்.

மன்னன் ஆணையிட, ஒரு குவளையில் பால் நிரம்பிய நிலையில் வந்தது. பெர்ஷிய மக்கள் தலைவன் தன்னுடன் கொண்டு வந்திருந்த சர்க்கரையை அந்தக் குவளையில் உள்ள பாலில் கலந்து ''இதுபோன்று நாங்களும் உங்கள் மக்களோடு இரண்டறக் கலந்து நாட்டை வளப்படுத்துவோம்'' என்றான். மன்னன் அவனது மதிநுட்பத்தை வியந்தும் மனம் மகிழ்ந்தும் அவர்களைத் தனது நாட்டில் வாழ அனுமதித்தார்.

கப்பல்களில் இருந்து மிகுந்த மகிழ்ச்சியோடும் கண் கலங்கிய நெகிழ்ச்சியோடும் மக்கள் கரையில் கால் பதித்தார்கள். தத்தம் முன்னோர்கள் பாடுபட்டுச் சேகரித்த சொத்துகளை இழந்துவிட்டு வந்த பெர்ஷிய மக்கள் (பாரசீகம்) 'பார்சிகள்' என அழைக்கப்பட்டனர்.

இந்திய மண்ணில் புது வாழ்க்கை தொடங்கத் தங்களை முற்றிலுமாகப் பக்குவப்படுத்திக் கொண்டனர். பாரத நாட்டில் இன்று வசிக்கும் பாரசீகர்களை நாம் பார்சீகள் என்று அழைத்து அவர்களுக்கு மதச் சிறுபான்மை என்ற சிறப்புத் தகுதியையும் வழங்கி, அவர்களின் மனம் போல வாழ உரிமை வழங்கியுள்ளோம்.

இதே பார்சி மக்கள் இன்றைக்கு ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் முதலிய நாடுகளில் மிகச் சிறுபான்மைச் சமூகமாக வாழ்ந்து வருகின்றனர். இந்த நாடுகளில் இவர்கள் மதரீதியாகப் பலவகைத் துன்புறுத்தலுக்கு ஆளாகிறார்கள். இவர்களில் பலர் இந்தியாவிற்கு அடைக்கலமாக வருகிறார்கள். இவர்களுக்கு இந்தியக் குடியுரிமைச் சட்டத்தில் ஒரு திருத்தம் செய்து இந்நாட்டு மக்களாக அங்கீகாரம் செய்ய விரும்பி அண்மையில் மத்திய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தது. இதன் உண்மை விபரம் புரிந்தோ, புரியாமலோ இந்தியாவிற்கு வரும் பார்சிகள், கிறித்துவர்கள், பௌத்தர்கள், சமணர்கள் வாழ்வுரிமைக்கு எதிராகச் சிலர் போராடுகிறார்கள்.


புத்ததேவ் பட்டாச்சார்யா


மம்தா பானர்ஜி

இந்தியாவிற்கு வந்த பார்சிகள் தங்கள் முன்னோர்கள் கொடுத்த உறுதி மொழியின் வண்ணம் பாரத நாட்டின் முன்னேற்றத்திலும் வளர்ச்சியிலும் தங்களது அளப்பரிய பங்கை அவ்வப்போது அளித்து வருகிறார்கள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கென்று ஒரு கொடியை வடிவமைத்தவர் மேடம் பக்கஜி காமா அம்மையார் ஒரு பார்சி. சுதந்திரப் போராட்ட வீரரும் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிற்குத் தலைமை தாங்கியவருமான தாதாபாய் நௌரோஜியும் பார்சி இனத்தவரே!

இந்திய – பாகிஸ்தான் போரில் வெற்றிவாகை சூடிய பீல்டு மார்ஷல் சாம் மானக்ஷாவும் பார்சியே! இந்திய விண்வெளித்துறையில் சிறப்பிடம் வகித்த ஹோம்ஜி பாபாவும் பார்சிகுலக் கொழுந்துதான். இதற்குப் பின்னால் வந்தவரும் இந்திய விண்வெளித் தந்தையுமான டாக்டர் விக்ரம் சாராபாயும் பார்சி இனவழித் தோன்றலே!

இந்திய அரசியல் சாசனச் சட்டத்திலும் இன்ன பிற சிவில் சட்டங்களிலும் பழுத்த அனுபவம் பெற்றவரான நானி ஆர்த்தீரிஸ் பால்கிவாலா பார்சி இன வழியினரே! இவரது நுண்மாண் நுழைபுலத்தைக் கண்டுவியந்த மூதறிஞர் ராஜாஜி இவரை இந்தியாவுக்கு இறைவன் அளித்த அருட்கொடை எனப் பாராட்டி மகிழ்ந்தார். இவர் அளித்த பெரும் கொடை சென்னை சங்கர நேத்ராலயா மருத்துவ நிறுவனத்திற்குப் பேருதவியாக அமைந்தது.

இந்தியாவில் இரும்பு எஃகுத் துறையில் முதன் முதலில் தடம் பதித்தவர் ஜாம்ஷெட்ஜி டாட்டா. இவர் ஒரு பார்சி. இவரது அளப்பரிய சாதனையால் இவரது பெயரில் ஜாம்ஷெட்பூர் என்றதொரு நகரமே உண்டாயிற்று. கோத்ரெஜ் நிறுவனத் தயாரிப்புகள் உலக புகழ்ப் பெற்றவை. இந்தத் தொழில்துறை நிறுவனத்தின் உரிமையாளர்கள் கோத்ரெஜ் சகோதரர்கள் பார்சி வகுப்பினர்.

இந்தியாவில் முதன்முதலில் விமானத் துறை நிறுவனத்தைத் தொடங்கியவரும் தானே ஒரு விமான ஓட்டியுமான ஜே.ஆர்.டி. டாடாவும் பார்சியே. லால்ஜி வாடியா முதலிய தொழிலதி பர்களும் இந்த இனப் பிரிவில் அடங்குவர். இவர்களது கடின உழைப்பு, அர்ப்பணிப்பு உணர்வு, தேசபக்தி எல்லாம் இவர்களின் மங்காப் புகழுக்கு நிரந்தர அடையாளங்கள்.

பார்சி சமூகத்தில் யாராவது ஒருவர் இறக்க நேரிட்டால் அவரது சவ உடலை மண்ணுக்கோ, தீக்கோ இரையாக்காமல் உயரமான ஓர் இடத்தில் இருந்து இவர்களின் ஈமச் சடங்கிற்காக ஒதுக்கப் பட்டுள்ள இடத்தில் கீழே வீசி விடுவார்கள். சடலத்தைக் கழுகுகள் தங்களது உணவாக ஏற்றுக் கொள்ளும். பிணம் தின்னிக் கழுகுகள் என்ற பெயரே இவர்களின் செயலால்தான் வந்தது என்றால் சற்றும் மிகையல்ல. வாழும் போதும் பிறர்க்கு உதவிட வேண்டும். மாய்ந்த பின்னும் தங் களது உடல் பறவைகட்கு உணவாக வேண்டும் என்ற இவர்களது கருணையை என்ன பெயர் சொல்லி அழைக்க !

இவர்கள் சூரியனை வழிபடும் தெய்வமாகக் கொண்டவர்கள். சென்னையில் இராயபுரத்தில் இவர்களது பார்சி சூரியக் கோயில் இருக்கிறது. பாரத நாட்டில் தஞ்சம் புகுந்து அடைக்கலமாகக் குடியேறிய பார்சி சமூகத்தால் இது நாள்வரை யார்க்கும் எந்தவிதப் பாதிப்போ, சிரமமோ ஏற்பட்ட தில்லை. இவர்கள் தனிநாடு கேட்டுப் போராடு வதில்லை. இவர்கள் பேசும் பாரசீக மொழிக்காக மொழிப்போர் இல்லவே இல்லை.

பிற வகுப்பாரோடு சிறு மோதல்கூட இல்லை. கொடிபிடிப்பது, ஊர்வலம் போவது, போராட்டம் நடத்துவது, குற்றச் செயல்களில் ஈடுபடுவது முற்றிலுமாக இல்லை. சட்ட விரோத நடவடிக் கைகள் இவர்களது கனவில்கூட எழுவது இல்லை. நேர்மை தவறுவது இவர்களின் வாழ்க் கையில் காண இயலாத அரிய பண்பு. இயற் கையை நேசிப்பதும், அரசின் சட்டத் திட்டங்களை ஏற்பதும் இவர்களின் இயல்பான குணநலன்கள்.

சில காலத்திற்கு முன்பு மேற்கு வங்கத்தில் ஆட்சியில் இருந்த முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்யாவின் வேண்டுகோளுக்கிணங்க, அரசு ஒதுக்கிய நிலத்தில் நந்தி கிராமத்தில் சிறிய ரகக் கார் தொழிற்சாலையை அமைக்க டாட்டா குழுமம் முன் வந்தன. பல ஆயிரம் கோடி முதலீட் டில் தொழிற்சாலைப் பணிகள் முன்னேறி வந்தது. அரசியல் பூகம்பம் வெடித்தது.

விவசாய நிலத்தை அபகரித்து டாட்டாவுக்கு அளித்துவிட்டது இந்தப் பொதுவுடைமை அரசு என்று தொடர் போராட்டத்தைத் தொடங்கினார் இன்றைய முதலமைச்சர் மம்தா பானர்ஜி. போராட் டம், வன்முறை, தடியடி, துப்பாக்கிச்சூடு, நீதி விசாரணை, நீதிமன்றத் தீர்ப்பு என்ற வழக்கமான இந்தியப் பாணியில் பாதை நீண்டது.

டாட்டா குழுமம் தான்பெற்ற தொழிற்சாலைக் கான நிலங்களைத் திருப்பி அளித்துவிட்டுப் பல நூறு கோடிகளை நஷ்டமாக ஏற்று ஊர் திரும் பியது. தற்போதைய பிரதமர் – அப்போதைய குஜராத் முதல்வர் நரேந்திர மோடி டாட்டா குழுமத் திற்குத் தனது மாநிலத்தில் நிலம் தந்து கார் தொழிற்சாலை அமைக்க உதவினார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் பத்திரிகை நிருபர்கள் கல்கத்தாவில் டாட்டா குழுமத் தலைவர் ரத்தன் டாடாவிடம் “நீங்கள் கார் தொழிற்சாலையை வேறு மாநிலத்திற்கு மாற்றிவிட்டீர்கள். இதுபோலத் தாங்கள் மிகப் பிரமாண்டமாகக் கட்டி வருகின்ற புற்றுநோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைக்கான மருத்துவமனைப் பணியை நிறுத்தி விடுவீர்களா? அல்லது வேறு மாநிலத்திற்கு மாற்றி விடுவீர் களா?” என்று வினா எழுப்பினர்.

டாட்டா குழும நிறுவனத் தலைவர் சொன் னார், “அப்படி இல்லை. நிச்சயமாக மருத்துவ மனை முழுவதுமாகக் கட்டி முடிக்கப்படும். மக்களின் பயன்பாட்டுக்கு உதவிடும்” என்று உறுதி அளித்தார். அதைப் போலவே மருத்துவ மனை கட்டி முடிக்கப்பட்டு இயங்குகிறது. இது இவர்களின் கருணை உள்ளத்திற்கு நிதர்சனச் சாட்சி என்றால் மிகையல்ல.

தங்கள் நாடு இழந்து, தங்களின் விலை மதிப்பற்ற உடைமைகளைத் துறந்து இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்கள் தங்களது இடையறா உழைப் பால், நுண்ணறிவால், விவேகத்தால், பொறுமை யால், விடாமுயற்சியால் தங்களை உயர்த்திக் கொண்டு தம்மைச் சார்ந்தவர்களையும் தூக்கிப் பிடித்து, தாங்கள் வாழும் நாட்டையே தாய் நாடாகக் கருதி வாழ்வதும் எல்லோரும் இறை வனின் மக்களே என்று சொல்லுவதும் இவர்கள் வழி. இதனால் பார்சி சமூகம் உன்னதமான மேன்மைமிக்க சமூகம் என்பது உண்மைதான். ●

வாசகர் கடிதங்கள்

'ஓம் சக்தி' நிறுவனர் அருட்செல்வர் அவர்களின் 97–ஆம் பிறந்த நாளில் வள்ளலார், காந்தி மகான்களோடு அருட் செல்வரைப் போற்றி சொல்லி வழி பட்ட 'ஓம் சக்தி'யின் பக்தி, பாராட்டுக் குரியது!

– **தெ. முருகசாமி,** புதுச்சேரி.

'ஆன்மிகவாதிகளே ஒன்று சேருங் கள்' என்று 'சுரங்கம்' பகுதியில் வெளி யாகியிருந்த அருட்செல்வரின் எழுத்தில் எத்தனை அழுத்தம்! இன்றைய நிலைக் கும் பொருந்தும் அவருடைய எழுத்து!

– **சீத்தலைச்சாத்தன்,** திருப்பத்தூர்.

'ஆன்மிகவாதிகளே ஒன்று சேருங் கள்' என்று 25 ஆண்டுகளுக்கு முன்பே அருட்செல்வர் கூறிய சொற்கள் இன் னும் மெய்ப்பிப்பதாக உள்ளன.

– **உஷா முத்துராமன்,** திருநகர்.

'ஓம் சக்தி' மார்ச் – 2020 இதழில் வெளியாகியிருந்த பேரா. கோகுலாச் சாரியாரின் கட்டுரை அருமை. 'திராவிட வேத சாகரம்' என்ற தலைப்பே பிரதான மாக இருக்கையில், 'தமிழ் வேதம் செய்த மாறன்' என முழுமனதுடனேயே மொழியலாம்!

– **எஸ்.ஜி. இசட்கான்,** திருப்பூர்.

சொ.சொ.மீ.–யின் கட்டுரையும், மரபின் மைந்தன் கட்டுரையும் இரட்டை மாட்டு வண்டிபோல் அருமையாகப் பயணிக்கின்றன. கட்டுரையாளர் களுக்குப் பாராட்டுகள்!

– **அ. முரளீதரன்,** மதுரை.

சிரிப்பு, முகத்தை வசீகரப்படுத்தும், மாரடைப்பைக்கூடக் குணப்படுத்தச் செய்யும் என்று 'வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்' கட்டுரையில் அருமையாகச் சொல்லியிருந்தார் வெ. ஜெயலட்சுமி.

– **இராம. கண்ணன்,** திருநெல்வேலி.

திருச்செங்கோடு திருமிகு. டி.எம். காளியண்ணகவுண்டர் போன்று பலரை இளைய தலைமுறையினர் அறியச் செய்திகள் வெளியிட வேண்டும். அவ ரின் செயல் பாராட்டுக்குரிய சமூகத் தொண்டு!

– **வா. ரா. கிருஷ்ணன்,** சிதம்பரம்.

செண்பகத்தால் உயிர்க்கொடை யாக வழங்கப்பட்ட குழந்தைக்கு அப்பா வாகிற குமார், தன் தவறுக்குப் பிராயச் சித்தம் தேடிக் கொள்கிற விமலாரமணி யின் 'உயில் கொடை' சிறுகதை அருமை யாக இருந்தது.

– **மு. இராமு,** திருச்சி.

திருமேனி நாகராசன் எழுதியுள்ள "முதல் அந்தாதியில் திருக்குறள்" கட்டுரை அனைவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய அற்புதத் தகவல்.

– **அரிமழம் ப. செல்லப்பா,** சென்னை.

'முகமூடிகள்' சிறுகதையில் ஏர் வாடியாரின் நிறைவு வரியான 'முகம் மறைக்கும் தேவதைகளுக்கான உண்மை யின் உறக்கம் உண்டு' என்ற முத்திரைக் கருத்து, அருமை.

– **தஞ்சை கந்தமாறன்,** சென்னை.

டாக்டர் வி.ஜி. மோகன்பிரசாத் அவர்களின் உடல் எடை குறித்தான மருத்துவக் கட்டுரை, வாசகர்களுக்குப் பயனளிக்கும் கட்டுரை.

– **ஏ. பாஸ்கர்,** சேலம்.

'அடுத்த பத்தாண்டில் உங்கள் வளர்ச்சிக்கு நீங்கள் தயாரா?' எனும் கட்டுரை, வாழ்க்கைப் பாதையில் குறுக்கிடும் தடைகளை உடைத்தெறிந்து விட்டு நடையைத் தொடரும் நல்ல வழி களைக் கூறுகிறது.

– **இரா. கல்யாணசுந்தரம்,** மதுரை.

அருட்செல்வரின் 97–ஆவது பிறந்த நாளைப் போற்றும் வகையில் வள்ள லார், காந்தி, படங்களுடன் அருட்செல் வரின் படத்தை 'ஓம் சக்தி' மார்ச் மாத இதழ் முகப்பில் வெளியிட்டது சிறப்பு. ஓவியர் ம.செ.–வுக்குப் பாராட்டுகள்!

– **லிங்கம் சின்னசாமி,** தாராபுரம்.

நல்வாழ்த்துக்களுடன்!



ஜோதி ஜோதி ஜோதி சுயஞ்
ஜோதி ஜோதி ஜோதி பரஞ்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

ஏ.பி.டி. இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்


சக்தி பைனான்ஸ் பில்டிங், டாக்டர் நஞ்சப்பா ரோடு,
கோயமுத்தூர் – 641 018 போன் : 0422-2233982, 2233983



உயிருக்கு ஊதியம் ஒப்பற்ற தொண்டே! 2

“போர் முனையிலே முன்னணியில் நிற்பேன். துண்டிக்கப்பட்டு, விழுந்த என் சிரசைப் பல்லக்கில் வைத்துக் கொணர்வார்கள். செல்லம்மா, அப்போது ஜனங்கள் உனக்குச் சேனைத் தலைவனுடைய மனைவிக்குரிய மரியாதையைச் செய்வார்கள்” என்று தன் காதல் மனைவியின்முன் வீரசபதமிட்டு ஏனைய தலைவர்களைப் போல், போராட்டக் களத்திலோ, சிறைச்சாலையிலோ தன்னை முன்னிறுத்திக் கொள்ளக் கிளம்பிய பாரதியை, சென்னையிலிருந்து புதுச்சேரிக்கு அனுப்பி விட்டனர், புரட்சிகர இயக்கத்தின் தோழர்கள்.

“விடுதலைப் போராட்ட வீரர்களெல்லாம் சிறையுட்புகுந்துவிட்டால், வெளியில் இருந்து வேலை செய்ய ஆள் வேண்டாமா?” என்பது அவர்களின் வாதம். அதனை ஏற்றுத் தலைமறைவாகிப் புதுவையை நோக்கிப் படகுப்பயணம் மேற்கொண்டு, பாரதி வருமுன் வந்துவிட்டது, அவர்தம் இந்தியா பத்திரிகை (1908).



எட்டயபுரத்தில் பிறந்து, திருநெல்வேலியில் பயின்று, கடைசிக் காலத்தில் போக வேண்டிய காசிக்கு இளமைக் காலத்திலேயே விதி துரத்தச் சென்று, முற்றிலும் புதிய புரட்சி வீரராகி, மீளவும் எட்டயபுரம் வந்து, சில காலம் இருந்து, பின்னர் மதுரை சேதுபதி பள்ளியில் தமிழாசானாக, 102 நாட்கள் பணியாற்றி விட்டுச் சென்னைக்கு இதழியல் பணியேற்று வந்த காலத்தில் (1904–ஆம் ஆண்டு) பாரதிக்கு வயது, 22.

கிருங்கை சேதுபதி

வாழ்தற்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் எட்டயபுரத்து அரண்மனையில் இருந்து கிடைக்க உத்தரவாதம் இருக்கும்போது, ஏன் இந்த அலைபடு வாழ்வை அவர் மேற்கொள்ள வேண்டியிருந்தது? சென்னைக்கு, இதழாசிரியராக அவர் வந்தமைக்கு ஏது காரணம்?

“பாரதியார் பத்திரிகைத் தொழிலை மேற்கொண்டது, ஊதியத்தின் பொருட்டா? அல்லது அவரது தேசபக்தி ஊக்கம் காரணமா? இதைப் பற்றி எனக்குச் சிறிதளவு சந்தேகம் இருந்தது. 1904–ஆம் வருஷத்திலிருந்து பாரதியாருக்கு நண்பராயிருந்து வந்த எஸ். துரைசாமி அய்யர் அவர்களிடம் கேட்டேன். அவர் சொன்னதாவது: நமது நாட்டிலே பொதுவாகத் தேசபக்தி உணர்ச்சி தோன்றியது வங்காளப் பிரிவினையால்தான். அக்காலத்தில் விபின் சந்திரபாலரின் எழுத்தும், பிரசங்கமும் நம்மவர்களைப் பெரிதும் கலக்கி வந்தன. இது 1905–ஆம் வருஷத்துக்குப் பின்னர்.

ஆனால், பாரதியோ, 1904 ஆம் வருஷத்திலேயே எனக்கு அரசியலில் தீவிர ஊக்கமும் உற்சாகமும் வரும்படி செய்தான். பாரதியின் தேசபக்தி, கடன் வாங்கிய சரக்கல்ல. அது அவனுடைய சொந்தச் சொத்து. தமிழ்நாடுதான் பாரதி.

அப்படித்தான் எனக்குச் சொல்லத் தெரியும். இதைக் காட்டிலும் அதிகமாக வேறு யாரால் சொல்ல முடியும்?” என்று அந்த அத்தியாயத்தை முடிக்கிறார் வ.ரா. (வ.ரா., மகாகவி பாரதியார், ப.30).

‘தொண்டலால் உயிர்க்கு ஊதியம் இல்லை’ என்றார் அப்பர் பெருமான். அது அப்படியே பாரதியின் வாழ்வுக்கும் பொருந்திப் போயிற்று.

‘தன் வாழ்வினும் பெரிது தாயக வாழ்வு’ என்னும் வாழ்விக்கும் பெருங்குணமே, பாரதியின் தேசபக்திக்கான அடிநாதம்; அதுவே, அவருக்குத் தெய்வ பக்தியும் ஆனது; அதுதான், இதழாசிரியராகச் சென்னைக்கு வந்த பாரதியை, கவிஞராக, மொழிபெயர்ப்பாளராக, சொற்பொழிவாளராக, அமைப்பாளராக, அரசியல் கருத்தாளராக, களப்பணியாற்றும் கர்மவீரராகப் பன்முகப் பரிணாமம் கொண்டு, காலத்தைப் பின்னுக்குத் தள்ளிக் காரியங்கள் ஆற்றத் தூண்டியது.

சென்னைக்கு வந்தும்கூட, அவர் நெடுங்காலம் இருந்து செயல்பட முடிந்ததா? மொத்தம் நான்கு (1904 – 1908) ஆண்டுகள்கூட முற்றுப்பெறாத நிலையில் புதுச்சேரிக்குப் போக நேர்ந்தது; ஏன்? கைது செய்தாக வேண்டிய அளவிற்கு அவர் என்ன செய்தார்?

“இருபதாம் நூற்றாண்டில் முதல் இருபது ஆண்டுகளுக்குள் பாரதியின் அரசியல் வாழ்க்கைத் தொடங்கி, நிறைவுறுகின்றது. 39 ஆண்டுகளே வாழ்ந்த பாரதி, பொதுவாழ்வில் ஈடுபட்ட காலம் 16 ஆண்டுகள் (1905 – 1921) ஆகும். இதனுள்ளும் இயக்க அமைப்பாளராகவும் (Organiser), எழுத்தாளராகவும் பணியாற்றிய காலம் மூன்றாண்டுகள் (1905 – 1908)” என்று கணக்கிட்டுச் சொல்கிறார் கோ.கேசவன். (கோ. கேசவன், பாரதியும் அரசியலும், ப.181).

இந்த மூன்று ஆண்டுகளும் பாரதி வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டுகள்; தருமமிகு சென்னையில் பாரதி, அதிதீவிரமாக அரசியல்களத்தில் இயங்கிய ஆவேசக் காலங்கள். எழுதியும், பேசியும், பாடியும், இயக்கங்கள் அமைத்தும், ஊர்வலத்தை நடத்தியும், பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்தும் அவர் சோர்வின்றி ஆற்றிய அரும்பணிகள், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அசுரக் கண்களுக்குப் பேரெதிரியாக இவரை நிறுத்தின எனலாம்.


விபின் சந்திரபால்


திலகர்


வ.உ.சி

இவற்றுள் தலையாயது, வங்கப் பிரிவினைக்கு எதிராக 14.09.1905 அன்று சென்னைக் கடற்கரையில் நடந்த சுதேசிய மாணவர்கள் கூட்டம்.

அதற்கு, சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி.சுப்பிரமணிய ஐயர் தலைமை தாங்கினார். சுமார் 5000 பள்ளிப் பிள்ளைகள் கலந்துகொண்ட அந்தக் கூட்டத்திலேதான், : ‘வங்கமே வாழிய!’ என்னும் வாழ்த்துக் கவிதையை, பாரதி பாடி அரங்கேற்றினார்; மறுநாள், 15.09.1905 ‘சுதேச மித்திரன்’ இதழில், அதை அச்சேற்றினார்.

1905 செப்டம்பர் மாத ‘சக்கரவர்த்தினி’ இதழில், தாதாபாய் நௌரோஜியின் வீர வரலாற்றை எழுதிய பாரதி, புகழ்பெற்ற ‘வந்தே மாதரம்’ என்னும் பங்கிம் சந்திரரின் பாடலைத் தமிழாக்கி, உரிய விளக்கங்களுடன், சக்ரவர்த்தினி (1905 நவம்பர்) இதழில் வெளியிட்டார். வங்காளத்திற்கு மட்டுமே உரியது அப்பாடல்.

அக்காலத்து, வங்கப் பகுதி மக்களின் எண்ணிக்கையை மனக்கொண்டு, 7 கோடி மக்கள் என்று பாடிய அதன் எண்ணிக்கையை முப்பது கோடியாக்கி, அப்பாடலை, இந்தியத்

தாய்க்கு வந்தனம் தெரிவிப்ப தாக உயர்த்தினார்.

அதற்கு முன்னதாக, ‘மன்னும் இமயமலை எங்கள் மலையே’ என்று சொல்லித் தொடங்கும், ‘எங்கள் நாடு’ என்ற பாடலை இயற்றி, சுதேசமித்தி ரனில் வெளியிட்டார். இவைபோல், ஏனைய புலவர்களும் தேசியச் சிந்தனை யோடு பாடல்கள் இயற்றினால், வெளியிடவும் ஆர்வம்காட்டி, அதற் கான விண்ணப்பத்தையும் சுதேச மித்திரன் (13.02.1906) இதழில் வெளி யிட்டார். பெரிய அளவில் வரவு இல்லாத நிலையில் தானே களம் இறங்கிப் புதியன புனைந்தார்.



வ.ரா.

சுதேசமித்திரன் பணிக்குச் சென்று, மகளிர் இதழான, ‘சக்கரவர்த்தினி’ இத ழுக்கு ஆசிரியப் பொறுப்பேற்று, ‘இந்தியா’ இதழிலும் எழுதிவந்த பாரதியை, அரசியல் ரீதியாக ஈர்த்து வசப்படுத்தியவர் திலகர். அக்காலத்தில், மறைந்த தன் தாய் தந்தையர்க்குத் திதி கொடுப்பதை விடுத்து, மாவீரர் திலகரின் பிறந்த நாளைத் தன்வீட்டில் கொண்டாடியவர் பாரதி. 1906 திலகரின் பொன்விழா ஆண்டு. (இந்தக் காலக்கட்டத்தில் பாரதி திலகரை நேரில் கண்டதில்லை என்பதும் கவனத் தில் கொள்ள வேண்டிய ஒரு செய்தி).

“சென்னை லிங்கச்செட்டித் தெரு, மிஸ்டர் சி.சுப்பிரமணிய பாரதியார் வீட்டில் மேற்படி திருநாள் அன்றைய தினம் ஓர் பொதுக்கூட்டம் கூடிற்று. தேசபக்தியிலே உற்சாகம் தரக்கூடிய அரிய பாடல்கள் பாடப்பெற்றன. சமஸ் கிருத பாஷையிலே ஒரு பண்டிதர் உபந்சியாசித்தார். பாரத கண்டத்தின் வீர சக்தியாகிய ஸ்ரீ பவானிதேவியின் பூஜை நடத்தப் பெற்றது. இங்கிலீஷிலும், தமிழிலும் ஸ்ரீ திலகர் விஷயமாகவும், தேசபக்தியின் சிறப்பைப் பற்றியும் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. வந்தே மாதர கர்ச்சனை மிகவும் ஆனந்த மளிக்கத் தக்கதாக இருந்தது” என்று அக்காலத்திய ‘இந்தியா’ இதழ் (14.07. 1906,ப.4) பதிவிட்டிருக்கிறது. சுதேச மித்திரன் இதழும் இதனை விரிவுறச் செய்தியாக்கியிருக்கிறது.


“சென்னையில் திலக ருடைய ஜன்மதின உற்சவம் நன்கு நடைபெற்றது. அனேக வயோதிகர்களும், சர்க்கார் பென்ஷனர்களும், பாடசாலை வாலிபர்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீவீர துர்க்கையின் பூஜை நடந்தால் நாம் வர மாட்டோம் என்பதாகச் சிலர் முதலில் ஆக்ஷேபித்த போதிலும், பிறகு அவ்வித மான ஆராதனையின் உட்பொருளைத் தெரிந்து மிகவும் சந்தோஷத்துடன் வந்திருக்க உடன்பட்டார்கள். பைரன், ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிஞர்களின் தேசபக்திப் பாடல்கள் மிஸ்டர் ஹரிஹரய்யர் B.A., என்பவரால் மிகவும் உருக்கத்துடன் பாடப்பட்டன. பங்கிம் சந்திரர் அருளிச் செய்திருக்கும் வந்தே மாதரம் என்ற பெங்காளி கானமும் பாடி, அதன் பிறகு, ‘பரதகண்டத்து வீர பராசக்தியின் ஆவாஹனம்’ (Invocation to the Spirit of Indian Heroism) மிஸ்டர் சி.சுப்பிரமணிய பாரதியால் செய்யப் பெற்றது” (சுதேசமித்திரன், 12.07.1906, ப.12). இது நடந்தது பாரதி குடியிருந்த வாடகை வீட்டில்; அப்போது நாட்டின் நிலையும் அப்படித்தான் இருந்தது.

சொந்த நாட்டிலேயே அந்நியநாட் டில் இருக்கிற அவலத்திற்குரியவர் களாகத் தாம் இருப்பதை அறியாதவர் களாக மக்கள் இருந்தனர். அவர்களுக் குள் தேசியச் சிந்தனை கிளர்ந்தெழ, எழுத் தாயுதம் ஏந்திய பாரதி, நடப்பு வாழ்க் கைப் போராட்டத்திலும் குதித்தார்.

அக்காலத்தில், ஸ்காட்லாந்தைச் சேர்ந்த அர்பத்நட் குடும்பத்தினர் நிறுவிய ‘அர்பத்நட் கம்பெனி பாங்க்’ எனும் வங்கி, சென்னையிலும் கிளை கொண்டிருந்தது. பெருவணிகர்களும் சிறுவருமானம் உடையவர்களும் அதில் பணம் இட்டுவைத்திருந்தனர். திடீ ரென, அந்நிறுவனம் மூடப்பட்டது. அது தொடர்பான வாசகம் அக்கம் பெனி வாசலில் எழுதி ஒட்டப்பட் டிருந்தது.

“இதைப் பார்த்தவுடனே, ஜனங்கள் எல்லாம் இன்னது செய்வதென்று தெரி யாமல் திகைத்தார்கள். ஒரு க்ஷணத்திற் குள்ளே கதியற்றுப் போய்விட்ட வித வைகளும், கிழவர்களும் வயிற்றிலும்





வாயிலும் அடித்துக்கொண்டு அழுதார்கள். அதற்குள் கம்பெனி வாசலிலே நிறுத்தப்பட்டிருந்த குதிரைப் போலீசார் ஜனங்களைச் சவுக்கால் அடித்துத் துரத்தத் தொடங்கினார்கள். 'ஐயோ, வெள்ளைக்காரன் கையிலே பணத்தைக் கொட்டிக் கொடுத்துவிட்டுச் சவுக்கடியும் படவேண்டுமா, தெய்வமே' என்று ஜனங்கள் அலறிக் கொண்டு திரும்பினார்கள்" என்று இந்தியா இதழின் (27.10.1906) முதற்பக்கத்தில் செய்தியாக்கினார் பாரதி.

இதற்கு மாற்றாய், அவர் முன்வைத்த கருத்து, சுதேசிய வங்கிகள் தொடங்கும் முயற்சி; அதுவும் நடைமுறைக்கு வந்தது. 1906–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னையில், பாரதியும் அவர் நண்பர்களும் இணைந்து உருவாக்கிய அமைப்பு, 'பால பாரத சங்கம்.' தலைவர் திலகர் வழிநடக்கும் தொண்டர்தம் அமைப்பான இது, காங்கிரஸ் மகாசபைக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிற பணியையும் மேற்கொண்டிருந்தது.

இச்சங்கத்தின் துணைகொண்டு, 'பஞ்சாபி' எனும் பத்திரிகை பஞ்சாப் மாநிலப் புதிய கட்சி சார்பான செய்திகளை வெளியிட்டமைக்காக அதன் ஆசிரியர் மற்றும் உரிமையாளர் மீது ஆங்கில அரசு வழக்குத் தொடர்ந்தமையை எதிர்த்துக் கண்டனம் தெரிவித்துச் சென்னையில் பொதுக்கூட்டங்களை நடத்தினார், பாரதி. மேலும், சுதேசிய எழுச்சிக்கான பல கூட்டங்களை ஏற்பாடு செய்தும், கலந்து கொண்டு உரையாற்றியும் இளைய பாரதத்தை ஈர்த்து வசப்படுத்தினார்.

பயிலும் இளைஞர்களை வலுவுள்ளவர்களாக ஆக்கவும் விடுதலைக்கு வேண்டிய வீரர் படையினைக் கட்டமைக்கவும் உருவாக்கப்பட்ட அமைப்பு, 'திருவல்லிக்கேணி விளையாட்டுக் கழகம்'. இருட்டும் வரைக்கும் கடற்கரையில் விளையாடிவிட்டுப் பின்னர் பாரதியிடம் அரசியல் பாடம் பெறுவதை, அக்காலத்துக் கல்லூரி மாணவர்களின் கால அட்டவணையாக ஆக்கி வளர்த்தது இக்கழகம்.

"சென்னையில், 'மகாஜன சபை' என்று ஒன்று இருந்தது. அக்காலத்தில் அதன் அங்கத்தினர்கள் சர்க்கார் பக்தர்கள்; உருப்படியான எந்த வேலையையும் செய்யத் துணிந்ததில்லை. எனவே, பாரதியார் 'சென்னை ஜன சங்கம்' என்று ஒன்றை ஸ்தாபிக்க முயன்றார். சங்கமும் ஸ்தாபிக்கப்பெற்றது. அது தோன்றி அழியும் வரையில், போலீஸார் அதன்மேல் கடைக்கண் பார்வை செலுத்துவதை நிறுத்துவதில்லை" என்கிறார் வ.ரா. (வ.ரா., மகாகவி பாரதியார், ப.41) அப்படியானால், அந்த அமைப்பு எத்துணை தீவிரமாகச் செயல்பட்டிருக்க வேண்டும்? அதனினும் தீவிரமாக வேலை செய்தவர் அல்லவா பாரதி.

மிதவாத அரசியலின் ஆமை வேகத்தைப் புறக்கணித்து, தீவிரவாத அரசியலின் மூலமாகத் தேசம் உய்ய வழிவகை செய்த பாரதி, எவரையும் தன் வசமாக்கித் தாய்நாட்டுத் தொண்டுபுரிய வைப்பதில் பெருஞ்சமர்த்தர். அதனால்தான் தன் காலத்தில் வங்கத்திற்கு நிகராகத் தமிழகத்தைத் தேசபக்தத் திருப்பணித் தொண்டர்களின் வாழிடமாக உயர்த்த முடிந்தது.


1906–ஆம் ஆண்டு, கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசின் 22–வது மகாநாட்டில் சென்னைப் பிரதிநிதியாகச் சென்று கலந்து கொண்ட பாரதி, 1907–ஆம் ஆண்டு, சூரத் காங்கிரஸ் மாநாட்டிற்கு, 30 பேர் கொண்ட ஒரு குழுவாகச் சென்று பங்கேற்றார். வ.உ.சி., சுரேந்திரநாத் ஆர்யா, சக்கரைச் செட்டியார் உள்ளிட்டோர் அடங்கிய அப்பயணக்குழுவினை ஏற்றிச்சென்ற ரயில்பெட்டியில், 'மதராஸ் தேசியவாதிகள்' (Madras Nationalists) என்றே எழுதப்பட்டிருந்தது.

இவ்விரு பயணங்களின்போதும், பாரதி தரிசித்த மகத்தான ஆளுமைகள் இருவர். அவர்களே, பாரதிக்குள் தேசபக்தக் கனலை எழுப்பித் தீவிரமாக இயங்கச் செய்த பெருமைக்குரியவர்கள்; அவர்களும் பாரதி போல் வாழ்விக்க வந்த வரலாற்று ஆளுமைகள்தாம்.

●

சிறுகதை

பொன்னீலன்



பொய் சொல்லாத மாணவன்

என் மாணவன் டேவிட்டை நினைக்கிறேன்... என்னைவிட நாலு அங்குல உயரம் அதிகம். சிவந்த மேனி. சற்றே வளைந்த முதுகு. நான் எதைச் சொன்னாலும் செய்யக் கூடியவன்.

நான் குரத்தியறை அரசு உயர் நிலைப் பள்ளியில் வேலைப் பார்த்துக் கொண்டிருந்த போது, மலையில் பெருமழை பெய்து ஆற்றில் பெரு வெள்ளம் வந்தது.

குரத்தியறை உயர்நிலைப் பள்ளி அசம்பு மலை அடிவாரத்தில் இருக்கிறது. மலையில் யானைகள் மேய்வது இங்கிருந்து பார்த்தாலே தெரியும். புலிகள் நிறைய உண்டு என்றும் சொல்லுவார்கள். நாலு பக்கம் நீல மலைகள். நடுவில் பசிய வயல்காடு. அற்புதமான ஊர் குரத்தியறை.

ஒரு பெருமழையின் போது, காட்டாற்றில் ஒரு மலைப்பாம்பு சிக்கிக் கொண்டது.

மலைப் பாம்பைத் தன்னந்தனியனாகப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தான் டேவிட். பாம்பு பத்துப் பனிரெண்டு அடி நீளம் இருக்கும்.

பாம்பை அவன் கொண்டு வந்ததும் மற்ற சில மாணவர்களுடன் அதன் வாய் வழியாக பிப்பெற்றில் பாமலின் திரவத்தை நிறைத்து ஏற்றினோம்.



"வத்திப்போன எங்க பெரியகுளத்துல நேத்து எல்லாரும் மீன் பிடிச்சிக்கிட்டு இருந்தாவளா, நானும் போயிட்டேன்."

பாம்பும் சிறிது நேரத்தில் செத்துப் போயிற்று.

பாம்பை ஒரு பெரிய கண்ணாடித் தொட்டியில் பாமலின் திரவத்தில் பாதுகாத்தோம். எங்கள் வகுப்பறையே இம்மாதிரியான பல உயிரினங்கள் நிறைந்த இடமாக அமைந்தது.

எங்கள் வகுப்பறையில் ஒரு சட்டம் இயற்றி நாங்கள் பாதுகாத்தோம். வகுப்பறையில் நான்தான் ஜனாதிபதி. வகுப்பு மாணவர் தலைவன்தான் முதலமைச்சர். மாணவர்கள் எந்தக் கட்சியில் வேண்டுமானாலும் இருக்கலாம். எல்லாம் பெரும்பான்மையின் முடிவுப்படிதான் நடக்கும்.

மாணவர்கள் வகுப்புக்குப் பிந்தி வரக்கூடாது. பிந்தி வந்தால் தந்தை அல்லது தாயாரின் கடிதத்துடன்தான் வரவேண்டும். இல்லை என்றால் வகுப்பறையில் அவன்

எழுப்பி விடப்படுவான். மாணவர்கள் விசாரணை செய்வார்கள். உரிய தண்டனை அளிப்பார்கள். அதை நிறைவேற்றுவது வகுப்பாசிரியர் பொறுப்பு.

ஒருநாள் டேவிட் வகுப்புக்கு வரவில்லை. உரிய கடிதமும் அனுப்பவில்லை.

மறுநாள் வகுப்புக்கு அவன் வந்தபோது, தன் தாயாரையும் அழைத்து வந்திருந்தான். வாசலில் தாயாருடன் நின்று கொண்டிருந்த அவனை நான் விசாரித்தேன்.

"சார், நேத்து கடுமையான வயித்துவலி. என்னால எந்திரிக்கவே முடியல்ல." என்று பரிதாபமாகச் சொன்னான் டேவிட்.

"உண்மையாம்மா...?" என்று தாயாரிடம் கேட்டேன்.

"ஆமாய்யா, பய வயத்த வலியில படாதபாடு பட்டுட்டான். நீங்க லட்டர் குடுக்காம வகுப்புல ஏத்தமாட்டிய இல்லியா, அதுதான் என்னயக் கூட்டிட்டு வந்தான்" என்னார் அந்த அம்மா.

திருமாங்கல்ய சரடு

திருமாங்கல்ய சரடு, நவ இழைகள் கொண்டது. வாழ்க்கையில் உள்ளதை உள்ளபடிப் புரிந்து கொள்ளுதல், மேன்மை, தூய்மை, ஆற்றல், தெய்வீககுணம், உத்தம மான குணங்கள், விவேகம், தன் னடக்கம், தொண்டு ஆகிய ஒன்பது குணங்களை ஒரு பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த பாங்கில் மாங்கல்யம் ஏற்பட்டுள்ளது என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

– **உ.இராமநாதன்,** நாகர்கோவில்

"சரி அம்மா, நீங்க வீட்டுக்குப் போங்க. லே டேவிட் கிளாசுக்குப் போ" என்றேன் நான்.

வகுப்பு முடிஞ்சதும் நான் வெளியே வந்தேன். தலையைச் சொறிஞ்சிக்கிட்டு என் பின்னாடியே வந்தான் டேவிட்.

"ஏண்டா என்ன விசயம்?" என்று கேட்டேன்.

"ஹி ஹி..." டேவிட் சிரிச்சான்.

"ஏண்டா சிரிக்கிற...?"

"சார், எங்க அம்மா சொன்னது பொய். எனக்கு வயத்த வலியும் இல்ல; ஒன்னும் இல்ல."

"பின்ன ஏன்டா வரல்ல?"

"வத்திப்போன எங்க பெரியகுளத்துல நேத்து எல்லாரும் மீன் பிடிச்சிக்கிட்டு இருந்தாவளா, நானும் போயிட்டேன்."

"நிறைய மீன் கிடைச்சா?"

"பெரிய பெரிய மீன் கிடைச்சி சார். சாப்பிடவே முடியலா சார். முக்காப் பங்கு மீனையும் கருவாடாக்கிட்டோம். இனி ஒரு மாசத்துக்கு மீன் பஞ்சம் இல்ல." அவன் முகத்தில பொங்குன சந்தோசத்துக்கு அளவே இல்ல.

"அப்போ நீ முதல்ல சொன்னது?"

"அது பொய் சார்."


"ஏன்ல சொன்னா?"

"இல்லாட்டா அடிப்பியளே."

"இப்போ ஏன் உண்மையச் சொன்னா?"

"சார்..." அவன் தலைய சொறிஞ்சான்.

"உங்ககிட்ட பொய் சொல்ல மனசு வரமாட்டேங்கு சார். உங்க முகத்தப் பார்த்தா, பொய் சொல்ல முடியல."



எனக்குச் சந்தோசம் தாங்க முடியல்ல. அவன வளச்சிப் பிடிச்சிக் கன்னத்துல ஒரு முத்தம் கொடுத்தேன். “நீதான்டா என் தம்பி.”

இப்போ டேவிட் எங்க இருக்கானோ? பதினஞ்சு வருசத்துக்கு முன்னால நாகர்கோவில்ல வச்சி ஒருக்கா அவனப் பார்த்தேன்.

என் டேவிட் ராஜா, நீ எங்க இருந்தாலும் பிள்ள குட்டிகளோட நல்லா இருப்பா. உன் நேர்மை உனக்கு எண்ணிக்கும் வெளிச்சம் தரும். ●


உலகளந்த பெருமாள்

காலோச்சியவனும் கோலோச்சியவளும்

வைஷ்ணவர்கள் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடும் போதெல்லாம் அடிமுதல் முடிவரையில் ஸ்ரீமந் நாராயணனின் திருவுருவத்தைத் தரிசிப்பது வழக்கம். ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதப் பெருமானின் கருவறையில் நுழைந்த திருப்பாணாழ்வார் முதன்முதலில் தரிசித்துப் போற்றிப் பாடியது எம்பெருமானுடைய திருவடியைத்தான்.

"... நீள் மதிளரங்கத்தம்மான் திருக்கமல பாதம் வந்து என் கண்ணில் உள்ளன ஒக்கின்றவே" என்று தமது பதிகத்தின் முதல் பாசுரத்திலேயே திருவடிகளின் பெருமையைப் பறைசாற்றுகிறார் திருப்பாணாழ்வார்.

திருமலையில் வேங்கடாசலபதி தன்னுடைய வலது திருக்கரத்தைக் கீழ் நோக்கி வைத்தபடி, பக்தர்கள் தஞ்சமடைய வேண்டியது தனது திருவடிகளையே என்று உணர்த்தும் விதமாக அருட்சேவை கொடுக்கின்றான்.

அண்டசராசரம் எனப்படும் அனைத்துலகங்களையும் படைத்து அவையனைத்துக்கும் பேரரசனாகக் கோலோச்சி வருபவன் எம்பெருமான். ஓச்சுதல் என்ற சொல்லுக்கு வீசுதல், உயர்த்துதல், பாய்ச்சுதல், செலுத்துதல் என்றெல்லாம் பல பொருள்கள் கூறப்படுகின்றன.


வேங்கடேசப் பெருமாள்

ஓர் அரசன் தனக்குரிய செங்கோலை வீசித் தன் எதிரிகளை விரட்டியும், அதனை உயர்த்திப் பிடித்துத் தனது ஆணைகளை நிறைவேற்றுவதும் ஆகிய காரணங்களால், "அவன் அரசாட்சி செய்தான்" என்பதைக் குறிக்கும் வித


சகடாசுர வதம்

எஸ். ஸ்ரீதுரை



மாகக் "கோலோச்சினான்" என்று கூறுவது மரபாக உள்ளது.

சாதாரண அரசன் தன் செங்கோலை ஓச்சி அரசாட்சி செய்யலாம். ஆனால், எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனோ, அனைத்துயிர்களுக்கும் மேம்பட்ட அரசனாயிற்றே. அவன் கோலை மட்டும் ஓச்சுவதில்லை. தருமத்தை நிலைநாட்டத் தன்னுடைய காலையும் ஓச்சுகின்றான்.

பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளையாகிய கோதை நாச்சியார், தான் சூடிக்களைந்த மாலையை எம்பெருமானுக்குச் சூட்டியும், திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழி என்னும் தனது திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களால் அவனை வசப்படுத்தியும் அவனை ஆட்டிப்படைத்துக் கோலோச்சிய காரணத்தால் ஆண்டாள் என்றே அழைக்கப்படுகின்றாள்.

எம்பெருமான் தன்னுடைய கிருஷ்ணாவதாரக் காலத்தில், நீளா தேவியின் அம்சமாக அவதரித்த நப்பின்னைப் பிராட்டியின் அழகிலும் அன்பிலும் கட்டுண்டு கிடந்தான். ஜீவாத்மாக்கள் அனைவரும் அவனுக்குக் கட்டுண்டு கிடக்க வேண்டியிருக்க, அவனோ தன்னுடைய பரத்துவத்தை மறந்து இவ்வாறு நப்பின்னைப் பிராட்டியிடம் கட்டுண்டிருப்பதைக் கண்ட ஆண்டாள், "நின் கோயில்நின்று இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய சீரிய சிங்காசனத்திருந்து யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள்", "உன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான் இன்று யாம் வந்தோம் இரங்கு", "ஆலின் இலையாய் அருள்", "உன் தன்னோடு உற்றோமே ஆவோம், உனக்கே நாம் ஆட்செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்று" என்றெல்லாம் கூறி அவனுடைய பரத்துவத்தை அவனுக்கே உணர்த்தினாள் என்று கூரத்தாழ்வானின் தவப்புதல்வராகிய பராசர பட்டர் "நீளா துங்க" என்று தொடங்கும் தமது சுலோகத்தில் வியந்து போற்றுகின்றார்.




இங்ஙனம், தனது காதலாலும், கவிதையாலும் எம்பெருமானின் திருவுள்ளத்தையே ஆண்டு அவனையே மணம் புரிந்துகொண்டு அவனுடனேயே ஐக்கியமாகிக் கோலோச்சிய ஆண்டாள், அவன் காலோச்சிய தருணங்கள் இரண்டினைத் தனது திருப்பாவையில் அழகாக விவரித்துக் கூறுகின்றாள்.

"புள்ளும் சிலம்பின காண்" என்று தொடங்கும் ஆறாவது திருப்பாவைப் பாசுரத்தில், தன்னைக் கொல்ல வந்த சகடாசுரனைக் குழந்தைக் கண்ணன் தனது அழகிய சிறிய காலால் உதைத்துச் சிதைத்து அழித்த நிகழ்வை "கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி" என்று குறிப்பிடுகின்றாள்.

வசுதேவர் – தேவகி தம்பதிகளுக்கு எட்டாவது குழந்தையாக அவதரித்து, ஆயர்பாடியில் உள்ள நந்தகோபர் – யசோதா தேவியினால் வளர்க்கப்பட்டு வரும் குழந்தைக் கண்ணனே தன்னை அழிக்கப் பிறந்தவன் என்று அறிந்த கம்சன், அக்குழந்தையைக் கொல்வதற்குப் பூதனை முதலான கொடியவர்களை வரிசையாக ஏவினான்.

அவ்வரிசையில், ஒரு மாட்டுவண்டியைப் போன்ற உருவத்தை எடுத்துக்கொண்டு ஆயர்பாடிக்கு வந்த சகடாசுரனின் நயவஞ்சகத்தை அறிந்துகொண்ட குழந்தைக் கண்ணன் தன் திருவடியினால் பலமாக உதைக்க,



ரங்கநாதர்



பராசரபட்டர்

அவ்வண்டி தன் கட்டுக்குலைந்து தூள் தூளாகச் சிதற, அவ்வண்டியின் உரு வெடுத்த சகடாசுரனும் நொடிப் பொழுதில் உயிர்விடுகிறான்.

அதே திருப்பாவையின் மூன்றாவது பாசுரத்தின் முதல் அடியிலேயே "ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி" என்று பாடியதன் மூலம் பகவான் ஸ்ரீமந்நாரா யணன் காலோச்சிய இன்னொரு நிகழ் வைப் பதிவு செய்கிறாள் ஸ்ரீ ஆண்டாள்.

பக்தப் பிரகலாதனின் கொள்ளுப் பேரனாகிய மகாபலிச் சக்கரவர்த்தி சிறந்த விஷ்ணு பக்தன். தன் குடி மக்களை நலமுடன் காத்துப்புரந்த அப் பேரரசன், அந்தக் கால முறைப்படி அவ்வப்போது அசுவமேத யாகங்களைச் செய்து வந்தான்.

நூறு அசுவமேத யாகங்களை விக் கினங்கள் ஏதுமின்றிச் செய்து முடிப்பவ னுக்கு இந்திரபதவி கிட்டும் என்பது விதி. இந்நிலையில், மகாபலியினால் தனது இந்திரபதவி பறிபோய்விடுமோ என்று பயந்த தேவேந்திரன் பெரு மாளைச் சரணடைந்தான். தன்னைச் சரணடைந்தவனின் இந்திரபதவியைக் காப்பாற்றுவதற்காக, குள்ள உருவம் கொண்ட வாமன மூர்த்தியாக மகாபலியிடம் சென்றார் பெருமாள்.

அசுவமேத யாகம் செய்பவர் யாக முடிவில் தன்னிடம் யார் எதைக் கேட் டாலும் அதைத் தானம் செய்துவிட வேண்டும். அவ்விதம், மகாபலியிடம் சென்று, தம்முடைய காலால் அளக்கும் விதமாக மூன்று அடி நிலம் வேண்டும் என்று யாசித்த பெருமாள், பிறகு தமது உருவத்தைப் பெருக்கிக் கொண்டு, உலக ளந்தபெருமாளாக ஓங்கி உயர்ந்தார்.

இவ்வுலகில், தமக்கொரு தாழ்வு ஏற்பட்டாலும், அதனை ஏற்றுக் கொண்டு, தம்மை அண்டிச் சரண டைந்தவர்களைக் காப்பாற்றுவதே உத்தமர்களின் இலக்கணம் ஆகும். அந் நெறியில், பெருமாள் தம்மைச் சரண டைந்த தேவேந்திரனை ரட்சிப்பதற்காக, மகாபலியிடம் சென்று யாசகம் கேட் கும் அளவிற்குத் தம்மையே தாழ்த்திக் கொள்ளுகின்றார்.

அதேசமயம், தேவேந்திரனுக்காக, சிறந்த பக்தனும் நல்லரசனுமாகிய மகா பலிச் சக்கரவர்த்தியை அழிக்காமல், அவ னது தலையின் மீது தமது திரு வடியை வைத்துப் புனிதமும் பெருமை யும் அளித்து, அவனைப் பாதாள உல கின் அரசனாக்கினார்.


இவ்விதம் தேவேந்திரன், மகாபலிச் சக்கரவர்த்தி இருவருக்கும் உயர்வை அளிப்பதற்காக யாசகம் கேட்கவும் துணிந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாரா யணன் "ஓங்கி உலகளந்த உத்தமன்" ஆகிறார்.

கள்ளச்சகடத்தைக் காலோச்சி அழித்ததன் மூலம், "துஷ்டர்களை அழிப்பேன்" என்றும், ஓங்கி உலகளந்து தேவேந்திரன், மகாபலி இருவரையும் வாழ்வித்த காரணத்தினால், "நல்லோ ரைக் காப்பேன்" என்றும் மகாபாரத யுத்தத் தொடக்கத்தில் தான் அருளிய பகவத்கீதையில் அளித்த உறுதி மொழியை அதற்கும் முன்னதாகவே காலோச்சுதல் மூலம் நிறைவேற்றி நிரூபித்தார் பகவான்.

அவ்விரு நிகழ்வுகளையும், தலா மூன்றே வார்த்தைகளைக் கொண்டு ரத்தினச்சுருக்கமாக, "கள்ளச்சகடம் கலக்கழியக் காலோச்சி" என்றும், "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்றும் சுருங்கக் கூறி விளங்கும் ஆண்டாளின் கவிதைத் திறன் என்றென்றும் நம் மனங்களில் கோலோச்சும் என்பதில் ஐயமில்லை. ●



நீதான்!



என் கண்ணில் கனல்விரியும்
கவிதை நீ!
என் நெஞ்சில் நிறைந்திருக்கும்
தெய்வம் நீ!
என் ஜென்ம விரோதியும்
நீதான்!

என்னோடு மணல்வீடு கட்டி விளையாடும்
தோழி நீ!
என்னைப் பராமரிக்கும்
தாய் நீ!
வசவுகளால் என்னை வறுத்தெடுக்கும்
பகையாளியும் நீதான்!

உலக ஞானத்தை எனக்குப் போதிக்கும்
ஞானகுரு நீ!
உள்ளத்தை மோகத்தில் ஆழ்த்தும்
ராதை நீ!
உற்றுப் பார்த்துப் பிழைகண்டு கடியும்
மேலதிகாரியும் நீதான்!

என் அன்பு மனைவியே!
வெயிலும் மழையுமாய்
ஏன் என்னைத் தாக்குகின்றாய்!

கவிஞர் ஜெ. கமலநாதன்







கோவையில்
தமிழ்மொழி காக்க உண்ணாநிலைப் போராட்டம்

தமிழைக் காக்கக் கோவையில் பல்வேறு தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து, "தமிழ் மொழிக் காப்புக் கூட்டியக்கம்" என்ற அமைப்பின் சார்பில் தமிழ் மொழி காப்பதற்காகப் பல கோரிக்கைகளை முன்வைத்து சென்ற 7.3.2020 சனிக்கிழமையன்று கோவையில் ஒருநாள் உண்ணாநிலைப் போராட்டம் நடைபெற்றது. இதில் தமிழார்வலர்கள், தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தோர் ஏறத்தாழ 750 பேர் கலந்து கொண்டனர்.

உண்ணாநிலைப் போராட்டம், "தமிழ் வழிக் கல்வி, தமிழ் ஆட்சிமொழி, கோவில்களில் தமிழில் குடமுழுக்குகள், வழிபாடுகள், வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகைகள், குழந்தைகளுக்குத் தமிழ்ப் பெயர்கள், தமிழ்வழிக் கல்வி கற்றவர்களுக்கு அரசுப் பணிகளில் 80 விழுக்காடு, தமிழ்மொழி ஆணையம் அமைத்தல் ஆகியவற்றைத் தமிழக அரசு நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்டது.

பேரூராதீனம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், சிரவை ஆதீனம் தவத்திரு இராமானந்த குமரகுருபர அடிகளார், புலவர் கா.ச. அப்பாவு, கவிஞர் புவியரசு, மருத்துவர் கோபி, திரைப்பட இயக்குநர் கவுதமன், கவிஞர் சிற்பி, சிந்தனைக் கவிஞர் டாக்டர் கவிதாசன் பா.ஜ.க. மாநிலச் செயலாளர் வானதி சீனிவாசன், இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத், புலவர் பூ.அ. இரவீந்திரன், விசயசண்முகம், வழக்குரைஞர் சிவகாமித்தமிழன், துணைத்தலைவர் ப.பா. ரமணி, பேராசிரியர் சு. துரை, தமிழாசிரியர் கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

– ஆர்.வி.

ஓம்சக்தி ஓவியருக்கு கேரள முதல்வர் பாராட்டு

ஓம்சக்தி ஓவியர். க. சண்முகம் அவர்களின் கருத்துமிக்க ஓவியங்களைப் பார்த்து மகிழ்ந்த கேரள முதல்வர் மாண்புமிகு. பினராயி விஜயன் அவர்கள் பாராட்டிய வாழ்த்துச் செய்தி.











GOVERNMENT OF KERALA
Pinarayi Vijayan
CHIEF MINISTER

No. CC 28 / 2020/CMO — 14 January, 2020

Dear Shri Shanmugham,

Thank you for your letter dated 21.12.2019.

It is understood that you have made your creative works a media for political conversation. You have touched all key aspects of the new world–war, starvation and freedom.

Wish you all the best.

Pinarayi Vijayan



அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத்தில் அருட்செல்வர் அறக்கட்டளைச் சொற்பொழிவு



மேடையில் துணைவேந்தர் டாக்டர் பிரேமாவதி, 'ஓம் சக்தி' இணையாசிரியர் திரு. பெ. சிதம்பரநாதன், மேனாள் வேந்தர் டாக்டர் க. குழந்தைவேலு அண்ணா, நிர்வாக அறங்காவலர் டாக்டர் தி.ச.க. மீனாட்சிசுந்தரம், பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் கௌசல்யா ஆகியோர்.

கோவை அவிநாசிலிங்கம் நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தில் அருட்செல்வரின் கொடையால் உருவான அறக்கட்டளைச் சொற்பொழிவில் 'ஓம் சக்தி' இணையாசிரியர் திரு. பெ. சிதம்பரநாதன் ஆற்றிய 'அருட்பிரகாசரும் அருட்செல்வரும்' பற்றிய உரை *4.3.2020* அன்று நிகழ்த்தப்பட்டது.

– *ந.நி.*



மனிதநேயம் காப்போம்!

கவிஞர் பேரூர் கி. இரவி

கண் இருந்தும் குருடராய்
கனிவு இருந்தும் கொடியராய்
காசு இருந்தும் கருமியாய்
காலமெல்லாம் வாழ்ந்து என்ன பயன்?

அடுத்தவர் துன்பத்தை, அயலாரின் நஷ்டத்தை
அன்போடு பகிர்ந்து கொள்ளாது
அன்னையை முதியோர் இல்லத்தில்
அடகு வைக்கும் அற்பனாய்
சாதிக்கப் போவது என்ன?

விபத்தில் அடிப்பட்டவரை விரைந்து
காப்பாற்ற மனமின்றி வீராப்பு
நடைபோட்டுப் போகும் நீயும் ஒரு நாள்
வீதியில் கேட்பாரற்றுக் கிடக்க நேரிடலாம்
விதி உன் வாழ்விலும் விளையாடலாம்!

மகனாகப் பிறந்த நீ மனிதனாக வேண்டாமா?
மற்றவரை நேசித்து மதித்து நடக்க வேண்டாமா?

வாடிய பயிரைக் கண்டு வாழாமல் விட்டாலும்
வாழும் மனிதருக்கு வழி காட்டியாய் இரு!

மனித நேயத்தை மல்லிகைப் பந்தலாய்
மனதில் பதியம் போட்டால்
மகத்தான உலகம் உன்னது!

மகுடம் சூட மகிழ்ச்சியுடன் அழைக்கும்
மனிதா! உன் இதயத்தில்
மனித நேயத்தை விளக்கேற்றி
மற்றவரின் இருளை மனதார அகற்றப் பாடுபடு!



LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர்,
வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக
பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.
Easy Finance Options BAJAJ Finance
Exchange offer
Gift Coupons Available
*Free gift with every purchase
*Free delivery with in city Limits
Open on Sundays
வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!
NM
*For purchase above RS.8000/- condition apply
LG
SAMSUNG
SONY
PHILIPS
VIDEOCON
ONIDA
Godrej
Whirlpool
SIEMENS
IFB
Prestige
ELGI ULTRA
Preethi
V-GUARD
BOSCH
micromax
nothing like anything
VOLTAS LIMITED
Butterfly
TATA Sky
Crompton Greaves
USHA
HAVELLS
BPL EMERGENCY LIGHT
Preethi INDUCTION COOK TOP
EUREKA FORBES
Your friend for life
CASCADE
VENUS WATER HEATER
நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2018-20

Date of Publication
28.3.2020

Regd.No.CB/016/2018-20
OM SAKTHI - APRIL - 2020